Registered at the G. P. O. as a Newspaper

விலை சதம் 20

உங்களுக்குத் தேவையான எல்லாவித
சாய்ப்புச் சாமான்களுக்கும்,
சூட்கேஸ், சப்பாத்து வகைகளுக்கும்


கணேசன் ஸ்ரோர்ஸ்
78, கே. கே. எஸ். றோட், யாழ்ப்பாணம்.

# ஈழநாடு

தேசிய வார இதழ்

மலர் 1. யாழ்ப்பாணம், விகாரி, ஆவணி 20- ஆம் நாள். ரபியுலவல் பிறை 1 (5-9-59) சனிக்கிழமை இதழ் 31.





# இந்தியா - பாகிஸ்தான் புதிய நட்புறவு சகாப்தம் ஆரம்பமாகிறது

## சீன எல்லை "ஊசி குத்தல்கள்" இனி சீக்கிரத்தில் நின்றுவிடலாம்

### பழைய கசப்புக்களை மறந்து மன்னிக்கவேண்டுகிறார் பாகிஸ்தான் தலைவர்

### நேரு - அயூப்கான், சரித்திர முக்கியம் வாய்ந்த சந்திப்பு

— நமது அரசியல் நிருபர் —

நடப்பதெல்லாம் நன்மைக்கே என்பார்கள். இந்திய எல்லையில் புது சீனம் தாக்கியதும் கூட ஒரு நன்மைக்குத்தான். அப்படித்தாக்காவிடில், புதுடில்லியிலே இந்தியப் பிரதமர் நேருவும், பாகிஸ்தான் ஜனாதிபதி அயூப்கானும் சந்தித்துப் பேசி, இரு நாடுகளுக்கும் புதிய நட்புறவு சகாப்தம் ஆரம்பமாகி இருக்க முடியுமா? இதற்காகப் புது சீனத்துக்கு நாம் "தாங்க்ஸ்" கூறவும் செய்யலாம்.

"இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையேயுள்ள எல்லாப் பிரச்சினைகளையும், பரஸ்பர நன்மையைக்கருதி, நீதி, நேர்மை, நட்புணர்ச்சி, ஒத்துழைப்பு, அண்டை அபிமானம் இவற்றுக்கிணங்க தீர்த்துக் கொள்ள வேண்டும்" என்று இரு தலைவர்களும் சேர்ந்து கூட்டாக அறிக்கை வெளியிட்டதைக்கண்டு இரு தேசங்களையும் சேர்ந்த 50 கோடி மக்கள் மட்டு மன்று, இலங்கை முன்னிட்டுப் பல வெளி நாட்டு மக்களும் மகிழ்ச்சியுடன் வரவேற்பார்கள்.

### இரு சகோதரர்கள்


ஒரு தாயின் வயிற்றில் பிறந்த இரு சகோதரர்கள் பாகப் பிரிவினையாகி 12 வருஷ காலம் எலியும், பூனையுமாக இருந்து, பின்பு மீண்டும் நண்பர்களானால் எப்படியோ அவ்விதமே இவ்விரு தலைவர்களின் சந்திப்பும்.

ஜெனரல் அயூப்கான், ஓர் அரசியல்வாதியல்ல. தேர்தல் விசாரங்கள் அவருக்கு இல்லை. இராணுவ வீரர் - சர்வாதிகாரி. ஆகவே அவருக்கு முன் இருந்த பாகிஸ்தான் பிரதமர்களைவிட, அவர் இந்தியாவுடன் உறுதியான ஓர் ஏற்பாடு செய்து கொள்ள முடியும்.

(2ஆம் பக்கம் பார்க்க)

### இந்திய இராணுவம்பற்றி நேருவின் கூற்று

இந்திய இராணுவத்தில் ஏற்பட்டுள்ள சிக்கல்பற்றி இந்திய லோகசபையில் பிரதமர் நேரு பேசுகையில், பாதுகாப்புப்பகுதி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் ஆதாரமற்றவை யென்றும், பதவி உயர்வில் பாகுபாடு காட்டப்படவில்லை யென்றும் திட்டவட்டமாகக் கூறியிருக்கிறார். பாதுகாப்புப்பகுதியின் பொறுப்பையேற்றுள்ள மந்திரி கிருஷ்ண மேனன் மீதும். இராணுவத் தலைவர் ஜெனரல் திம்மையா மீதும் தமக்குள்ள நம்பிக்கையையும், அவர்கள் நாட்டுக்குச் செய்துவரும் மகத்தான சேவைகளைப்பற்றியும் பிரதமர் நேரு ஐயந்திரிபற எடுத்துரைத்திருக்கிறார். அவருடைய கூற்றை லோகசபை அங்கத்தவர்கள் கரகோஷத்துடன் ஆதரித்தனர்.




Wolseley Pumps

"வூல்ஸிலி" பம்புகள்

தோட்டக்காரர்களினால் பாராட்டப்படுகின்றன.

நீங்கள் நீர் இறைக்கும் இயந்திரம் வாங்க எண்ணினால் வூல்ஸிலியை நம்பி வாங்குங்கள்.

எல்லா உப-பாகங்களும் எப்பொழுதும் கிடைக்கும்.

ஏகவிநியோகஸ்தர்கள்:

ஓட்டோஸ் லிமிட்டெட்

ஆஸ்பத்திரி வீதி, : : யாழ்ப்பாணம்.
போன்: 496
தந்தி: "ஓட்டோஸ்" யாழ்ப்பாணம்.

# இலங்கையருக்கு இந்தியா காட்டியுள்ள புதிய 'விஸா' சலுகை: இலங்கை இனியும் தாராளமனம் காட்டுமா?

— நமது கொழும்பு நிருபர் —

சென்ற திங்களன்று ஆரம்பமான தபால் வேலைநிறுத்தம் வியாழனன்று முடிந்ததைக் கேட்டு, பொதுமக்கள் பெரிதும் ஆறுதலடைந்தனர். இதுவும் பெரிதாகக் கிளம்பிவிடுமோ என்று அஞ்சப்பட்டது.

ஆமத் என்ற ஒரு தபால் 'ஸார்டிங்' அதிகாரி ஒழுங்கீனமாக நடந்ததாகக் குற்றம் சாட்டப்பட்டார். விசாரணை 6மாதம் நடந்தது. சென்ற வாரம் திடீரென அவர் வேலைநீக்கம் செய்யப்பட்டார். இதை ஆட்சேபித்தே யூனியன்கள் வேலைநிறுத்த நடவடிக்கை எடுத்தன. மூன்று நாட்களில் 30 லட்சம் தபால்களுக்கு மேல் பட்டுவாடா செய்யப்படாமல் குவிந்துவிட்டன.

ஒரு சிப்பந்தி ஒழுங்கீனமாக நடந்தால் அவர் மீது விசாரணை நடாத்தி தக்க நடவடிக்கை எடுக்க சட்டப்படி இலாகாவுக்கு அதிகாரமுண்டென்றும், இத்தீர்ப்பில் ஆட்சேபம் இருப்பின் பப்ளிக் சர்விஸ் கமிஷனுக்கு அப்பீல் செய்து கொள்வதே முறை என்றும், இது தொழிற் சங்க விஷயமல்ல வென்றும் "டெயிலி நியூஸ்" பத்திரிகை எழுதி, இதற்கு "பொறுப்பற்ற வேலை நிறுத்தம்" என்று மகுடமிட்டுள்ளது. ஆனால் யூனியனே இவ்வித கிளர்ச்சி செய்யாவிடில் கேள்வி முறையே இல்லாமல் போயிருக்குமென்று கருதுகிறது.

பப்ளிக் சர்விஸ் கமிஷன் தாமதமின்றி ஒரு தீர்ப்பளிக்குமென்று பிரதமர் உறுதி கூறியதன் மீது, தபால் ஊழியர் வேலைக்குத் திரும்பியுள்ளனர். அப்பீலில் தண்டனை குறைக்கப் படுமென்றே எதிர்பார்க்கப் படுகிறது.

ஆனால் இந்த அப்பீல் வசதி கூட தனிப்பட்ட வர்த்தக ஸ்தாபனங்களிலும், தோட்டங்களிலும் வேலை செய்யும் சிப்பந்திகளுக்கு இல்லை. அதனால் அந்த வேலைநிறுத்தங்கள் அதிகரிக்கின்றன.

### ஒருவருஷ "விஸா"

இலங்கையருக்கு இந்தியாவில் ஒரு வருஷகாலம் தங்கியிருக்க 'விஸா' வசதிகளை அளிக்க, இந்திய தூதுவகாரியாலயம் முன்வந்துள்ளது வரவேற்கப் படுகின்றது. இதனால் இந்தியாவில் படிக்கும் இலங்கை மாணவருக்கு கஷ்ட நிவாரணமேற்படுவதுடன், அடிக்கடி இந்தியா செல்ல வேண்டியவர்களுக்கும் உதவியாக இருக்கும். தயக்கமின்றி மனுச்செய்த அன்றே இனி 'விஸா' வழங்கப்படுமாம். பெரியகாரியம்.

(9 ஆம் பக்கம் பார்க்க)



'இஸ்டோரும் கட்டி யாச்சு
இஞ்சினும் பூட்டியாச்சு
இள வட்ட பொண்டு களா
எலை பொருக்க வந்துருங்க'

[கட்டுரை 5ஆம் பக்கம் பார்க்க. படம் உபயம்:— டி. பீரோ]

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

அதிக நுரை தந்து உடைகளை விரைவில் வெண்மையாக்குவது **வீனஸ் சோப்.** வீனஸ் சோப் தொழிற்சாலை, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.

---

தரத்தில் சிறந்தது - **வீனஸ் சோப்.** வீனஸ் சோப் தொழிற்சாலை, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.

---

உடைகள் வெண்மையாக வேண்டுமானால் **வீனஸ் சோப்.** வீனஸ் சோப் தொழிற்சாலை, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.

---

### தேவை

யாழ்ப்பாணத்திலுள்ள அச்சுக்கூடம் ஒன்றுக்குப் புத்தகம் கட்டுவதில் போதிய அனுபவம் வாய்ந்த ஒருவர் தேவை. தோல் உபயோகித்துக் கட்டும் (லெதர் பைன்டிங்) திறமை அவருக்கு இருப்பின் அது விரும்பத்தக்கது. விண்ணப்பம் செய்க: 'பைன்டர்', தபாற்பெட்டி எண் 49, யாழ்ப்பாணம்

---

### தேவை

யாழ்ப்பாணத்திற் பத்திரிகை வெளியிடும் அச்சுக்கூடமொன்றுக்கு ஸிலின்டர் இயந்திரம் இயக்குவதில் (ஸிலின்டர் மெஷின் மைன்டர்) அனுபவம் வாய்ந்த ஒருவர் தேவை. தகுதி, அனுபவம் பற்றிய விபரங்களுடன் மனுச்செய்க: 'ஸிலின்டர்' தபாற்பெட்டி எண் 49, யாழ்ப்பாணம்.

---

### அறிவித்தல்

புற்று நோயைத் தமிழ் மருந்தால் தடையின்றி மாற்றலாம். உலகினிலே கொடிய ரோகம் புற்று நோய் என்பது எல்லோரும் ஒப்புக்கொள்ளும் உண்மை. இந்நோய் சத்திரசிகிச்சை, ஒளிசிகிச்சை மூலமே குணப்படலாமே தவிர தமிழ் மருந்தினாலல்ல என்ற அபிப்பிராயம் இனி நிலவ இடமில்லை. மீட்க முடியாதெனக் கைவிடப்பட்ட அநேகர் **யோகீஸ்வரரசம்** என்ற பெயருடைய தமிழ்மருந்தினால் குணமடைந்துள்ளனர். இம்மருந்திற்கு அநேக நற்சாட்சிப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. புற்று நோயைப் பற்றி என்னுடன் ஆலோசியுங்கள்.

**பொ- செல்லையா**
ஆயுள்வேத வைத்தியர்
கந்தர்மடம், யாழ்ப்பாணம்

---

### பாராளுமன்றத் தேர்தல்

இலங்கையின் நலனையும் தமிழரின் க்ஷேம நலன்களையும் முன்னிட்டு, தவிர்க்கமுடியாத அவசியமேற்படின், பாராளுமன்றத் தொகுதிகளில் ஒன்றுக்கு எனது சேவையைத் தாழ்மையுடன் அர்ப்பணிக்க நான் தயாராக இருப்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சு. சிவசுப்பிரமணியம்
103/2, ஹல்ஸ்டார்ப்,
(கோட்டடி)
கொழும்பு-12 Advt.

---

விஞ்ஞான முறைப்படி மோட்டரிங் சொல்லிக் கொடுக்கப்படும்.

JAFFNA SCHOOL OF MOTORING AND MOTOR SALES

**யாழ்ப்பாணம்
மோட்டரிங் & சேல்ஸ்**

**மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.**

---

### அறிவித்தல்

தற்பொழுது எல்லோரையும் ஆதரிப்பதற்காக மாதாந்தம் ரூபா 5-, 10-, 15-, 20- முதலிய கட்டணங்களை ஏற்றுக் கொள்கிறோம். ஊழியர்கள் விண்ணப்பிக்கவும்.

**ஸ்ரீ லங்கா
கஷ்டநிவாரண சங்கம்**
ஆபரண மாளிகை பில்டிங்
76/3,78/1, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.

---

### முக்கிய அறிவித்தல்

உங்கள் வீட்டிற்குத் தேவையான பல சரக்கு சாய்ப்புச் சாமான்களுக்கு எம்மிடம் கலந்தாலோசியுங்கள். எவ்வித முற்பணமும் இன்றி, உங்களுக்குச் சிரமமுமின்றி வீட்டிற்கே பொருட்களைக் கொண்டு வந்து தருகிறோம். விபரங்கட்கு, எம். ஏ. டோசாஜீ அன் கோ, 136, ஆஸ்பத்திரி ரோட், யாழ்ப்பாணம் (போன் 459).

---

### "Royal Tubes and Tyres"

கார்கள், லொறிகளுக்குரிய **ரேயல் ரியூப்களும், ரயர்களும்** பல சயிஸ்களிலும் எங்களிடம் விற்பனைக்கிருக்கின்றன. ஏனைய இடங்களிலும் பார்க்க எங்களிடம் சகாய விலையிற் பெற்றுக் கொள்ளலாம்.

யாழ்ப்பாணம் சோல் ஏஜண்டுகள்:
**யாழ்ப்பாணம்
பலநோக்குக் கூட்டுறவு சங்கங்களின் சமாசம்**
73/4, ஆஸ்பத்திரி ரோட்டு,
யாழ்ப்பாணம். போன்: 350


# உரிமை பறிக்கப்பட்ட மக்கள் அரசினரின் உதவி கேட்பது தவறா?

யாழ்ப்பாணம்

செந்தமிழும் சிவமணமுங் கமழும் யாழ்ப்பாணத்தில் இன்றும் தீண்டாமை நிலவி வருவது அருவருக்கத்தக்கதென பண்டித வித்துவான் கா. பொ. இரத்தினம் சென்ற ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் நகரமண்டபத்தில் நடைபெற்ற அகில இலங்கை சிறுபான்மைத் தமிழர் மகாசபையின் 16ஆவது மகாநாட்டிற் பேசும்போது குறிப்பிட்டார். 'மகாசபை மலர்' வெளியீடு வைபவத்தையொட்டி நடைபெற்ற நிகழ்ச்சியின்போதுதான் பண்டிதர் இரத்தினம் மேற் கண்டவாறு குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து பேசுகையில், உயர்வு தாழ்வு காண்பது தமிழினத்தின் பண்பாகாதென்றார். திரு. இராஜ அரியரத்தினம் (ஆசிரியர், ஈழநாடு) பேசும்போது சிறுபான்மைத் தமிழர் என்ற ஒரு பிரிவு தமிழர் சமுதாயத்தில் இருக்கும்வரை தமிழினத்துக்கு உய்வில்லை யெனக் கூறினர்.

அடுத்த ஆண்டு இலக்கிய விழா ஒன்றனை மகாசபை நடாத்த வேண்டுமெனவும் அவ்விழாவின் போது மகாசபை மலரையும் தொடர்ந்து வெளியிடுவது பொருத்தமானதென்றும் அவர் தெரிவித்தார்.

திரு. கே. டானியல் அனைவரையும் வரவேற்றுப் பேசினர்.

அன்று காலை மகாசபைத் தலைவர் திரு. எம். ஸி. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற இம் மாநாட்டை மேயர் திரு. ஏ. தங்கராசா துரையப்பா திறந்துவைத்தார். திரு. கே. டி. மாணிக்கம் வரவேற்புரை நிகழ்த்தினர்.

சிறுபான்மைத் தமிழரின் குறைகள்பற்றிச் சரிவர இதுவரை ஒரு தமிழ்ப் பிரதிநிதியும் பாராளுமன்றத்தில் எடுத்துக் கூருதபடியால் இக் குறைகளை அரசாங்கத்துக்கு அறிவிக்கவும், அவைக்குப் பரிகாரங்களைத் தேடுவதற்கும் எமது பிரதிநிதிகள் பாராளுமன்ற சபையில் இருக்கவேண்டியது அவசியமாகின்றது. ஒரு குறுகிய காலத்திற்காவது, சிறுபான்மைத் தமிழருக்கு ஒரு தொகுதியை ஒதுக்கித்தரும்படி சட்டம் திருத்தும் கூட்டுக் குழுவை இம்மாநாடு வேண்டுகின்றதென்ற தீர்மானமும் வேறு 12 தீர்மானங்களும் மாநாட்டில் நிறைவேற்றப்பட்டன.

"உரிமை பறிக்கப்பட்ட மக்களுக்கு உதவி செய்து சலுகை காட்டுக என அரசாங்கத்திடம் கேட்பது தவறா? எங்கள் உரிமைகளுக்குத் தடையாக நிற்பவர்கள், தாங்கள் மட்டும் அரசாங்கத்திடம் உரிமைக்காக வாதாடுவதும் சலுகை கேட்பதும் நியாயமா?" இவ்வாறு மகாசபையின் இணைச் செயலாளர்களான திரு. வே. செல்வரத்தினம், திரு. க. பசுபதி ஆகியோர் வெளியிட்டுள்ள அறிக்கையிற் குறிப்பிட்டுள்ளனர்.

# நேரு — அயூப்கான் சரித்திர முக்கியம் வாய்ந்த சந்திப்பு

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

### உள்ளத்திலிருந்து

அவர் புது டில்லியில் பத்திரிகை நிருபர்களிடம் பேசியது, அவர் உதட்டிலிருந்து வந்ததல்ல, உள்ளத்திலிருந்து வந்தவை. "நாம் நமது பிரச்சினைகளைத் தீர்க்காமல் சச்சரவிட்டுக்கொண்டே இருந்தால், நாம் தோற்கடிக்கப் படுவோம். பழைய சரித்திரம் இதற்குச் சான்று. இந்த உபகண்டத்தின்மீது படையெடுப்புக்கள் நடந்ததும் இப்படித்தான்" என்று "இராணுவ யுத்தவீரன்" என்ற முறையில் அவர் கூறி, கிழக்குப் பகுதியில் நடைபெறும் சிறு தகராறுகளை நிறுத்த மந்திரிகள் மகாநாடு நடைபெறுமென்றும் அறிவித்தார்.

இந்தியா பலவீனமாக இருக்கும் இச்சமயத்தில், அதை வசப்படுத்தவே பாகிஸ்தான் தலைவர் இப்படிக் கூறுகிறாரா? என்று சில வட்டாரங்கள் சந்தேகிக்கலாம். ஆனல், இரு தேச உறவுகளையும் பயனுள்ள புதியமுறையில் அமைக்கவேண்டிய அவசியத்தையும், பழைய **பல விஷயங்களையும் மறந்து மன்னிக்க வேண்டுமென்றும்,** இப்புதிய உறவு தமக்கு மட்டுமன்றி, இரு தேச மக்களுக்கும் மகிழ்ச்சியளிக்குமென்றும் அவர் கூறி, நேருவைப்பற்றி மனமாரப் பாராட்டியுள்ளதும், இருவரும் மனத்தால் நெருங்கியுள்ளதாயும் அறிவித்துள்ளதும் உள்ளத்தால் கூறிய உண்மை மொழிகள். இது பெரிய அரசியல் ஞானி கூறும் பேச்சுப்போல் உள்ளது.

### வழிபிறக்கலாம்

மேலும் அவர் ஆட்சிக்கு வந்து 11 மாதங்களே ஆகின்றன. இதற்குள்ளாக, பாகிஸ்தானில் கள்ளச் சந்தை கூடத்தை அடியோடு ஒழித்து, கைலஞ்சப் பேயைவிரட்டி, நிர்வாகத்தை மேம்படுத்தி, வாழ்க்கைச் செலவைக் குறைத்து, அங்கு மக்களின் அமோகமான அபிமானத்தைப் பெற்றிருக்கின்றார். அந்த அபிமானமே அவரது உண்மையான பலமாகும்.

இந்தியாவும் பாகிஸ்தானும் நட்புறவுடன் இனி ஒத்துழைத்தால் இரு தேச மக்களின் சுபிட்சமும் வளரும். வெளியார்கள் வாலாட்ட முடியாது. புது சீன விஷயமும் சீக்கிரத்தில் நின்றுவிடக்கூடும்.

அதுமட்டுமல்ல, இதைத் தழுவி இலங்கை முதலிய நாடுகளுக்கும் இந்தியாமீது புதிய மதிப்பு ஏற்படவும், வேறு பிரச்சினைகளும் நல்லபடியாகத் தீரவும் வழிபிறக்கலாம்.

## கொழும்பில் முத்தமிழ் விழா

கொழும்புத் தமிழ்ச் சங்கம் ஆண்டுதோறும் நடத்தி வரும் முத்தமிழ் விழா இவ்வாண்டு செப்டெம்பர் மாதம் 19-ம், 20-ம் நாட்களில் நடைபெறும். தமிழ் அறிஞர்களின் விரிவுரைகளும், இன்னிசை, நாடகம் முதலிய கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும்.

### சேர் அருணசலம் நினைவு

இச் சங்கத்தின் ஆதரவில் இம்மாசம் 15-ம் தேதியன்று சேர் பொன் அருணசலம், திரு வி. க., மறைமலை அடிகள், பாரதி முதலானோர் நினைவாக ஒரு விழா நடைபெறும். திரு. அ. அமிர்தலிங்கம் எம். பி, திரு. செ. இராசதுரை எம். பி, பேராசிரியர் அ. வி. மயில்வாகனம் ஆகியோர் கலந்து கொள்வர்.

## அருணகிரிநாதர் விழா நீர்வேலியில் இன்று ஆரம்பம்

நீர்வேலி கந்தசுவாமி கோவில் மண்டபத்தில் ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகள் விழா இம் மாதம் 5, 6, 7 ஆம் திகதிகளில் நடைபெறும். இவ்விழாவில் வித்துவான் பொன். முத்துக்குமாரன், வித்துவான் கி. வா. ஜகந்நாதன் (ஆசிரியர் கலைமகள்) முதலியோர் விரிவுரைகள் ஆற்றுவார்கள். மூன்று நாட்களும் முறையே திரு. ம. ஸ்ரீகாந்தா, பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, ஸ்ரீ கி. வா. ஜகந்நாதன் ஆகியோர் விழாவிற்குத் தலைமை தாங்குவார்கள். விழா மூன்று தினங்களும் மாலை 5-30 க்கு ஆரம்பமாகும்.

---

## நுவரேலியா வீதிகளின் கேவல நிலை

### மந்திரி அபயவிக்கிரம திடீர் விஜயம்

அண்மையில், மந்திரி அபயவிக்கிரம நுவரேலியாவிற்குத் திடீர் விஜயம் செய்தார். அவர் சென்ற போது நுவரேலியாவிலுள்ள தெருக்கள் எல்லாம் அதிருப்தியான நிலையில் உள்ளனவென்றும், அங்குள்ள பகிரங்க வேலைப்பகுதி உத்தியோகத்தர்களும், எஞ்ஜினியர்களும் கடமையாற்றுவதில் மிகக் கவலையீனமாகவுள்ளனரென்றும், பல குறைகள் எழுதப்பட்டவொரு 20 பக்கப் பத்திரத்தைத் தம்முடன் கொண்டு சென்றார்.

ஆனல், அவர் நுவரேலியாவில் உள்ள பகிரங்க வேலைப் பகுதிக் காரியாலயங்களைப் பார்வையிடச் சென்ற பொழுது, அக் காரியாலயங்களில் கடமையாற்றும் எஞ்ஜினியர்கள் ஒருவரும் அங்கு இல்லையாம். அவர்கள் எல்லோரும் ஒவ்வொரு சாட்டில் வெளியே போய் விட்டார்கள். ஒருவர் அனுமதி பெருமலே சென்று விட்டார். இன்னெருவர், சக உத்தியோகத்தரையும் கூட்டிக் கொண்டு வங்கிக்குச் சென்று விட்டார். வேறெருவர் சந்தைக்குச் சென்றிருந்தார். இன்னுமொருவர் காரியாலயத்தில் தலையைக் காட்டிவிட்டுத் தம் வீட்டிலே நடக்கும் திருத்தங்களைப் பார்வையிட வீடு திரும்பி விட்டார்!

"மாகாண உத்தியோகத்தர் மீது பகிரங்க வேலைப்பகுதியின் அதிகாரம் இருப்பதாகத் தெரியவில்லை. அவர்கள் தாம் நினைத்த மாதிரியே நடப்பதாகவே தோன்றுகிறது" என்று கூறியுள்ளார். இப்பகுதியின் அதிகாரியையும், வேறும் ஆறு உதவி அதிகாரிகளையும் அவர் உடனேயே தாம் கூறிய குறைகளைப் பற்றி ஆராய்ந்து ஒரு அறிக்கை தருமாறு உத்தர விட்டுள்ளார்.

---

## 'தொழிலாளர் விவசாயிகள் அரசாங்கம்' நிறுவுவதே சமசமாஜிகளின் நோக்கம்

நாட்டில் நிலவி வரும் பல்வேறு பிரச்சினைகளை சுமுகமாகத்தீர்ப்பதற்குச் சமசமாஜக் கட்சியால் தான் முடியும். வகுப்பு வாதத்தைக் கிளறிவிடும் இதர கட்சிகளால் இதைச் சாதிக்க முடியாது. இவ்வாறு சென்ற வாரம் (23. 8. 59 — 30. 8. 59) நடைபெற்ற சமசமாஜ வாரக் கூட்டமொன்றில் சமசமாஜக் கட்சியின் யாழ்ப்பாணக் கிளையின் காரியதரிசி திரு. அ. விசுவநாதன் கூறினர். திரு. விசுவநாதன் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது: சமசமாஜக் கட்சி நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து கொண்டே வருகிறது. இலங்கையில் ஒரு தொழிலாளர் விவசாயிகள் அரசாங்கத்தை நிறுவுவதற்கு சமசமாஜக் கட்சி தீவிரமாக உழைக்கும்.

இந்தியாவில் கடல் தொழில் நன்கு முன்னேறி வருகின்றது. அந்நாடு கையாளும் முறைகளைப் பின்பற்றி இலங்கையும் கடல் வளத்தை விருத்தி செய்யலாமென டக்டர் பி. சுந்தரராஜ் இக்கட்டுரையிற் குறிப்பிட்டுள்ளார். சென்னையின் முன்னாள் கடல் தொழில் அதிபராகப் பணியாற்றிய இவர் சில காலம் இலங்கைக் கடல் தொழில் பிரிவு ஆலோசகராகவும் கடமையாற்றியுள்ளார்.

# இலங்கையின் கடல் தொழில் விருத்திக்கு இந்தியா காட்டும் வழி

## மீன்பிடித் தொழிலில் பெரிய முன்னேற்றம்

கடற்செல்வம், எந்த நாட்டுக்கும் ஒரு பெரிய தேசிய ஆஸ்தியாகும். சிறப்பாக இலங்கையைப் போன்ற தீவுக்கு இது முக்கியமாகும். மேற்கே அரபுக் கடல், தெற்கே இந்து மகா சமுத்திரம், கிழக்கே வங்காள விரிகுடா, இவ்விடங்களில் நமக்கு ஏராளமான கடற் செல்வம் இருக்கின்றது. என்றாலும் நம் கரை ஓரமாகவும், சமீபகாலத்தில், கன்னியா குமரிக்குத் தெற்கிலுமாக அல்லாது மற்ற இடங்களில் நாம் இச்செல்வத்தை இதுவரை தேடக்கூட இல்லை.

கமம், காடு வெட்டுதல், சுரங்க வேலை முதலிய தொழில்களுக்கு எவ்வளவோ கட்டுப்பாடுகள். ஆனால் கடற்தொழிலுக்கு இப்போது, எல்லையற்ற இடமுண்டு. நவீன முறைகளைக் கையாண்டு, தக்க மூலதன முயற்சிகளை எடுத்தால் நல்ல ஆதாயமிருக்கிறது.

இரண்டாவது மகா யுத்தத்துக்குப் பிறகு, இலங்கைக்கும் இந்தியாவுக்கும், சர்வதேச உணவுஸ்தாபனம், கொழும்புத் திட்டம், தொழில் நுட்ப கூட்டுறவு மிஷன், அமெரிக்க ஸ்தாபனங்கள், ருஷியா இவ்விடங்களிலிருந்து ஏராளமான தொழில், பண உதவிகள் எதிர்பாராத வகையில் கிடைத்து வருகின்றன.

நாம் நமது மீன்பிடித்தொழிலைத் திட்டப்படி அபிவிருத்தி செய்வதற்காக, கேட்டால் போதும். எவ்வளவோ உதவிகள் காத்துக்கிடக்கின்றன.

### நவீனமுறை

இவ்வித சந்தர்ப்பங்களையும், உதவிகளையும், இந்தியா பூரணமாகப் பயன்படுத்தி, கடற் தொழிலில் எவ்வளவோ முன்னேற்றமடைந்துள்ளது. அங்கு வெளிநாட்டு நிபுணர்கள், பணம், தளவாடம் இவற்றைக் கொண்டு கடற்தொழிலை நவீன முறையில் அமைத்து வருகின்றனர். நவீன முறையில் ஆழ் கடலிலே மீன் பிடிப்பதை அபிவிருத்தி செய்வதற்கு, முதலில் மீன்கள் சஞ்சரிக்கும் இடங்களை எஞ்சின் படகுகளைக் கொண்டு கண்டறியவேண்டும். அப்போது தான் கடற் தொழிலாளருக்கு இவைபற்றிய விபரங்கள் தெரியவும், லாபகரமாக இதில் ஈடுபடவும் முடியும்.

வங்காளம், இலங்கை, சென்னை, பம்பாய் இவ்விடங்களில் ட்ராலர் கப்பல்கொண்டு மீன் பிடித்தல நஷ்டமேற்பட்டதாக முதலில கருதப்பட்டது. என்றாலும் இந்திய மத்திய அரசாங்கமும், ராஜ்ய அரசாங்கங்களும், சிறிய விசைப் படகுகளைப் பயன் படுத்தி, தீவிர ஆராய்ச்சி செய்தனர். இந்திய அரசாங்கம் இப்போது பம்பாய், கொச்சின், தூத்துக்குடி, விசாகப் பட்டினம் இந்நான்கு இடங்களிலும், ஆழ் கடல் மீன்பிடி, ஆராய்ச்சி காட்சி நிலையங்களை ஏற்படுத்தியுள்ளனர். இவ்விஷயமாக பரீட்சை பார்க்கவும், மீன் பிடிக்கப் பயிற்சி அளிக்கவும் வெளி உதவியால் பெற்ற 21 நவீன படகுகள், இந்த நான்கு இடங்களிலும் பயன் படுத்தப் படுகின்றன.

### சென்னையில்

சென்ற யுத்தம் முடிந்ததும், 1946-ம் ஆண்டில் கடற்படையிலிருந்து வாங்கிய 8 மோட்டார் படகுகள், சென்னையில் பயன் படுத்தப்பட்டன. ஆனால் இம்முயற்சி தோல்வி அடைந்தது. மீன் பிடித்தலுக்கு இவை வசதியாக இல்லை. இதில் ஒன்று இப்போது, சங்கு, முத்துக் குளிப்பதற்குப் பயன் படுத்தப்படுகின்றது. அமெரிக்க தொழில் நுட்ப மிஷன்மூலம் கிடைத்த 4 மோட்டார் மீன்பிடிபடகுகள் சென்னை அரசாங்கத்திடம் சிறிதுகாலம் இருந்தன. உலக உணவு ஸ்தாபன நிபுணர்கள் மேற்பார்வையில், புன்னக் கோவில், நல்ல தண்ணித்தீவு, ஏப்புத்தீவு இவ்விடங்களில் மீன் வளங்களைக் கண்டு பிடித்தனர்.

சென்னையில் "பாப்லோ" என்ற புதிய படகுகள், நிபுணர்களால் கட்டப்பட்டு, வெற்றிகரமாக உபயோகிக்கப்படுகின்றன. அரசாங்க உதவியின் மீது, இந்தப்படகுகள் மீன் பிடித்தொழிலாளருக்கு குறைந்த விலைக்குக் கொடுக்கப் படுகின்றன. 7 வருஷங்களிலே 60 மாதத் தவணையில், இதன் விலையைச் செலுத்தலாம். இப்படகுகள் மூலம் மீன்கள் அதிகமாகப் பிடிக்கப்படுகின்றன. சென்னை, புளிக்கட்டு, கடலூர், பறங்கிப்பேட்டை, நாகப்பட்டணம், அதிராம்பட்டணம், பாம்பன், கீழக்கரை, தூத்துக்குடி, கன்யாகுமரி இவ்விடங்களில் பங்கு முறைப்படி, இப்படகுகள் லாபகரமாகப் பாவிக்கப்படுகின்றன. ஸ்தலத்திலுள்ள அதிகாரிகள், தக்க யோசனை கூறி உதவி அளிக்கின்றனர்.

### பம்பாயில் ஒரு கம்பனி

அரசாங்க உதவி இன்றி, பம்பாயில், ஒரு தனிப்பட்ட கம்பெனி, 'நியூ இந்தியா பிஷரிஸ் லிமிட்டட்' என்ற பெயரில் நடப்பது குறிப்பிடத்தக்கது. யப்பானிய கம்பெனியும் இதில் கூட்டுசேர்ந்துள்ளது. அவர்கள் ட்ராலர், கியர்கள், வலைகள் முதலியவற்றைக் கொடுக்கிறார்கள். கம்பெனி கட்டுப்பாடாக அமைக்கப்பட்டு நன்கு நடைபெறுவது அதன் வருட அறிக்கையிலிருந்து தெரிகிறது. முதலில் சில யப்பானியர் வேலைக்குச் சேர்க்கப்பட்டனர். பின்னர் அவர்களில் சிலர் தாய் நாடு திரும்பினர். ஆரம்ப முதலே கம்பெனி வெற்றியுடன் நடக்கிறது. 17-2-56 முதல் 20-11-56 வரை கம்பெனிக்கு ஒரு லட்சத்து 30 ஆயிரம் லாபம். 1-12-56 முதல் 3-3-57 வரை ஒரு லட்சத்து 60 ஆயிரம் லாபம் கிடைத்துள்ளது.

மறுவருடம் அதிகமான மீன் பிடிக்கப்பட்டு, விற்பனையும் அதிகம். ஆனால் செலவு அதிகரித்ததால் லாபம் குறைந்துள்ளது. யப்பானிய மாலுமிகள், யப்பானிய மீன் பிடிகாரர் சங்கத்தீர்மானப்படி, அதிக சம்பள உயர்வு கேட்டனர். ட்ராலர் கப்பல்களைத் திருத்த வேண்டியதாயிற்று. இதற்கு அதிக செலவு. யப்பானில் ஒரு நாளைக்கு இக்கப்பல் பழுது பார்க்கு மிடத்துக்கு ரூ. 50 தான் வாடகை. ஆனால் இந்தியாவிலோ முதல் நாளைக்கு மட்டும் ரூ. 1600 வாடகையாகும். இந்த நஷ்டமெல்லாம், கப்பல் புதுப்பிக்கப்பட்டு வந்ததும் மாறி, லாபம் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. வலை, கயிறு முதலியவற்றை இறக்குமதி செய்ய அக்கம்பெனிக்கு இந்திய அரசாங்கம் அனுமதி அளித்துள்ளது.

### ஏன் பின்பற்றக் கூடாது?

இந்தியாவிலே நியூ இந்தியா பிஷரீஸ் கம்பெனி காட்டியுள்ள வழியை இலங்கையில் நாம் ஏன் பின்பற்றக்கூடாது? இலங்கையிலே யப்பானிய நிபுணர்கள் இருக்கவே செய்கின்றனர். ட்ராலருக்கு அதிக செலவாகுமாயின் சென்னையிலுள்ளது போல், "பாப்லோ" மோட்டார் படகுகளை நாம் பாவிக்கலாம். மோட்டார் படகுகள் வாங்க, இலங்கை அரசாங்கம் 1958-ம் வருஷம் முதல் ரூ. 15 ஆயிரம் வரை கடன் கொடுக்கின்றது. பல சுலபமான தவணைகளில் இது திருப்பிச் செலுத்தப்படலாம்.

யப்பான் இரு மோட்டார் மீன்பிடிபடகுகளை இலங்கைக்கு இனமாக அளித்துள்ளது. 'நிப்பன் மாரு', "ஸிலோன்மாரு" என்ற இரு படகுகளும், யப்பானிய முறைகளை இங்கு காட்டின. இரு யப்பானிய நிபுணர்கள் ஜாம் போவும் இஹியும் இப்போது இலங்கையிலுள்ளனர். தவிர பம்பாயிலுள்ளது போல் இங்கு தனிப்பட்ட மீன்பிடி கம்பெனிகள் ஆரம்பிக்க இது நல்ல தருணமாகும்.

# இந்தோனேஷியாவில் ஜனநாயகம் நிலைக்குமா?

## ஜனாதிபதி ஆட்சி நடைபெறுவதற்கான காரணம்

— வ. மகாதேவன் —

இந்தோனேஷியா சுதந்திரமடைந்து பதினான்கு ஆண்டுகள் கழிந்துவிட்டன. சென்ற 17-8-59 இல் பதினைந்தாவது தேசியதினம் கொண்டாடப்பட்டது. சென்ற ஜூலை மாதத்தில் இந்தோனேஷியாவில் "இயக்கப்படும் ஜனநாயகம்" எனப்படும் ஒருவித ஜனாதிபதியின் சர்வாதிகார ஆட்சி பிரகடனம் செய்யப்பட்டதற்கான காரணங்களை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

முன்னர் ஒல்லாந்தர் ஆட்சியிலிருந்த கிழக்கு இந்திய தீவுகளின் புதிய பெயரே இந்தோனேஷியா, ஜாவா, சுமாத்திரா, செலீபஸ், போர்னியோவில் பெரும்பகுதியும், மதுரை, மொலூக்கஸ், பாலி போன்ற சிறியதீவுகளும், ஆயிரக்கணக்கான மிகச் சிறிய தீவுகளும் இதில் அடங்கியிருக்கின்றன. மொத்த நிலப்பரப்பு 7,35,865 சதுர மைல். சனத்தொகை ஏறத்தாழ 8,20,00,000 வசிக்கும் மக்களில் ஏறத்தாழ 90 வீதத்தினர் முஸ்லிம்கள். 51,000 சதுர மைல் விஸ்தீரணமுள்ள ஜாவாவில் 5 கோடி மக்கள் வரை வசிக்கின்றனர். இந்தோனேஷியாவின் தலைநகராகிய ஜக்கார்த்தா ஜாவாவின் வடமேற்குக் கரையில் இருக்கின்றது. உலகிலுள்ள இயற்கைவளம் செறிந்த நாடுகளுள் இந்தோனேஷியாவும் ஒன்று. வெள்ளீயம், மண்ணெய், நிலக்கரி, போக்ஸைற், மங்கனீயம், செம்பு, நிக்கல், தங்கம், வெள்ளி முதலியன கிடைக்கின்றன. உலகில் மலாயாவுக்கு அடுத்ததாக ரப்பரும் வெள்ளீயமும் ஏற்றுமதிசெய்யும்நாடு இந்தோனேஷியா. ஏனைய ஏற்றுமதிப் பொருள்கள் கோப்பி, தேயிலை, சீனி, கொப்பரு முதலியன. தூரகிழக்கில் அதிக அளவு மண்ணெய் (பெற்ரோலியம்) இந்தோனேஷியாவில் கிடைக்கின்றது.

### குடியரசு

1942 மார்ச் தொடக்கம் 1945 ஒகஸ்ட் வரை ஜப்பானியரின் இராணுவ ஆட்சியில் இந்தோனேஷியா இருந்தது. இந்தோனேஷிய தேசியவாதிகள் 17-8-1945 இல் தமது நாட்டை சுதந்திர குடியரசாகப் பிரகடனம் செய்தனர். 2-11-1949 இல் இந்தோனேஷியப் படைகளும் ஒல்லாந்தப் படைகளும் போர் ஓய்வு செய்து ஆட்சிப் பொறுப்பை இந்தோனேஷிய அரசாங்கம் ஏற்றுக்கொண்டது. ஐக்கிய இந்தோனேஷிய நாடுகளின் இடைக்கால அரசாங்கம் ஒன்று நிறுவப்பட்டது. நியூகினிதீவின் மேற்குப்பாகம் மாத்திரம் தொடர்ந்து ஒல்லாந்தரின் ஆட்சியில் இருந்துவருகின்றது.

1950 ஜூலையில் கூடுதலான மத்திய பொறுப்புள்ள ஒற்றையாட்சிஅரசியலமைப்புத் தாபிக்கப்பட்டு நாட்டுக்கு இந்தோனேஷியக் குடியரசு என்ற நாமம் சூட்டப்பட்டது. சென்ற ஜூலை வரை இந்தோனேஷியாவில் பதினேழு மந்திரி சபைகள் கடமையாற்றியிருக்கின்றன. பல அரசியல் கட்சிகளிருப்பதால் கூட்டு மந்திரி சபைகள் பொறுப்பேற்கவேண்டியிருந்ததே இதற்கு முக்கிய காரணமாகும். 1955 இல் நிகழ்ந்த பொதுத் தேர்தலில் நான்கு கட்சிகளுக்கே அதிக ஸ்தானங்கள் கிடைத்தன. இவற்றுள் மாஸ்ஜுமிக் கட்சி என்னும் இஸ்லாமியக் கட்சிக்கு சுமத்திராவில் கூடிய ஆதரவு இருக்கின்றது. கொம்யூனிஸ்ட் கட்சி ஜாவாவில் பலம் வாய்ந்த கட்சியாக இருக்கின்றது. கொம்யூனிஸ்ட் கட்சிக்கு இதுவரை மந்திரிசபை அமைக்கும் சந்தர்ப்பமோ ஆளும் மந்திரி சபையில் பங்கோ கிடைக்கவில்லை. நாட்டின் பொருளாதாரம் பின் தங்கிய நிலையிலிருப்பதால் இக்கட்சிக்கு மேலும் ஆதரவு கிடைத்துவருகின்றது. இன்றைய அரசியல் நிலைமைக்கு ஒரு காரணம் கட்சிகளிடையே நிலவிவரும் வேற்றுமை மனப்பான்மையே ஆகும்.

(6ஆம் பக்கம் பார்க்க)

கலாநிலையப் பதிப்பகம்

தினக்குறிப்பு 1960

1960ஆம் ஆண்டுக்குரிய புதிய தினக்குறிப்புகளை வெளியிடுவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருவதை உங்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

எமது தினக்குறிப்புடன், மாணவர்களுக்கென பிரத்தியேகமான தினக்குறிப்பையும் வெளியிடுகின்றோம்.

எமது தினக்குறிப்பின் விலை வழக்கம்போல் 75 சதம் தான்

விபரங்களுக்கு:- தினக்குறிப்பு 1960,
த. பெ. எண் 49,
யாழ்ப்பாணம்.

இங்கே வெட்டவும்

மனேஜர் :
கலாநிலையப் பதிப்பகம்
த. பெ. எண் : 49.
சிவன் கோவில் மேலைவீதி,
யாழ்ப்பாணம், : : [இலங்கை.]

1960ஆம் ஆண்டு பொது/மாணவர்களுக்கான தினக்குறிப்பில் ............பிரதிகளை எமது பெயரில் பதிவு செய்து கொள்ளுமாறு வேண்டுகின்றோம். இத்துடன் முற்பணமாக ரூபா............ அனுப்பி வைத்துள்ளோம்.

எமது பெயரும் முகவரியும் பின்வருமாறு :

பெயர்:..........................................

முகவரி:..........................................

..........................................

சிறுகதை

# "நான் இருக்கிறேன்"

ரா. ஆறுமுகம்

II

நீதிபதி கோர்ட்டிற்கு வரும் நேரம் கவுண்டருக்குத் தெரியும். ஐந்து வருஷ அனுபவமில்லையா? அதனால் அவர், வழக்கமாகச் சாப்பிடும் 'சீப்' பான ஹோட்டலில் மத்தியானச் சாப்பாட்டையும் முடித்துவிட்டுமெதுவாகப் பன்னிரண்டு மணிக்கு கோர்ட்டிற்கு வந்தார். அன்று ஏதோ ஒரு கொலைக்கேஸ் விசாரணையாதலால் கூட்டம் அதிகமாயிருந்தது. அதைப் பார்த்ததுமே கவுண்டருக்குப் 'பகீர்' என்றது. அன்றும் தன்னுடைய வழக்கு எடுத்துக் கொள்ளப்பட மாட்டாதோ, ரயில் செலவு, காப்பி, சாப்பாடு, வக்கீல் பீஸ், எல்லாம் விரயந்தானு என்று ஏங்கினர். கூட்டத்திற்குள் புகுந்து, கோர்ட்டு ஹாலில் தன்னுடைய வக்கீல் வந்திருக்கிருரோ என்று பார்த்தார். எல்லா வக்கீல்களும் ஒரே மாதிரி,"கறுப்பு அங்கியும் வெள்ளைத் தலைப்பாகையும் வைத்திருந்ததால் சட்டென அடையாளம் கண்டு கொள்ள முடியவில்லைக் கவுண்டருக்கு. நீதிபதி இன்னும் தம்முடைய ஆசனத்திற்கு வரவில்லை. கவுண்டர் அங்குமிங்கும் அலைவதைக் கண்ட அவரது வக்கீலே தம் இருப்பிடத்தைவிட்டு எழுந்து வந்து, கவுண்டரைத் தனியாகக்கூப்பிட்டு, "இந்தாங்கய்யா, இன்னைக்கு ஒரு பெரிய கேஸ் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படுமாம். அதனுலே நம்ம கேஸ் வாய்தாதான் ஏற்படும் போலிருக்கு. நீங்க ஏன் பாவம் காத்துக்கிட்டிருக்கணும். அடுத்த ரயிலிலே புறப்பட்டுப் போங்க......" என்று சமாதானப்படுத்தினர்.

"ஒருவேளை நான் போனதுக்கப்புறம் ஜட்ஜ் நம்ம வழக்கை எடுத்துக்கச் சொன்னு..." என்று ஒரு சந்தேகத்தைக் கிளப்பினர் கவுண்டர்.

"சொன்னு என்ன? நானிருக்கிறேன்! எதிரியை மட்டும் விசாரிக்கிறேன். உம்ம விசாரணைக்கு நானே வாய்தா வாங்கிக்கிறேன். அவ்வளவுதானே?"

"என்னத்துக்குங்க வம்பு. நானும் கடைசி மட்டும் இருந்து பாத்திட்டுப் போறேனே. வந்தது வந்தாச்சு......"

"சரி,உம்மிஷ்டம்... காத்துக் கிடங்க" என்று சொல்லிவிட்டு 'விருட்'டென்று உள்ளே போய்விட்டார் வக்கீல். வெற்றிலைப் பையைப் பிரித்துவைத்துக்கொண்டு, ஒரு மூலையில் போய் உட்கார்ந்துவிட்டார் கவுண்டர்.

வழக்கம்போல் அன்று மாலையும் ஐந்து மணிக்கு கோர்ட் கலைந்த போதுதான், பதினைந்து தினங்கள் கழித்து ஒரு நாள் வாய்தா போட்டிருப்பதாக வக்கீல் மூலம் தெரிந்து கொண்டு, கவுண்டர் ஏமாற்றத்துடன் பழனிக்கு ரயில் ஏறினர்.

குறிப்பிட்ட தினத்திற்கு இரண்டு நாள் முன்னரேயே வக்கீலைக்கண்டு ஞாபகப்படுத்தி விட்டு வர அவர் வீட்டிற்குச் சென்ருர் கருப்பணக் கவுண்டர். வக்கீல் கவலையோடு, ஏதோ ஆழ்ந்த யோசனையில் இருந்தார்.

"கும்பிடுறனுங்க சாமி, என் கேசைப்பத்தித்தான் நினைச்சுக்கிட்டிருக்கிங்களா? நானும் நல்ல சமயத்துக்குத்தான் வந்தேன்" என்று மேல் துண்டை எடுத்துக் கையில் வைத்துக் கொண்டு மரியாதையாக முன்னுலே போய் நின்ருர் கவுண்டர்.

"ஆமா, உம்ம கேஸைப் பத்தித்தான் எனக்கு ரொம்பக் கவலை... இப்ப நானே ஒரு வழக்கிலே மாட்டிக்கிட்டு முழிக்கிறேனய்யா" என்று சலிப்பாகச் சொன்னர் வக்கீல்.

"நீங்களா? உங்களுக்குக் கூடவா கேசு? அப்படின்னு வக்கீல் செலவில்லாமே நீங்களே கோர்ட்டிலே அடிச்சுப் பேசி ஜெயிச்சிடலாமே.இதுக்கு ஏன் யோசனை பண்றீங்க சாமி ?" என்று ஆறுதல் கூறும் வண்ணம் சொன்னர் கவுண்டர்.

"அப்படியில்லைய்யா கவுண்டரே. அன்னைக்கு நான் திண்டுக்கல்லிலேயிருந்து திரும்பி வரும்போது, ஒரு மாட்டு வண்டியிலே என் கார் மோதி ஒரு மாட்டின் கால் ஒடிஞ்சு போச்சு. உடனே வண்டிக்காரங்கள்ளாம் கூட்டமாவந்து என் டிரைவர் மண்டையை உடைச்சிட்டாங்க. என் பையிலே இருந்த இரு நூறு ரூபாயையும் தட்டிப் பிடுங்கிட்டுப் போயிட்டாங்க. அதைப்பத்தித்தான் நம்ம ஊர்க் கோர்ட்டிலேயே விசாரணை நடக்குது. வண்டிக்காரன் நல்ல பணக்காரனும். பெரிய கிரிமினல் லாயரை அமர்த்தி வாதாடுகிருன். நானும் அதுக்குத் தக்கபடி நம்ம ஊர் பெரிய கிரிமினல் லாயர் எமகண்டனை வைச்சிருக்கிறேன். என் கைப்பணம் இருநூறு போனதுமில்லாமே, இதுவரைக்கும் பீஸே முந்நூறு ரூபாய் போயிட்டது......"

"என்னங்க சாமி நீங்க சொல்றது ஆச்சரியமாயிருக்கு? நீங்க எதுக்கு இன்னெரு வக்கீலுக்கு பீசு குடுக்கணும்? நீங்களே எதிரியை விசாரிக்கக் கூடாதா ?"

"அட உமக்கு என்னய்யா தெரியும்? நான் சிவில் கேஸிலேதான் கெட்டிக்காரன். என்னை மிஞ்சிக்க இந்த வட்டாரத்திலேயே யாருமில்லை. ஆனு என் கேஸு கிரிமினல் சம்பந்தப்பட்டது. இதுக்கு எமகண்டன்தான் சரியானவர். அப்படின்னுநினைச்சேன் ஆனல் எதிரி வக்கீல், இவரை விடப் பெரிய எமனு இருக்காரு. என்னை என்னென்ன கேள்வியெல்லாம் கேட்டு மடக்கிருர் தெரியுமா ?"

"இதே தொழிலா இருக்கிற நீங்களே இப்படிச் சொன்னு என்னைப் போல சாதாரண ஆசாமியெல்லாம் இந்தக் குறுக்குக் கேள்விக்கு எப்படிங்க பதில் சொல்றது?...... சரிங்க உங்க வக்கீல் எமகண்டம் என்ன சொல்ருரு? கேசு உங்கபக்கம் ஜெயிக்குமா?...?"

"அவர் என்ன சொல்லுவார், பாவம்! நானிருக்கிறேன் நீங்க ஏன் பயப்படுறீங்க? இந்தக் கோர்ட்டிலே தோத்துப் போனு மேல் கோர்ட்டிலே விட்டுடுவேனு என்கிருரு. உள்ளூரிலேயே சாட்சிகளைத் தேடிப் பிடிக்கிறது தலை வேதனையாயிருக்கு. இன்னும் இந்தக் கேசு திண்டுக்கல், மதுரைன்னு, போனு ஒவ்வொரு தடவையும் படிகட்டி ஆளைத் திரட்டிப் போறதுக்குள்ளே......"

"என்னங்க சாமி இப்படிப் பேசிறீங்க. இப்பத்தானே இரண்டு வாரமாகுது, உங்க கேசுஆரம்பமாகிகோர்ட்டுன்னு போயிட்டா ...... உங்களுக்குத் தெரியாததா?"

"அது சரி கவுண்டரய்யா. இது கிரிமினல் கேஸில்லையா? ஒவ்வொரு தடவைக்கும் வக்கீல் பீசே ஐம்பது கேட்கிருரே. அப்புறம் இதர செலவுகள் வேறே. இதனுலே என் வேலை எவ்வளவு கெடுது தெரியுமா?......"

"எமகண்டம் கெட்டிக்காரருங்க. எப்படியும் ஜெயிச்சிடுவாரு."

"எனக்கென்னமோ நம்பிக்கையில்லை. நான் அவரைக் கேக்கும் போதெல்லாம், 'நானிருக்கின்றேன். ஏன் பயப்படுறீங்க' என்கிற பதிலையே சொல்லுருரு........."

"அதாவது நீங்க இந்த அஞ்சு வருஷமா என்னிடம் சொல்லி வந்ததை அவர் உங்களிடம் இந்த இரண்டு வாய்தாவா சொல்லிவர்ருரு! அதுக்குள்ளே நீங்க வெறுப்பா பேசுறீங்களே?"

கவுண்டர், தைரியத்தை வரவழைத்துக் கொண்டு சொல்லி விட்டார்!

வக்கீல் நீலகண்டம், கவுண்டரை முறைத்துப் பார்த்தார். அதற்காக கவுண்டர் பயந்து விடவில்லை.

"இந்தக் கருப்பணக் கவுண்டனுக்கு நீலகண்டம் வாய்ச்சது போலே, நீலகண்டத்துக்கும் ஒரு எமகண்டம் இருக்கு என்கிறதை இப்பவாவது தெரிஞ்சுக்கிங்க சாமி!" அவர் படபடவென்று பேசினர்.

"கவுண்டரே, நிதானிச்சுப் பேசும். உம் கேஸ் என் கையிலே இருக்கு! நான் நினைச்சா......"


"என்ன செய்திடுவிங்க சாமி? தோல்வியைத்தானே ஒவ்வொரு கோர்ட்டிலும் பார்க்கிறேன். இனி மதுரைக்குப் போயா ஜெயிக்கப் போறீங்க? ஒவ்வொரு தடவையும் உங்க காலிலேயும் சாட்சிக்காரன் காலிலேயும் விழுந்து கெஞ்சுறதுக்குப் பதில் ஒரே தடவை சண்டைக்காரன்- என் எதிரி- காலிலேயே விழுந்து சமாதானமாய் போயிடறேன். அவ்வளவுதானே!"

"ஓஹோ, அவ்வளவுக்குத் துணிவு வந்திட்டதா உமக்கு? இந்த யோசனை முன்னுலேயே எங்கே போச்சு" என்று ஏளனமாகக் கேட்டார் வக்கீல்.

"அது என் தப்புத்தான் ஒப்புக்கொள்ரேன். இப்பத்தான் எனக்குப் புத்தி வந்தது."

"சரி,சரி. உம்மிஷ்டம் போலச் செய்து கொள்ளும். இனி உம் கேஸை நான் நடத்தப் போறதில்லை. வேறு யாரிடமாவது கொடுத்துப் பார்த்துக்கலாம். இதோ உம்முடைய கட்டு" என்று பீரோவைத் திறந்து, கவுண்டரின் கேஸ் கட்டுகளையெல்லாம்எடுத்துக் கோபமாக வீசி எறிந்தார் வக்கீல்.

(5ஆம் பக்கம் பார்க்க)



ஐக்கிய நாடுகள் சபைக் கட்டடம்: "சமாதானத்தின் தலைநகரம்" என அழைக்கப்படும் இக் கட்டடம் நியூ யோர்க் நகரில் உள்ளது.

## சிறுகதை எழுத்தாளர்களுக்கு

பண்பாடு, ஒழுக்கம், வாழ்க்கைநிலை ஆகியவற்றை செம்மையாக்கும் நோக்கத்துடன் எழுதப்பெறும் சிறுகதைகளை "ஈழநாடு" வரவேற்கின்றது. கதைகள் 'பூல்ஸ்காப்' தாளில் ஐந்து பக்கங்களுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும். அத்துடன் தாளில் ஒரு பக்கத்தில் மையினுல் எழுதப்பெற்றுமிருக்க வேண்டும்.

### வாழ்க்கைச் சம்பவங்கள்

நாளாந்த நிகழ்ச்சிகளைப் பொருளாகக் கொண்ட வாழ்க்கைச் சம்பவங்களையும் எழுத்தாளர்கள் எழுதி அனுப்பலாம். இச்சம்பவங்கள் இப்பத்திரிகையில் ஒரு பத்திக்கு (கலம்) மேல் அமையக்கூடாது.


நவநாகரிகமான முறையில்

குறித்த தவணையில்



ஓடர் நகைகள்

செய்து கொடுக்கப்படும்.

பொற் தொழில்

ஒத்துழைப்புச் சங்கம்

நல்லூர்

82/5, கஸ்தூரியார் வீதி,

யாழ்ப்பாணம்.

தாய் நாட்டை விட்டுச்சேய் நாட்டுக்கு வந்த யாத்திரை, தோட்டங்களில் நாளாந்தம் நிகழும் சம்பவங்கள், அங்கு கொண்டாடப்படும் திருவிழாக்கள் முதலியவற்றை ஆதாரமாகக் கொண்டே கிராமியப் பாடல்கள் புனையப்படுகின்றன.

# பழைய பரம்பரையை நினைவூட்டும் எழில்மிக்க மலைநாட்டுக் கிராமியப் பாடல்கள்

— ஸி. வி. வேலுப்பிள்ளை —

தேயிலைத்தோட்டத்து கிராமியப் பாடல்கள் வெறுமனே காதலையும் சாதலையும் சித்திரிக்கும் இதய கீதங்கள் மட்டுமல்ல. அவை அங்கு வாழும் மக்களின் சீவிய சரித்திரம் முழுவதையும் விஸ்தரித்துக் காட்டுவன. வாழ்க்கையில் எவ்வித சிறிய அனுபவமும் நாட்டுப் பாடலாகப் பரிணமிக்கும்.

இவ்வின்னிசைக் கீதங்களின் சுவை, கருத்து, எதுகை மோனை முதலியவற்றிலிருந்து, கிராமத்துப் புலவன் புராதனக் கதைகளையும் புராணங்களையும், கட்டுக் கதைகளையும் பொது மக்கள் ரசிக்கும் அளவுக்குக் கொண்டு வந்து விட்டானென்பது புலப்படுகிறது. மகாபாரதம், இராமாயணம் போன்ற இலக்கியங்களைக் கூட எளிதான, இனிய பாக்களாக்கி அவர்களின் பச்சை உள்ளங்களைப் பண்படுத்தியிருக்கிறன். புதிய கருத்துக்களையும் எண்ணங்களையும் ஆவலுடன் ஏற்றுக் கொள்ளும் அவர்களுடைய பிஞ்சுள்ளம் இதனல் பூரிப்படைந்துள்ளது. இப் பாடல்களை அவர்கள் திருப்பிப் பாடும் பொழுது அவற்றில் புதிய இனிமை தொனிக்கும்.

### குடியேறிய கதை

தரையாலும் கடலாலும் இலங்கையில் வந்து குடியேறிய கதை, முன் பின் பழக்கமில்லாத இந் நாட்டில் சீவியம் உருவாக்கப்பட்ட விதம்-இவையெல்லாம் புதிய பாடல்களுக்கு எழுச்சி தந்தன. இவற்றில் பெரும்பாலானவை பிறந்தகத்திலிருந்து புறப்பட்டுக் கடந்தள்ளின காலம் வரையீருகவுள்ள மிகவும் சோகமான கட்டத்தையே சித்திரிக்கின்றன. தாய் நாட்டை விட்டுச் சேய் நாட்டுக்கு வந்த யாத்திரை, தோட்டங்களில் நாளாந்தம் நிகழும் சம்பவங்கள், அங்கு கொண்டாடப்படும் திருவிழாக்கள்-முதலியவற்றை ஆதாரமாகக் கொண்டே கிராமியப் பாடல்கள் புனையப் படுகின்றன.

மேலெழுந்தவாரியாகப் பார்த்தால், இப்பாடல்களின் முக்கியமான பொருள் காதல் தான். மற்றப் பாடல்களில் துரையும், கண்டக்டரும், கங்காணியும், கணக்கப்பிள்ளையும் பிரதான பாத்திரங்களாக விளங்குகிருர்கள். இப் பாடல்களில் பழைய புராண காலத்துக் கவிகளைப் பின்பற்றும் எத்தனங்கள் காணப்படுகின்றன.

இவற்றிலுள்ள அற்புதமான சொற் சேர்க்கையையும், கற்பனை நிறைந்த கவித்திறனையும் அப்படியே படம் பிடித்து வேறெந்த மொழியிலும் மொழி பெயர்ப்பது முடியாத காரியம். இவ்வழகான பாடல்களின் முழுச் சுவையையும் வேறெரு மொழியில் எடுத்துக் காட்ட இயலாது. ஆயினும், இப் பாடல்களின் கவிதை நயத்தையும் அவை மலரத் தூண்டிய சூழ்நிலையையும் விளக்கக் கூடிய சில பாடல்களை இங்கு எடுத்துக் கொள்வோம்.

### மதுரையிலிருந்து

அக் காலத்தில், அதாவது 1855-ம் ஆண்டில், ஒரு ரயில் வண்டி நிறைந்த மக்கள் வட மதுரையை விட்டு இலங்கைக்கு புறப்பட்டிருக்கிருர்கள் என்ற செய்தி இங்கே தோட்ட பங்களாவுக்கு டெலிபோன் மூலம் தெரிவிக்கப் பட்டது. கிராமக் கவிஞன் இந்தச் சம்பவத்தைப் பின் வருமாறு வர்ணிக்கிருன்.

வண்டி வருகுதடி
வட மதுரை டேசனிலே
தந்தி வந்து பேசுதடி
தரும துரை வாசலிலே

"காதல்" கவிதைகளில் வரும் "வாசல் வளத்தை" நினைவூட்டுகின்றது அந்தக் கடைசி வரி. "வாசல் வளம்" பாடுவதற்கு இலக்கியப் புலவன் சுமார் 20 வரிகளை உபயோகிக்கிருன். ஆனல் ராமசாமி ஒரே வரியில் விஷயத்தை முடித்து விட்டான்.

கோப்பித் தோட்டங்கள் அழிந்து, நாசமானதற்குப் பிறகு தேயிலைச் செடியின் பச்சை வர்ணம் மலைநாடு முழுவதும் வியாபித்தது. தேன் கூடு போன்ற ஜன்னல்களுடனும், யந்திர சாலைகளோடும் புதிய தொழிற்சாலையொன்று முளைத்து விட்டது. இந்தப் புத்தம் புதிய இடத்தில் வேலை செய்வதென்ருல் அது ஓர் ஆனந்தமான அனுபவமாகிவிட்டது. இலை பொறுக்கும் இள மங்கை தனது தோழிகளைக் கூவி அழைக்கிருள்:

ஸ்டோரும் கட்டியாச்சு
இஞ்சினும் பூட்டியாச்சு
இள வட்ட பொண்டுகளா
எலை பொருக்க வந்துருங்க.

### மலைமேல்

இனி, மலையில் என்ன நடக்கிறதென்பதைப் பார்ப்போம். நாள் முழுவதும் செடிக்குச் செடி சென்று "ரண்டு எலையும் ஒரு திரியும்" பறித்து விட்டாள் அந்த மங்கை. வீடு போவதற்கு நேரமாகி விட்டது. அசல் ராஜதந்திரி போல கணக்கப்பிள்ளையிடம் கூறுகிருள்:

பொட்டு பொட்டா பொஸ்
தகமாம்
பொன் பதிச்ச பேனு
குச்சியாம்
ஆதரிச்சு பேரு போடும்
ஐயா, கணக்கப்புள்ளே—
பொழுதும் எரங்கிரிச்சு
பூமரமும் சாஞ்சிரிச்சு
இன்னம் எறங்கலையோ
எசமான் ஒங்க மனம்
அவசரமா நான் போரேன்
அரப்பேரு போடாதிங்க.

காதல் விஷயத்தில் எந்தக் கற்பனைப் புலவனும் தேயிலைத் தோட்டத்து நங்கைகளிடம் பாடம் கேட்க வேண்டும். 'முள்ளுக்குத்தும்மலை'யிலிருந்து காதலன் ஆசைக் கண் சிமிட்டுகிருன். இதைக் கவனித்த பெண் தனக்குள்ளேயே பாடிக் கொள்ளுகிருள்:

முந்நூறு ஆளுக்குள்ளே
முள்ளக் குத்தும் என் சாமி
முள்ளு மூனும் மண்ணுக்
குள்ளே
முளிகள் ரெண்டும்
என்மேலே.

காதலன் தோட்டத்தை விட்டு ஊவாமாகாணத்துக்குப் போகிருன். பிரிவு ஏற்படுகிறது. உள்ளம் உடைந்து விடுகிறது. கரங்களும், கண்களும், இதயமுமே வேலை செய்ய மறந்து விட்டன—அப் பெண்ணுக்கு:

கோப்பியிலே கொழுந்து
மில்லே
கொழுந்தெடுக்க சிந்தயில்லே
வாங்கடி பொண்டுகளா
வதளைப் பக்கம் போயிடு
வோம்.

அந்நாட்களில், வாலிப முறுக்கு தலைமைக் கங்காணியின் மனைவியைப் பற்றி மிகவும் பெரிதாக எண்ணிவிட்டது. ஆனல், ஏமாற்றம் உண்டான போது வாயைப் பிளக்கிருர்:

கங்காணி பொண்டாட்டி
காசுக்காரி எண்டிருந்தேன்
பச்சைக்காட்டு தொங்கலிலே
மொச்சைக் கொட்டை
விக்கிருளே.

காதல் உலகத்து 'அம்பிகாபதி' களையும் கிராமத்துக் கவிஞன் விட்டு விடவில்லை. இதோ அவருக்கு ஒரு சாட்டை:

பாட்டுக்கு பணிய லயம்
பந்தடிக்க மேட்டு லயம்
பேச்சுக்கு பீலிக்கரை
வாச்சதடி மன்னனுக்கே.

### 'துரைமேல் குத்தமில்லை'

பொதுவாக, தொழிலாளர் தோட்டத்துரை மீது எவ்வித குற்றமும் காண்பதில்லை. ஆனல், குற்றம் எங்கேயிருக்கிறதென்பது அவர்களுக்கு நன்ருகத் தெரியும்:

தோட்டம் பிரளியில்லே
துரைமேலே குத்தமில்லே
கங்காணி மாராலே
கனபிரளி யாகுதையா

1921 ஆம் ஆண்டின் பின்னர் மக்கள் கவிஞன் பாடவில்லை. மதுரை பாஸ்கர தாஸின் தேசியப் பாடல்களும், பின்பு 1930 ஆம் வருடங்களில் மகா கவி பாரதியின் உணர்ச்சி மிக்க கவிதைப் பிரளயமும் அவனை ஆட்கொண்டுவிட்டன. அவருடைய தேயிலைத் தோட்டப் பாட்டுகள் ஏறத்தாழ 10 வருடங்களாக தோட்டத் தொழிலாளரிடையே ஆட்சி புரிந்தன. ஆனல், இன்று, சினிமாப் பாட்டுகள் மேலோங்கி விட்டன. பழைய பரம்பரையுடன் எழில்மிக்க இந்நாட்டுப் பாடல்களும் மறைந்து போகின்றன.

---

## ஈழத்தின் இயற்கைக் காட்சிகள்

★

### 'போட்டோ' அழகுப்போட்டி: மூன்று பரிசுகள்

இலங்கையின் இயற்கை அழகு உலகப் புகழ் பெற்றது. யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருக்கோணமலை, மலைநாடு உட்பட இலங்கையின் பல பகுதிகளிலும் இயற்கை அன்னையின் வனப்புக்கள் மக்கள் மனத்தைப் பெரிதும் கவர்ந்து ஈழ நாட்டுக்குப் பெருமை அளிக்கின்றன.

நீங்கள் விரும்பும் அழகுக் காட்சிகளைப் படம் பிடித்து **கலைப்பகுதி, ஈழநாடு, தபாற் பெட்டி எண் 49, யாழ்ப்பாணம்.** என்ற விலாசத்துக்கு அனுப்புங்கள்.

இப்படங்களில் தரமானவற்றை அவ்வப்போது 'ஈழநாடு' இதழ்களில் பிரசுரித்து, சன்மானம் அளிப்போம். ஒரு குறிப்பிட்ட காலத்துக்குப் பிரசுரமான படங்களைத் தொகுத்து, அவற்றுள் மிகச் சிறந்த மூன்று போட்டோக்களை கலைவல்லுனர் மூவர் அடங்கிய குழு தெரிந்தெடுப்பார்கள். இவற்றுக்கு முறையே ரூ 50, ரூ 25, ரூ 15 என மூன்று பரிசுகளை **ஈழநாடு** அளிக்கும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ளுகின்ரேம்.

★ போட்டோவின் அளவு, 6" X 4"

★ முடிவு திகதி 31-12-59

படங்களுடன் அதுபற்றிய குறிப்பும் அனுப்பப் படவேண்டும். படம் அனுப்புபவரின் பெயரும் விலாசமும் கடதாசியில் தெளிவாக எழுதிப் படத்துடன் இணைத்தல் வேண்டும்.

**கலாநிலையப்பதிப்பகம்**
**யாழ்ப்பாணம்**

---

## 'நான் இருக்கிறேன்'

(4ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதே கோபத்தில் கவுண்டரும் அதை எடுத்துக் கொண்டு வெளியேறினர்..

"ஏனிப்படி சாட்சிக்காரரிடம் சண்டை போட்டுக் கொள் றீங்க?" என்று கேட்டுக் கொண்டே வீட்டுக்குள்ளிருந்து வந்தாள் அவர் மனைவி, ஆபீஸ் அறைக்கு.

"சரி, சரி, நீ உன் வேலையைப் பார்த்துக் கொண்டு உள்ளேயே இரு!" என்று அதட்டினர் வக்கீல்.

"ஆமா, உங்களுக்கு இந்தக் கோபம் ஆகாது." என்று மேலும் ஏதோ சொல்ல ஆரம்பித்த அவர் மனைவி, யாரோ உள்ளே வருவதைப் பார்த்து சட்டென வீட்டிற்குள் போய் விட்டாள்.

"என்ன மிஸ்டர் நீலகண்டம் வாங்களேன், இப்படியே வாக்கிங் போயிட்டு வரலாம்" என்று சொல்லிக் கொண்டே கிரிமினல் லாயர் எமகண்டம் உள்ளே வந்தார், 'வாக்கிங் ஸ்டிக்கை'ச் சுழற்றிக் கொண்டே.

"ஓஹோ, நீங்களா, வாங்க சார்; உக்காருங்க; இதோ வந்திட்டேன் ...... ம் ... என் கேஸ் வாய்தா நாளைக்குத் தானே போட்டிருக்கு? எதிரியை என்னென்ன 'க்ராஸ்' செய்யணும் என்கிறதை நானும் ஒரு குறிப்புத் தயாரிச்சிருக்கிறேன், இதோ பாருங்கோ" என்று ஒரு நீண்ட காகிதத்தை எடுத்து நீட்டினர் வக்கீல் நீலகண்டம்.

"அட, சும்மா வையுங்க சார். அதைப் பத்தியே ஏன் மண்டையை உடைச்சுக் கொள் றீங்க? நானிருக்கிறேன். கவலையை விடுங்க ...... வாங்க, வெளியே போகலாம்" என்று உட்காராமலேயே பேசினர் வந்த எமகண்டம்.

'நானிருக்கிறேன்' என்ற அந்த வார்த்தை நீலகண்டத்தின் மனதை மிகவும் உறுத்தியது. அப்போதுதான் கவுண்டர் மனதையும் அவர் சற்று நிதானித்து யோசித்தார். 'நானிருக்கிறேன்' என்று அவர் வாய், அவரையும் அறியாமல் முணுமுணுத்தது.


'ஹென்ற்லி'
உடை அலங்காரத்தின்
உன்னத அடையாளமாகும்

ஹென்ற்லி

சேட்
காற்சட்டை
ஷோட்ஸ்

ஹென்ற்லி சேட், காற்சட்டை, ஷோட்ஸ் ஆகியவற்றை அணியும் ஆடவரும், இளைஞரும் சௌகரியத்தை அனுபவிப்பதுடன் வசீகரமான தோற்றத்தையும் பெற்று அழகுடன் விளங்குகின்றனர்.

ஹென்ற்லி உடைவகையில் நீங்கள் எதைத் தெரிந்தெடுத்து வாங்கினலும், அது கொடுத்த பணத்திற்கு நிறைந்த பெறுமதியாகும்.

ஹென்ற்லி (காமெண்ட்ஸ்) லிமிடெட்,
பழைய விமான நிலைய வீதி,
(Old Air Port Road)
இரத்மலானை.

# ஆசியாவை அதிரவைத்த சம்பவம்

## 'பஞ்சசீலம்' தோல்வியுற்றுவிட்டதா ?

— மயில்வாகனன் —

இந்தியாவின் வடகிழக்கு எல்லையில் சென்றவாரம் செஞ்சீனத் துருப்புக்கள் நுழைந்து, அங்குள்ள லொஞ்சு என்னும் இடத்தைக் கைப்பற்றிய சம்பவம் உலகத்தை, முக்கியமாக ஆசியாக் கண்டத்தை அதிர வைத்துவிட்டது. இந்தச் சம்பவத்தையிட்டு லோகசபையில் நேரு பேசும்பொழுது, அதைச் "சீன ஆக்கிரமிப்பு" என்று கூறியுள்ளார்.

செஞ்சீனத்தின் இந்த நடவடிக்கைக்கு உடன் காரணம் யாதோ தெரியவில்லை. ஆனாலும், திபேத்தின் மேல் செலுத்தி வரும் ஆதிக்கத்தை ஸ்திரமாக நிலைநாட்டுவதற்கு, இந்தியாவின் வடகிழக்கு எல்லைப் பிரதேசங்களைக் கைப்பற்றினால் உதவியாகவிருக்கும் என்ற எண்ணம் அடிப்படைக் காரணமாக அமைய இடமுண்டு. இந்திய எல்லைகளிலுள்ள நாடுகளிலிருந்து திபேத் கலகக்காரர்களுக்கு உதவி கிடைத்திருக்கிறது என்று செஞ்சீனம் சில காலமாக இந்திய அரசாங்கம் மீது குற்றம் சாட்டிவருவது நாம் இங்கு நினைவுபடுத்த வேண்டியதொன்றாகும்.

அமெரிக்கா பிரிட்டன் முதலிய நாடுகளிலுள்ள பத்திரிகைகள் செஞ்சீனத்தின் செயல் பொதுவாக எல்லாப் பொதுஉடைமை நாடுகளுக்கும் உரித்தான செயலென்று வியாக்கியானம் செய்கின்றன. அத்துடன் இந்தச் சம்பவத்தை ஆதாரமாக வைத்துக்கொண்டு, பொதுவுடைமைக் கொள்கைக்கு எதிராகவும் பிரசாரம் செய்துள்ளன.

சில பத்திரிகைகள் வேறுவிதமான காரணம் காட்ட எத்தனித்துள்ளன. விரைவில், அமெரிக்கத் தலைவர் ஐசன்ஹோவரும், ருஷ்யத் தலைவர் குருஷேவும் சந்திக்கவிருக்கின்றனர். இந்தச் சந்திப்பு செஞ்சீனத்துக்கு அவ்வளவு பிரியமில்லை யென்றும், இந்நேரத்தில் தானும் உலகில் ஒரு பெரிய வல்லரசு என்பதை எடுத்துக்காட்ட அது விரும்புகிறதென்றும், அந்த விருப்பத்தைச் செயல்முறையில் எடுத்துக்காட்டவே இந்தியாவுடன் இந்த எல்லைத் தகராறைத் தொடக்கியுள்ளதென்பதுமே இப் பத்திரிகைகள் செஞ்சீனத்தின் நடவடிக்கைக்குக் கொடுக்கும் விளக்கமாகும். ஆனால், இந்த விளக்கமும் சரியாகத் தோன்றவில்லை. செஞ்சீனம் ஒரு வல்லரசு நாடு என்பதை உலகம் எப்பொழுதோ ஒப்புக்கொண்டு விட்டது. தவிர, முக்கியமாக இந்தியாதான் செஞ்சீனத்தை ஒரு வல்லரசாக அங்கீகரித்து, ஆதரவளித்து வந்துள்ளது. ஐ. நா. சபையில் செஞ்சீனத்துக்கு இடம் அளிக்கப்படவேண்டும் என்ற பிரேரணையை இந்தியா தான் பலமுறை ஐ. நா. சபையில் கொண்டுவந்து, வாதாடியுள்ளது. ஆகையினால், தாம்ஒரு வல்லரசு என்று தம்பட்டம் அடித்துக்கொள்வதற்காகச் செஞ்சீனம் இந்தியாமீது படையெடுத்துள்ளது என்ற வாதம் ஏற்றுக்கொள்ளக் கூடியதன்று.

அப்படியானால், செஞ்சீனம் எடுத்துள்ள நடவடிக்கைக்குக் காரணம் என்ன? இச் செயலுக்குக் காரணம் காண முயன்றால், அது திபேத் சம்பந்தமாக இந்திய அரசாங்கம் எடுத்துக்கொண்ட நிலையேயாகும். பிரதமர் நேரு திபேத் சீன அரசாங்கத்தின் அதிகாரத்துக்குட்பட்ட நாடென்பதை ஒப்புக்கொண்டபோதிலும், அது உள்நாட்டு விவகாரம் என்பதை ஏற்றுக்கொண்ட போதிலும், அவரும் அவரது அரசாங்கமும் திபேத் விஷயமாக மிகுந்த அக்கறை காட்டியது செஞ்சீன அரசாங்கத்துக்கு எரிச்சலை மூட்டியிருக்கலாம். அத்துடன், தலாய் லாமாவுக்கும், அவருடைய பரிவாரங்களுக்கும் புகலிடமளித்ததுடன், திபேத் கலகம் சம்பந்தமாக தலாய்லாமாவை இந்தியாவில் பிரசாரஞ் செய்ய அரசாங்கம் அனுமதித்ததும் செஞ்சீன அரசாங்கத்துக்குப் பிடிக்காம லிருந்திருக்கலாம்.

செஞ்சீனம் தனது பூகோளப் படத்தில் இந்திய நாட்டின் சில பாகங்களைச் சேர்த்திருக்கிறது என்ற குற்றச்சாட்டையும் பலமுறை இந்திய லோகசபையில் அங்கத்தவர் பலர் செய்துள்ளனர். இவ்விஷயம் பற்றி பாரதப் பிரதமர் நேரு சீன அரசாங்கத்திடம் முறையிட்டுள்ளார். ஆனாலும், இதுவரை சீன அரசாங்கம் ஒரு திட்டவட்டமான பதில் இறுக்கவில்லை.

இவற்றை எல்லாம் ஆராயும் பொழுது, செஞ்சீன அரசாங்கம் இந்தியாவின் எல்லைப்புறப் பிரதேசங்களில் ஒரு கண் வைத்துள்ளது என்ற முடிவுக்குத்தான் வரவேண்டியிருக்கிறது. எல்லைப்பிரதேசங்களைத் தன் பாதுகாப்பில் வைத்துக் கொண்டால், இனிமேல் இந்திய எல்லைகளிலிருந்து உள்நாட்டுக் கலகங்களுக்கு ஆதரவு கிடைக்காமல் செய்யலாமென்ற எண்ணம் செஞ்சீனத்தை எல்லைப்பிரதேச 'ஆக்கிரமிப்'பில் இறங்கச் செய்திருக்கலாம்.

செஞ்சீனத்தின்செயல் அதன் மதிப்பை முக்கியமாக ஆசிய நாட்டின் கண்ணில் குறைத்து விட்டதெனில் அது மிகையாகாது. எல்லைப்புறச் சம்பவத்துக்குப் பின்னரும் இந்தியப் பிரதமர் நேரு இரு நாடுகளுக்குமிடையே ஏற்பட்டுள்ள பிரச்சினைகளைப் பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்க்க வேண்டுமென்று வலியுறுத்தியுள்ளது வரவேற்கத்தக்கதாகும்.

செஞ்சீனத்தின் நடவடிக்கை பஞ்சசீலக் கொள்கைக்கே தோல்வி யென்று சொல்லிவிட முடியாது. ஆனால் அதுஒரு உண்மையை உலகிற்குப் புலப்படுத்துகின்றது. அதாவது, பஞ்சசீலக்கொள்கைசரி, வேறுஎந்த விதமான சர்வதேச சமரசக் கொள்கையானாலும் சரி, அந்தக் கொள்கைக்கு அஸ்திவாரமாக இருக்கவேண்டியவை, பரஸ்பர நல்லெண்ணமும், அசைக்கமுடியாத நம்பிக்கையுமே. இந்த உண்மையை உலகிலுள்ள எல்லா நாடுகளும் நன்குணர வேண்டும்.

---

## இளம் விவசாயிகள்நாட்டின் நலனுக்காக உழைத்தல் வேண்டும்

'யாழ்ப்பாணத்திலுள்ள இளைஞர் விவசாயக் கழகங்களின் அறிக்கையைப் பார்த்து மகிழ்ச்சியடைகிறேன். ஒன்று பட்டால் உண்டு வாழ்வே என்ற உயரிய நோக்கைப் பின்பற்றி இளம் விவசாயிகளாகிய நீங்கள் நாட்டின் நலனுக்காக உழைக்கவேண்டும்.' இவ்வாறு சென்ற சனிக்கிழமை யாழ்ப்பாணம் திருநெல்வேலி அரசினர் விவசாயக்கமத்தில் நடைபெற்ற யாழ்ப்பாணம் மாவட்ட இளைஞர் கமத்தொழிலியக்க மகாநாட்டையும் பொருட்காட்சியையும் திறந்து வைத்த கிருஷிகப்பகுதி உதவி அதிபர் திரு. ஏ. வி. றிச்சாட்ஸ் தமது பேச்சிற் குறிப்பிட்டார். திரு. றிச்சாட்ஸ் தொடர்ந்து பேசியதாவது: யாழ்ப்பாணத்தில் கோழி வளர்ப்பு மிகவும் விருத்தியடைந்திருப்பது மகிழ்ச்சிக்குரியதே. முருங்கைக்காய் உற்பத்தியையும் நீங்கள் விருத்தி செய்ய வேண்டும். இலங்கையில் 3000 இளைஞர் விவசாயக் கழகங்கள் உள. இன்னும் பல நிறுவப்படவிருக்கின்றன. இவ்விழாவுக்கும் பொருட்காட்சிக்கும் பல்லாயிரக் கணக்கான ஆண்களும் பெண்களும் விஜயம் செய்திருந்தனர்.

அரசாங்க அதிபர் திரு. ம. ஸ்ரீகாந்தா, திரு. ஏ. ரி. வேதாபரணம், மாகாண விவசாய அதிகாரி திரு. எஸ். கனகரத்தினம் ஆகியோரும் விரிவுரையாற்றினர். இவ்விழாவை முன்னிட்டு வெளியிடப் பெற்ற மலரில் விவசாயம் பற்றிய நல்ல கட்டுரைகள் உள. இளம் விவசாயிகளின் கதம்பக்கச்சேரியுடன் விழா நிறைவேறியது.

---

## இந்தோனேஷியாவில் ஜனநாயகம் தழைக்குமா ?

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

### ஏனைய காரணங்கள்வருமாறு:

1. தீவுகள் அடங்கிய குடியரசு நாடாக இருப்பதால் ஜாவாவில் இருக்கும் மத்திய அரசாங்கம் ஒற்றையாட்சி முறையில் நிருவாகத்தைக் கொண்டு செலுத்துவது சிரமமான காரியமாக இருக்கின்றது. பல கட்சிகள் இருப்பதால் தீவுகளில் கலவரங்கள் ஏற்பட்டு மத்திய அரசாங்கத்திற்கு அதிக தொல்லைகளைக் கொடுத்துவருகின்றன. பல மாதங்களாக இத்தகைய கலவரங்கள் அரசாங்கத்திற்கு எதிராக சுமாத்திரா, செலீபஸ் போன்ற தீவுகளில் நடைபெற்றிருக்கின்றன. இதனால் அரசாங்கம் யுத்த தளவாடங்களை வாங்குவதற்குப் பணம் செலவிட வேண்டியநிலை ஏற்பட்டது.

2. மேற்கு நியூகினியை இந்தோனேஷியாவுடன் இணைப்பதற்கு ஒல்லாந்து மறுத்துவருவதை ஆட்சேபிக்கும் முகமாக இந்தோனேஷியாவில் பெருந் தோட்டங்களையும், வியாபாரத் தாபனங்களையும் நிருவகித்து வந்த ஒல்லாந்தரை இந்தோனேஷிய அரசாங்கம் வெளியேற்றி வருகின்றது: இதனால் தோட்டங்கள் பாழடைந்து ஏற்றுமதி குன்றிப் பொருளாதாரம் பாதிக்கப்பட்டிருக்கிறது. 1957 இல் 25,000 ஆக இருந்த ஒல்லாந்தரின் எண்ணிக்கை 1959 இல் 300 ஆகி விட்டது!

3. ஏற்றுமதி குன்றியதால் இறக்குமதியும் குறைந்து விலைவாசிகள் ஏறிப் பணவீக்கம் தோன்றியிருக்கின்றது. இவற்றோடு உணவுப் பொருள்கள், உடைகள் ஆகியன வற்றுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டு மக்கள் தவிக்கின்றனர்.

4. புதிய அரசியல் திட்டம் குறித்து கட்சிகளிடையே அபிப்பிராய பேதம் நிலவி வந்தமையால் அரசியல் நிர்ணயசபை கலைக்கப்பட்டு, இராணுவத்தின் உதவியுடனும் பல நியமன மந்திரிகள், உதவி மந்திரிகள் ஆகியோரின் உதவியுடனும் ஜனாதிபதியின் ஆட்சி சென்ற 6-7-59 தொடக்கம் "இயக்கப்படும் சனநாயகம்" என்ற போர்வையில் நடைபெறுகின்றது.

அரசியல் கட்சிகளின் நடவடிக்கைகள்மீது விதிக்கப்பட்டிருக்கும் தடை 1-8-59 இல் ஓரளவுக்குத் தளர்த்தப்பட்டிருக்கிறது. மக்களுக்கு உணவுப் பொருள்களையும் உடைகளையும் வழங்கி உள்நாட்டுப் பாதுகாப்பை வலுப்படுத்துவதே ஜனாதிபதி சுகர்னோவின் நோக்கமாகும். இவருடைய 'இயக்கப்படும் சனநாயகம்' ஐந்து ஆண்டுகளுக்குத் தொடர்ந்திருக்கும் எனவும் அறிவித்திருக்கிறார். ஆகவே இந்தோனேஷியாவில் ஜனநாயகம் மீட்சி பெற்று தழைத்தோங்கும் காலம் மிக அண்மையில் இல்லை எனத் தோன்றுகின்றது.

---

## இப்படியும் சொன்னார்கள்

முன்னாள் உணவு, விவசாய மந்திரியின் விவேகமற்ற செயலால், வட மத்திய மாகாணத்தில் மாடுகள் திருடப்படுவது அதிகரித்துள்ளது.

**—மைத்திரிபால சேனநாயக்கா.**

யு. என். பி., தமிழர், கத்தோலிக்கர், அமெரிக்கர் எல்லோருமே சிங்களக் கலாச்சாரத்தின் எதிரிகள். நமது பண்டைய கலாச்சாரத்தை நாம் பாதுகாக்க வேண்டுமேயானால், அது எமது பழம் பெரும் அரசரின் போர்முறையைப் பின் பற்றுவதாலேயே முடியும்.

**—எஸ். டி. பண்டாரநாயக்கா.**

இந்நாடு கொம்யூனிஸ்ட் முறையை ஏற்குமேயானால், நான் எனது காவியுடையைக் கழற்றி வீசி விட்டுச் சாதாரணப் பிரசையாகி விடுவேன்.

**—ஒரு புத்த பிக்கு.**

எமது பாராளுமன்றம் ஒரு தேசியச் சலவைத் தொழிற்சாலை மாதிரி. ஒவ்வொருவரினதும் அழுக்கும் இங்கே தான் கழுவப்படுகிறது.

**—மொகமெட் அலி எம். பி.**

இலங்கை, நெற்பயிர்ச் செய்கைக்கு மிகவும் உகந்த நாடாகும். ஆனால், மற்ற நாடுகளுடன் ஒப்பிடும் போது, அதன் உற்பத்தி பின்தங்கியே நிற்கிறது. இதற்கு முக்கிய காரணம், இங்குள்ள விவசாயிகளின் சோம்பேறித்தனமே.

**—விமலா விஜயவர்த்தனா.**

எனக்கு எதிராகக் கைலஞ்சப் புகார்கள் செய்யப்பட்டன. ஆனால், தெய்வங்களுக்குத் தெரியும் நான் நிரபராதியென்பது. நான் சொல்வது பொய்யானால், என் மீது இடி விழட்டும்.

**—ரி. பி. இலங்கரத்தின.**

இன்று நாட்டை ஆளும் அரசாங்கம் ஒரு ஜனநாயக, சோஷலிஸ அரசாங்கமேயாகும்.

**—ஸ்ரான்லி டி' சொய்ஸா**

---

## தமிழ் மாகாணங்களுக்கிடையில் 'ஒற்றுமைப்பாலம்' அமையுங்கள்

### மாணவர்களுக்கு எம். பியின் போதனை

கோண்டாவில்

"மட்டக்களப்புத் தமிழரென்றும் யாழ்ப்பாணத் தமிழரென்றும் பிரிவினை உண்டாக்கித் தமது சுய நலத்துக்காகத் தமிழ் பேசும் மக்களைப் பிரித்து வைக்க கிழக்கு மாகாணத் தமிழ்த் தலைவர்கள் சிலர் முயற்சிக்கின்றனர். கிழக்கு மாகாண மக்கள் தெரிவு செய்து அனுப்புகின்ற பிரதிநிதிகளில் ஒரு சிலர் தேர்தலில் வெற்றிபெற்ற பின்னர் மக்கள் விருப்பத்துக்கு மாறாகவே நடந்துகொள்ளுகின்றனர். எந்தக் கொள்கைகளுக்கு எதிராகப் பேசி வெற்றி பெறுகிறார்களோ, அதே கொள்கைகளைப் பின்பு ஆதரித்துத் தமக்குப் பட்டமும் பதவியும் பெறப் பல பிரதிநிதிகள் முயற்சித்துள்ளார்கள். இத்தகைய பிரதிநிதிகளுக்கு வாக்காளர் அடுத்து வரும் தேர்தலில் நல்ல பாடம் கற்பிப்பார்கள்".

மட்டக்களப்புக் கூட்டுறவுப் பயிற்சிச்சாலை மாணவர்களும் ஆசிரியர்களும் தமது சுற்றுப் பிரயாணத்தின்போது, கொக்குவிலை அடைந்தபோது அன்று காலை "தமிழன் பாசறை"யில் விருந்துபசாரம் நடைபெற்றது. இவ்வைபவத்தில் கோப்பாய்த் தொகுதிப் பிரதிநிதி திரு. கு. வன்னியசிங்கமும் கலந்து கொண்டு மேற்கண்டவாறு பேசினார். அவர் தொடர்ந்து பேசியதாவது:

"தமிழரசுக்கட்சி கிழக்கு மாகாணம் பற்றிப்பேச உரிமையற்றதானால், திரு. முஸ்தாபாவுக்கு அவ்வுரிமை எப்படி வந்தது? அவரும் கட்சியின் பெயரில் வெற்றிபெற்றவர்களில் ஒருவர் அல்லவா? கட்சியின் செல்வாக்குத்தான் தமது வெற்றிக்குக் காரணம் என்பதையும் தாமே ஒப்புக்கொண்டாரே! அதனை இப்போது மறந்துவிட்டாரா? நாம் எங்கிருந்தாலும் ஒற்றுமையாக வாழவேண்டும். அப்போது தான் விமோசனம் கிடைக்கும். தமிழ் மாகாணங்களுக்கிடையில் ஒற்றுமையை வளர்த்துப் பாலம் அமைக்கச் சகலரும் பாடுபட வேண்டும்". —ந. நி.

---

## யாழ்ப்பாணத்திற்கு விஸா காரியாலயம் அவசியமானது

யாழ்ப்பாணத்தில் இந்திய விஸா காரியாலயம் ஒன்றை உடனடியாகவே நிறுவ வேண்டும் என்று இங்கு பல பிரமுகர்கள் கருதுகின்றனர். இது பற்றிப் பிரமுகர் ஒருவர் நமது நிருபரிடம் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாணத்தில்ஒரு விஸாக் காரியாலயத்தின் அவசியம் பற்றி யாழ்ப்பாணம் சைவ மகாசபையும் யாழ்ப்பாணம் மாநகர சபையும் அரசாங்கத்திடம் தெரிவித்துள்ளன. ஆனால் இதுவரை எதுவித நடவடிக்கையையும் அரசாங்கம் எடுத்ததாகத் தெரியவில்லை. இலங்கை அரசாங்கம் இத்துறையில் ஊக்கம் எடுக்காவிடினும் இலங்கையில் மூன்று விஸா காரியாலயங்களை ஏற்படுத்த இந்திய அரசினருக்கு உரிமையிருக்கிறது. இதுவரையில் இந்திய அரசாங்கம் இரண்டு விஸா காரியாலயங்களையே ஏற்படுத்தியுள்ளது. மூன்றாவது காரியாலயத்தை யாழ்ப்பாணத்தில் நிறுவ வேண்டுமென்ற கருத்து பலரிடையே நிலவி வருகிறது. ந. நி

# நாவலர் வழிவந்த பண்டிதமணிக்கு நாடு உவந்தளித்த பாராட்டுமாலை

— அஜன் —

தமிழ்ப் பேராசானாகிய பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை நாவலர் நெறி நின்று, சைவத்தையும் தமிழையும் வளர்த்து வந்த பெரியாராவர். இவரும் சைவாசிரிய கலாசாலையில் உப அதிபராக உழைத்த திரு.பொ. கைலாசபதியும் திருநெல்வேலியின் இருகண்களாக விளங்கினர். இவ்வாறு நீதிபதி சி. தம்பித்துரை அவர்கள், பண்டிதமணிக்கு அவரது பழைய மாணவர்கள் நடாத்திய பாராட்டு விழாவிற்குத் தலைமை தாங்கிப் பேசும்போது குறிப்பிட்டார்.

சென்ற சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் திருநெல்வேலி சைவ வித்தியாசாலையிலும், பண்டிதமணியின் பிறப்பிடமான மட்டுவிலிலும், யாழ்ப்பாணம் நகர மண்டபத்திலும் பாராட்டு விழாக்கள் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பெற்றன.

திருநெல்வேலி சைவ வித்தியாசாலை மண்டபம் சனிக்கிழமையன்று மகர தோரணங்களுடனும், மலர் மாலைகளுடனும் அழகுற விளங்கியது. பண்டிதமணியவர்கள் திருநெல்வேலி இந்து வாலிபர் சங்க மண்டபத்திலிருந்து ஊர்வலமாக வித்தியாசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். பண்டிதமணியின் பழைய மாணவ, மாணவிகள், மற்றும் பல பிரமுகர்களும், அறிஞர்களும் விழா மண்டபத்தில் குழுமியிருந்தனர்.

நீதிபதி தம்பித்துரை அவர்கள் பண்டிதமணி தமிழுக்கும், சைவத்திற்கும் ஆற்றிய அரும் பணிகளைப் பாராட்டியதுடன், அவருடைய படத்தையும் திறந்து வைத்தார். அத்துடன், பண்டிதமணி தொடர்ந்து நாட்டுக்கு நற்பணிகள் பல ஆற்ற வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார்.

### நகைச்சுவை

முன்னாள் உப அதிபர் திரு. பொ. கைலாசபதி தத்துவார்த்தக் கருத்துக்கள் நிறைந்த ஒரு விரிவுரையைத் தமக்கே உரித்தானமுறையில் பேசினார். நகைச்சுவையுடன் பேசும் ஆற்றல் பண்டிதமணிக்கு மிகுதியும் உண்டெனவும் அவருடைய சொற்பொழிவுகளைக் கேட்டுக் கொண்டிருந்தால் நேரம் போவதே தெரியாதெனவும் பண்டிதர் பொ.கிருஷ்ணபிள்ளை தமது பேச்சில் குறிப்பிட்டார். புலோலி இந்துக்கல்லூரி அதிபர் திரு. த. இராமநாதபிள்ளை பண்டிதமணியின் புலமையைப் போற்றியதோடு அவருடைய விரிவுரைகளையும் கட்டுரைகளையுங் கண்டு கேட்டுணர்ந்தோர் அவரை நல்லிசைப் புலவர் என்றே போற்றுவார்கள் எனக் கூறினர்.

முன்னாள் கல்வி உதவி அமைச்சர் திரு. க. கனகரத்தினம் பேசியதாவது; ஈழநாட்டில் இன்று தமிழ் மன்னர்களின் ஆட்சி நடைபெறுமாயின், எங்கள் தமிழ்ப் பேராசானாகிய பண்டிதமணி கணபதிப்பிள்ளையைப் பல்லக்கில் ஏற்றிக் கொடி, குடை, ஆலவட்டங்களுடன் ஊர்வலமாக அழைத்துச்சென்று கௌரவித்திருப்பார்கள். இன்று தமிழ் அறிஞர்களுக்கு நாட்டில் மதிப்பில்லை. அரசியல்வாதிகளைத் தான் மேடைகளில் ஏற்றி மாலை சூட்டி வருகின்றனர். பண்டிதமணியின் ஆற்றலை நாடு பயன்படுத்தவேண்டும். அவரிடமிருந்து தமிழ்மக்கள் உபயோகமான பல காரியங்களை எதிர்பார்க்கின்றனர்.

### மாலை நிகழ்ச்சிகள்

மத்தியான விருந்துக்குப் பின்னர், மாலை நிகழ்ச்சிகள் திரு. சி. சுவாமிநாதனின் தலைமையில் நடைபெற்றன. பண்டிதமணியின் அபாரமான விவேக சக்தியையும் சைவாசிரிய கலாசாலையில் அவர் பாடங்களை மாணவர்களுக்குச் சொல்லிக் கொடுக்கும் தனித் திறனையும் பெரிதும் பாராட்டினர். பண்டிதமணியிடம் வித்துவக் காய்ச்சல் இருந்ததில்லையென்றும், சரியெனக் கண்ட தமது முடிபுகளை எதிர்ப்புகளுக்கிடையேயும் நிலை நாட்டும் சக்தி வாய்ந்தவர் எனவும் பண்டிதவித்துவான் கா. பொ. இரத்தினம் குறிப்பிட்டார். தமிழ்மொழியை அனைவரும் பேணிக் காப்பது இந்நாட்களில் மிக மிக அவசியமெனவும் அவர் தெரிவித்திருந்தார்.

### தனிச்சிறப்பு

பண்டிதர் சோ. இளமுருகனார் பேசும்போது நாவலர் நெறிநின்று சைவத்தையும் தமிழையும் இன்று வளர்த்து வருபவர் பண்டிதமணியெனவும் தமிழ் இலக்கியத்திலுள்ள நுண்ணிய கருத்துக்களை அவர்கள் நயமாக எடுத்துரைக்கும் சிறப்பே தனியெனவும் கூறினார்.

ரோயல் கல்லூரித் தமிழ்த் துறைத் தலைவர் திரு. கி. இலட்சுமணனின் பேச்சு பண்டிதமணியின் எழுத்துக்களையும் கருத்துக்களையும் அடிப்படையாகக் கொண்டு அமைந்திருந்தது. அரக்கர்களின் பூமியாகிய லங்காபுரியில் அன்று இராவணன் பத்துத் தலைகளுடன் வாழ்ந்தான். இன்று இலங்கையிலுள்ள தமிழர் ஒற்றுமையின்றிப் பல தலைப்பட்டு வாழ்வது நாட்டுக்கு உகந்ததல்லவெனப் பண்டிதமணி ஒரு சமயம் எழுதியிருந்ததை திரு. இலட்சுமணன் சபையோருக்கு நினைவூட்டியிருந்தார். மணிவிழா வாழ்த்துக்களை இசைப்புலவர் சி. செல்வத்துரை இனிமையாகப் பாடினார். பாராட்டுவிழாச் செயலாளர் திரு. அ. பஞ்சாட்சரம் அனைவருக்கும் நன்றி கூறினார்.

### மணிமண்டபம்

பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்களின் பிறந்த இடமாகிய மட்டுவிலில் நிறுவப்பெற்றுள்ள பண்டிதமணி மணிமண்டபத் திறப்புவிழாவுடன் 30-8-59 ஞாயிற்றுக்கிழமை காலை மட்டுவில் நிகழ்ச்சிகள் ஆரம்பமாயின. அவ்வூர் மருதடிப் பிள்ளையார் கோவிலிலிருந்து ஊர்வலம் ஆரம்பமாயிற்று. அழகுற அலங்கரிக்கப்பெற்று விளங்கிய புதிய மண்டபத்தை யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் திரு. ம. ஸ்ரீகாந்தா திறந்துவைத்தார். முன்னாள் அதிபர் திரு. சி. சுவாமிநாதன் தலைமையில் விழா ஆரம்பமாயிற்று. திரு. மு. சுப்பிரமணியம் அனைவரையும் வரவேற்றுப் பேசும்போது பண்டிதமணி தமிழ் கூறும் நல்லுலகுக்குக் கிடைத்த அணிகலம் எனத் தெரிவித்தார்.

### உரைகல்

பண்டிதமணியின் படத்தை அரசாங்க அதிபர் ஸ்ரீகாந்தா திறந்துவைத்துப் பேசும்போது கூறியதாவது: பண்டிதமணிக்கு சைவந்தான் உயிர். தமிழ் அவர் மூச்சாகும். ஆழ்ந்த அறிவும் சிந்தனைவளமும் நிரம்பப் பெற்றுள்ள பண்டிதமணி நீதிக்கும் நேர்மைக்கும் உரைகல்லாக எங்கள் மத்தியில் விளங்கி நாடெங்கணும் ஒளி பரப்பி வருகின்றார். இப் பெருமை மட்டுவிற் பதிக்கே உரியதாகும். இன்று தமிழ்த்தாய் மகிழ்ச்சியுறும் வகையில் நாம் அவருக்கு விழா எடுக்கின்றோம்.

செல்வி பிரபாவதி மகாலிங்கசிவத்தின் பேச்சு அவருடைய தகப்பனாராகிய பரீட்சை எழுதாத பண்டிதர் மகாலிங்கசிவத்தை நினைவூட்டுவதாயிருந்தது. பி. ஏ. பட்டம் பெற்றுள்ள செல்வி பிரபாவதியின் இலக்கியப் பேச்சில் சைவத்தின் சிறப்பும் தமிழின் இனிமையும் செறிந்திருந்தன. மாணவர்களுக்குப் பண்டிதமணி தொடர்ந்து தமிழ் இலக்கிய அறிவையும் சமய ஒளியையும் ஊட்டிவரவேண்டுமென அவர் கேட்டுக்கொண்டார்.

### ஈரப்பலா நிழலில்

பனந்தோப்புக்களும், தென்னஞ் சோலைகளும், மரவள்ளித் தோட்டமும், தெளிந்த நீர் நிறைந்த கிணறுகளுமுள்ள திருநெல்வேலியைப் பின்னணியாகக்கொண்டு பண்டிதமணியின் இலக்கிய வாழ்வைப் படம் பிடித்துக்காட்டினார், வித்துவான் வே. சண்முகம். அங்குள்ள ஈரப்பலாவைப்பற்றி அவர் குறிப்பிட்டபோது,அதன் நிழலிலே பண்டிதரும் அவருடைய அன்பர்களும் கூடி "ஆட்களைப்பற்றியும், ஊர்ச் சங்கதிகளைப்பற்றியும் பேசியிருக்கிறோம்; சிலபல நூல்களையும் ஆராய்ந்திருக்கிறோம்" எனத் திரு. பொ. கைலாசபதி கூறியிருப்பது பலருக்கு நினைவில் உதித்திருக்கும்.

திரு. க. சுப்பிரமணியம் பேசும் போது தமிழ் இலக்கிய நூல்களைப் பண்டிதமணியின் காதலிகள் எனச் சுவையாக எடுத்துரைத்தார். பண்டித

(10ஆம் பக்கம் பார்க்க)

## பூஜ்யம் தபால்

திரு. சி. பா. ஆதித்தன்,
தலைவர்
"நாம் தமிழர்" மாநாடு,
சென்னை.

தலைவரே!

வணக்கம். சென்னையில் நடைபெற்ற "நாம் தமிழர்" மகாநாட்டில் தாங்கள் ஒரு முக்கியமான யோசனை கூறியதாகக் கேள்விப் பட்டேன்.

அதாவது, தமிழ் நாட்டிலே வீட்டில் யாராவது தமிழைத் தவிர வேறு மொழி பேசுபவராக இருந்தால் அவர்களையெல்லாம் அந்தந்த மொழி ராஜ்யங்களுக்கு அனுப்பி விட வேண்டுமென்று சொன்னீர்களாம். உண்மைதானா?

இந்த சமாச்சாரம் கன்னடத்தைத் தாய் மொழியாகக் கொண்ட பெரியார் ஈ. வெ. ரா. வுக்குத் தெரியுமோ?

தாங்கள் வகுத்துள்ள இக் கொள்கையை ஏற்கனவே இங்குள்ள சிங்களவாதிகள் பின்பற்ற ஆரம்பித்துள்ளனர். அதாவது மலை நாட்டிலுள்ள ஏறத்தாழ பத்து லட்சம் இந்திய வம்சாவளியினரும் வீட்டில் தமிழ் பேசுவதால் அவர்கள் அண்டையிலுள்ள தமிழ் நாட்டிற்குச் சென்று விட வேண்டுமென்று நேர்முகமாகவும் மறை முகமாகவும் நடவடிக்கை எடுக்கின்றனர். ஸ்ரீலங்காவில் சிங்களம் பேசுகிறவர்களைத் தவிர வேறு யாரும் இருக்கப்படாதென்ற நோக்கத்துடன் சிங்களம் மட்டும் சட்டம் நடைமுறையில் இருந்து வருகின்றது.

இதெல்லாம் தங்களுக்குத் தெரிந்திருக்கலாம். ஆகவே இங்குள்ள 25 லட்சம் தமிழ் பேசும் மக்களும் என்ன செய்ய வேண்டும்? ஒரு வேளை அவர்களெல்லாம் தமிழ் நாட்டுக்கு வர வேண்டி நேரிட்டால், அவர்களுக்கான வசதிகளை அங்கு செய்வீர்களா? அல்லது அதற்கிடையே தாங்கள் இங்கு வந்து சிங்கள வம்சாவளியினரை வங்காளத்துக்கு அனுப்பி வைக்க ஒழுங்கு செய்வீர்களா?

இப்படிக்கு
பூஜ்யம்.

குறிப்பு:-

ஒரே ஒரு சந்தேகம். "நாம் தமிழர்" இயக்கத் தலைவருக்கு ஒரு வட மொழிப் பெயர் ஏன் இருக்கிறது? என்று ஓர் அன்பர் கேட்கின்றார். இது பற்றி தங்கள் சமாதானமென்ன? ஆதித்தன் என்பதை 'ஞாயிறு' அல்லது 'பரிதி' என்று மாற்றிக் கொள்ளும் உத்தேசம் தங்களுக்கு ஏதும் உண்டா?

பூஜ்யம்

# அரசியல் 'வறுவல்'

மதவடியில் மாங்கண்டு கந்தையா வெற்றிலையைக் குதப்பிக்கொண்டிருந்தார். ஆடுகால் சுப்பர் அவிழ்த்துக் கொட்ட முன்னரே வெற்றிலைப் பைக்குள் கையை விட்டுத் துளாவி ஒருகிள்ளுப் புகையிலையை அவருக்குக் கொடுத்தார். தாம் கேளாமல் இருக்கவே மாங்கண்டு கந்தையா தாராளமாக நடந்துகொண்டதையிட்டு ஆடுகால் சுப்பருக்கு உள்ளூர மகிழ்ச்சிதான். இருந்தும் அதனைப் பொருட்படுத்தாதவர் போல, "தமிழரசுக் கட்சி மீண்டும் போராட்டம் நடத்தப்போகின்றதாமே. அப்படியானல் சிங்கள நாட்டில் உள்ள தமிழரின் நிலை என்னவாகும். போன முறை பட்ட பாட்டை மறந்து போனார்களா?" என்றார் ஆடுகால் சுப்பர்.

"போராட்டத்தை ஆரம்பிக்க முன்னர் சிங்கள நாடுகளில் உள்ள தமிழ்மக்கள்—முக்கியமாகப்பெண்கள்பிறந்தநாட்டை நோக்கிப் புறப்படுவது உசிதமானதென" தமிழரசுக் கட்சியினர் முன்னறிவித்தல் செய்திருக்கின்றனர்"என்றார்பணிஸ் மணியம்.

"ஆமாம். நானும் இதைப் பற்றிப் பத்திரிகைகளிற் படித்தேன் என்று சொல்லிமுடிக்க முன்னர்"ஓய்! சோணாசலம்! நீர் இதைப்பற்றி என்ன நினைக்கின்றீர்" என்றார் மாங்கண்டு கந்தையா.

"சத்தியாக்கிரகம் ஒரு நல்ல வழிதான். ஆனல் இலங்கையிலே சிங்களருக்கு அதன் அருமை தெரியாது. சாத்வீகப் போராட்டத்துக்குச் சிங்களப் பத்திரிகைகள்பிழையான கருத்துக்களை எழுதிச் சிங்களரின் உணர்ச்சிகளைக் கிளறிவிடப் பார்க்கின்றன. போனவருடமும் இந்த வேலைதான் நடந்தது. 'தமிழர் சிங்களர்மீதுபடையெடுக்கப்போகின்றார்கள்; சிங்கள மக்களே நீங்கள் பார்த்துக்கொண்டிருப்பதா' என்ற முறையில் சிங்களப் பத்திரிகைகள் சிங்களரைத் தட்டியெழுப்பி விடுகின்றன" என்றேன் நான்.

மாங்கண்டு கந்தையா நான் கூறியதை மறுக்கவில்லை. அவர் எழுந்துநின்று லெக்சர் அடிக்கத் தொடங்கிவிட்டார். "நான் சொல்வதைக் கேளுங்கள். இலங்கைக்கும் சத்தியாக்கிரகத்துக்கும் வெகு தூரம். இந்தியாவிலே காந்தி நடத்திய சத்தியாக்கிரகத்துக்கு நாட்டுமக்களின் பேராதரவு இருந்துவந்தது. ஆங்கிலேயரின் அடிவருடிகள் ஒரு சிலர்தான் அதனை எதிர்த்தனர். காந்திஜியின் சுதந்திரப் போர் ஏகாதிபத்தியத்தை வேருடன் சாய்த்துவிட எழுந்த அறப்போர் என்பதை நாங்கள் மறந்துவிடக்கூடாது. இலங்கையில் இன்று சிங்களரின் ஆட்சியே நடைபெற்றுவருகின்றது. இந்த ஒற்றை ஆட்சியை ஒழித்துக்கட்டினால்தான் தமிழினத்துக்கு விமோசனம் உண்டு. சத்தியாக்கிரகத்தின் உயர்வை அறியாதவர்களுடன் தர்மமும் நீதியும் பேசி எமது உரிமைகளைப் பெற முடியாது".

"அப்படியானல் இழந்த உரிமைகளைத் தமிழர் எப்படிப் பெறுவது?" என்று ஒரு போடு போட்டார் பணிஸ் மணியம்.

"முதலாவதாகத் தமிழரிடையே ஒற்றுமை ஏற்பட வேண்டும். ஒருவரை ஒருவர் தூற்றித்திரிவதும், சுயநலத்தை அடிப்படையாகக்கொண்டு திட்டங்கள் வகுப்பதும் தமிழினத்துக்கே ஆபத்தானவை. இத்தனைக்கும் தமிழ்த் தலைவர்களிடையே ஒற்றுமை உண்டாக வேண்டும். திரு. சுந்தரலிங்கம் போன்ற வீரத் தமிழரின் சேவைகளைத் தமிழ்மக்கள் இவ்வேளையில் இழந்துவிடக் கூடாது. இப்போது ஒன்றுபடாத தமிழ்த் தலைவர்கள் வேறு எப்போதுதான் ஒன்றுபடப்போகின்றார்களோ?" என்று வெளுத்துவாங்கினார் மாங்கண்டு கந்தையா.

"அப்படியானல் சுதந்திரப் போராட்டம் தொடுகிலும் ஆகாதென்பது உமது கருத்தா?" என்றார் பணிஸ் மணியம்.

"யார் அப்படிச் சொன்னது! இழந்த உரிமைகளைப் பெறுவதற்குப் போராட்டம் வேண்டியதுதான். ஆனல் அதனைத் தகுந்த ஆயத்தங்களுக்குப் பின்னரே கையாளவேண்டும். தமிழ்த் தலைவர்கள் வெவ்வேறு திசைகளை நோக்கி நிற்கும் வரை 'போராட்டம்' என்ற பேச்சுக்கே இடமில்லை. சத்தியாக்கிரகம் என்ற அறப் போரை வகுத்த காந்தி மகாத்மாகூட, மக்கள் அஹிம்சையின் உயர்ந்த தத்துவத்தை நன்கு உணரும்வரை தமது இயக்கத்தைப் பின்போட்டிருந்தார். தமிழர் தமிழ் மாகாணங்களில் இருந்துகொண்டு சிங்கள ஆட்சியை எதிர்க்கும் செயல் அத்தனையும் சிங்களப்பிரதேசங்களில் உள்ள தமிழ் பேசும் மக்களை நோக்கிவிடும் பாணங்களாகும். இவற்றை எல்லாம் கருத்தில் இருத்தியே தமிழ்த் தலைவர்கள் கருமம் ஆற்றவேண்டும்."என்றார் மாங்கண்டு கந்தையா.

"நீர் கூறுவதில் எவ்வளவோ உண்மையிருக்கிறது. தோட்டத்துக்குப் போக நேரமாகி விட்டதே." என்று சொல்லிக் கொண்டே ஆடுகால் சுப்பர் துவாயை உதறித் தோளிற் போட்டார்.

—சோணாசலம்

# இந்திய இராணுவத்தில் நெருக்கடி

## சீர்குலைந்து வரும் சீன-இந்திய உறவு

### இந்தியா

இந்திய இராணுவத்தில் நெருக்கடி உண்டாகியிருக்கிறது. முப்படைத் தலைவர்களும் தமது ராஜினாமாவைச் சமர்ப்பித்திருப்பதாகத் தெரிகிறது. இப்பொழுது ஜெனரல் திம்மையா தமது ராஜினாமாவைத் திருப்பி எடுத்துவிட்டார். பாதுகாப்பு மந்திரி திரு. கிருஷ்ணமேனனின் ராஜினாமாவை, இந்திய பாதுகாப்பு இலாகா மறுத்துள்ளது.

### சீன இந்திய-உறவு

திபேத் விவகாரத்தின் பின் சீன—இந்திய நேச உறவுகள் சீர்குலைந்து வந்திருக்கின்றன. இப்பொழுது வடகிழக்கு எல்லைப் புறத்திலும் (அஸாம் இராச்சிய எல்லை) மேற்கு திபேத்தை அடுத்துள்ள லாடாக்கிலும் சீனப்படைகள் இந்தியப்பிரதேசத்தை ஆக்கிரமித்து இந்திய - சீன உறவுகளை

(15ஆம் பக்கம் பார்க்க)

# ஈழநாடு

யாழ்ப்பாணம், விகாரி ஆண்டு ஆவணி மீ 20 உ (5-9-59)

EELA NADU: National Tamil weekly Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna.
*Colombo Office*: 142, New Bullers Road, Colombo 4.

## இந்திய - சீன யுத்தம் ஏற்படுமா?

இந்தியாவுக்கும் புதுசீனத்துக்கும் பெரிய யுத்தம் ஏற்படுமா? எல்லைச் சம்பவங்களையும் இராணுவ நடவடிக்கைகளையும் குறித்துக் கிடைக்கும் செய்திகள் கவலை அளிப்பதாகவே உள்ளன. ஆனால் பொறுமையே பூஷணமாகவுள்ள நேருஜி இந்தியாவின் பிரதமராக இருக்கும்வரை, இவ்விரு ஆசிய நாடுகளுக்குமிடையே யுத்தம் ஏற்படாமல் தடுக்க எல்லா முயற்சிகளையும் செய்வாரென்பது உறுதி.

மூனறு பகுதிகளில் இந்திய பூமியைப் புதுசீனம் ஆக்கிரமித்துள்ளதாக இச் செய்திகள் கூறுகின்றன. வடகிழக்கே அஸ்ஸாம் ராஜ்யத்துக்கும் திபேத்துக்கும் இடையிலுள்ளது 'மக்மோகன்' எல்லை இந்த இமயமலைப் பிரதேசத்தில் எல்லைகளைத் திட்டமாகக் குறிப்பிடுவது சுலபமல்ல. 45 ஆண்டுகளுக்கு முன்பாக மக்மோகன் என்ற வெள்ளைக்காரர் வகுத்த இந்த எல்லையைத் திபேத் ஒப்புக்கொண்டது. ஆனால் சீனம் ஒப்பவில்லை. அப்பகுதியில் வருடத்தில் பல மாதங்கள் பனி மூடியிருக்கும். மற்றக் காலங்களில் நடமாட்டம் சுலபமல்ல. அங்கு இரு இந்திய காவற்கூடங்களை, சீனத் துருப்புகள் தாக்கி, அவற்றை ஆக்கிரமித்துள்ளதாக நேரு அறிவித்துள்ளார். தாங்கள் ஏற்கனவே ஒப்பாத ஓர் எல்லை தங்களைக் கட்டுப்படுத்தாதென்று கருதி புதிய எல்லையை சீனமே வகுத்துக்கொள்ளுகிறதா?

இதைப்பற்றிப் புதுசீனத்திடம் இந்தியா ஆட்சேபித்த போது, இந்தியத்துருப்புகள்தான் முதலில் தாக்கியதாயும், அதற்குப் பதிலாகவே தாங்களும் சுட்டதாகவும் புதுசீன அரசாங்கம் சமாதானம் கூறியது. சீனத்தின் வாதம் ஓநாயும் ஆட்டுக்குட்டியும் கதையை நமக்கு ஞாபகப்படுத்துகின்றது. இந்தியத் துருப்புகளே முதலில் சுட்டதாக வாதத்துக்கு வைத்துக்கொள்வோம். பஞ்சசீல ஒப்பந்தப்படி எல்லாத் தகராறுகளையும், நேரில் கலந்துபேசித் தீர்த்துக்கொள்ளுவதாக ஒப்புக்கொண்டுள்ள சீனம் ஏன் இதைப்பற்றி இந்திய அரசாங்கத்துக்கு ஆட்சேபனை தெரிவித்து, பேச்சுவார்த்தைகளை நடத்தக் கேட்காமல், துப்பாக்கிப்பிரயோகம் செய்யவேண்டும்? பஞ்சசீலம் பஞ்சாகப் பறந்துவிட்டதா?

மேலும் இரண்டு பகுதிகளில் புதுசீனம், இந்திய பகுதிகளை ஆக்கிரமித்துள்ளதாம். காஷ்மீர் எல்லைக்குள் லடக் என்னும்பகுதியில் சீனத்திலிருந்து புதிய பாதையைச் சென்ற ஆண்டிலேயே போட்டுள்ளதாம். தங்களிடம் இதுபற்றி சீனம் முன்னறிவிப்பு எதுவும் செய்யவில்லை என்கிறார்நேருஜி. பாகிஸ்தான்கூட இவ் விஷயத்தைப்பற்றி கிளர்ச்சி செய்து, இப்பகுதிப் பாதுகாப்பை ஐ. நா. சபையே ஏற்கவேண்டுமென்று கேட்டுள்ளது.

மூன்றாவதாக இடையிலுள்ள பூட்டான் ராஜ்யத்தின் மீது திபேத்திலிருந்து புதுசீனம் படையெடுத்துள்ளதாக ஒரு ஊர்ஜிதமான பாகிஸ்தான் செய்தி கூறுகின்றது. பூட்டானுக்கும் திபேத்துக்கும் இடையிலுள்ள எல்லை திட்டமாக நிர்ணயிக்கப்படவில்லை. அதுவும் மலைப்பகுதிதான். திபேத்தில் சீன இராணுவ ஆட்சி ஏற்பட்டதும் பூட்டானுக்குக் கவலை அதிகரித்தது. ஒருலட்சம்பேர் வசிக்கும் பூட்டான் ராஜ்யத்தின் பரப்பு 18 ஆயிரம் சதுர மைல். வருடத்தில் 5 லட்ச ரூபாயை இந்தியா உதவித்தொகையாக இதற்கு அளிப்பதுடன், அதன் வெளிநாட்டு உறவுகளையும் இந்தியாவே கவனித்துவருகின்றது. திபேத்தில் புதிய ஆட்சி ஏற்பட்டதும், பூட்டானுக்கு புதிய அச்சம் ஏற்பட்டது. அந்நாட்டை யாரும் ஆக்கிரமித்தால் அது இந்தியாவை ஆக்கிரமித்ததாகக் கொள்ளப்படுமென்று நேருஜி அறிவிக்க நேரிட்டதிலிருந்தே, அங்கு நிலைமை அதிக நெருக்கடியாகி வருகிறதென்பதை உணரலாம்.

திபேத்தில் புரட்சி ஏற்பட்டு தலாய்லாமாவும், பதினாயிரம் திபேத்தியரும்இந்தியாவில்தஞ்சம் புகுந்ததுமே, இந்தியாமீது சீனம் சினம் கொண்டு வசை மாரி பொழிந்தது. இந்தியாவுக்கு ஏகாதிபத்திய ஆசை பிடித்திருப்பதாக சீனத்தில் சென்ற மேமாதமே சுவரொட்டிப் பிரசாரங்களைச் செய்திருந்ததாகச் சீனம் சென்றிருந்த ஓர் இலங்கையர் தெரிவிக்கிறார். தொழிற்சாலைகளின் முன் இந்திய துவேஷ சுலோகங்கள் இருந்தனவாம். அப்பொழுது புதுடில்லியிலிருந்து, பீகிங் சென்ற சீன ஸ்தானிகர் இன்னும் புதுடில்லிக்குத் திரும்பவில்லை. இதிலிருந்து இந்தியாமீது சீனத்துக்கு நல்லெண்ணம் இல்லை என்றும், காஷ்மீர், நேப்பாளம், சிக்கிம், பூட்டான் முதலிய இமாலய எல்லை ராஜ்யங்களை சீனம் தன் இராணுவ பலத்தால் ஆக்கிரமிக்கத்திட்டம் போட்டுள்ளதாகவும் பலவித வதந்திகள் கிளம்பியுள்ளன. சீனத்தின் மௌனம் இந்த வதந்திகளையும் சந்தேகங்களையும் பலப்படுத்துகின்றது.

புதுசீனத்தின் அந்தரங்கம் தானென்ன? இராணுவ பலத்தின்மூலம் அண்டைநாடுகளை ஆக்கிரமிக்கலாமென்று எண்ணி இந்தியாவிடம் வாலாட்டினால் அது பெரிய முட்டாள்தனமாகும். இந்தியா இவ்விஷயத்தில் தனித்துநிற்கவில்லை. பஞ்சசீல ஒப்பந்தத்தை மீறி, தனது உற்ற நண்பனுக்கே மகத்தான துரோகத்தைசீனம் செய்கிறதென்ற அவப் பெயர் சீன அரசாங்கத்துக்கு வந்தால் இலங்கையுள்ளிட்டு ஆசிய-ஆபிரிக்க மக்களின் அபிமானத்தையும் இழக்கும்.

மண்ணாசையால் அப்படி புதுசீனம் மதி இழந்துவிடுமென்று நேருவும் கருதவில்லை. நேரில் கலந்துபேசி, இத்தகராறுகளை சுமுகமாகத் தீர்த்துக்கொள்ளலாமென்றே அவர் நம்புகிறார். புதுசீனத்தின்மீது திபேத்திய தலாய்லாமா பாதுகாப்புச்சபையில் செய்துள்ள புகாரையும் நேரு ஆதரிக்கவில்லை. புதுசீனத்தை ஐ. நா. சபையில் சேர்க்கவேண்டுமென்ற கோரிக்கையையும் நேரு மாற்றிக்கொள்ளவில்லை. சீனம் அச்சபையில் மெம்பராக இல்லாததால், சர்வதேச அரங்கில் அதைக் கேள்வி கேட்கமுடியாத ஓர் நிலை ஏற்பட்டுள்ளது. இது இப்பகுதிச் சமாதானத்துக்கே ஆபத்தாகவுள்ளது.
இது எப்படியாயினும், புதுசீனம் தன் நன்மையைக் கருதியேனும், நேருவுடன் நேரில் கலந்துபேசி, எவ்வித எல்லைத் தகராறுகளையும் சமாதான முறையில் பஞ்சசீல ஒப்பந்தத்திற்கேற்ப தீர்த்துக்கொள்ள முன்வரவேண்டும். இதைப் பெரிய யுத்தமாக மாற்றி இந்தியாவையும் ஆசியாவையும் நிரந்தரமாக விரோதித்துக்கொள்ளாதென்றும் ஆசியாவின் அழிவைத்தேடாதென்றும் நம்புவதற்கு இன்னும் இடமிருக்கின்றது.

---

## பத்து வருட திட்டமும் மலைநாட்டுத் தமிழரும்

கொழும்பில் சென்ற வாரம் நடைபெற்ற அரசாங்க அதிபர்கள்மகாநாட்டில், பத்துவருடத் திட்டத்தை நடத்திவைப்பதைப்பற்றி அவர்களது உதவி நாடப்பட்டதாம்.பத்து வருடத் திட்டத்தை நடத்துவதற்குப் பண பலமும், ஆள்பலமும் முக்கிய தேவை. பணத்துக்கு, தேயிலை முதலிய தோட்ட வருமான இனங்களையே திட்டத்தை தயாரித்தவர்கள் முதலாவதாக நம்பிக் குறிப்பிட்டுள்ளனர்.

அந்தச் செல்வத்தை உற்பத்தி செய்பவர்கள் பெரும்பாலும் மலைநாட்டுத் தமிழரே. அவர்கள் பூரண உற்சாகத்துடன் உழைத்தால்தான், மலைநாட்டில் தொழில் அமைதி நிலவினால்தான், இந்த இனத்தின்மூலம் நாட்டுக்கு அதிக வருமானம் கிடைக்க முடியும். ஆனால் யார் இச்செல்வத்தை உற்பத்தி செய்து தருகிறார்களோ அவர்களை நாடற்றவராக்கி விரட்டுவதாயின், பத்து வருட திட்டம் எப்படி உருப்படும்? இதை முன்னிட்டாவது மலைநாட்டுத் தமிழ் மக்களுக்கு பிரஜா உரிமையை மறுக்கப்படாது என்று எதிர்க்கட்சித் தலைவர் டாக்டர் என். எம். பெரேரா, எட்டியாந்தோட்டை மகா நாட்டில் நன்கு அறிவுறுத்தினார்.

ஆனால் இது அரசாங்கக் கட்சி உட்பட, பல அரசியல் வாதிகளின் செவிகளிலும் ஏறுமா? மலை நாட்டுத் தமிழருக்கு வாக்குரிமை இல்லாமல், பிரஜா உரிமை இல்லாமல் நாங்கள்தான் அடித்தோம் என்று யு. என். பி தலைவர்கள் பகிரங்கக் கூட்டங்களில் பெருமை பேசிக்கொள்ளுகிறார்கள். இந்த நடவடிக்கையால், மனிதாபிமானமற்ற காரியத்தைச் செய்ததுடன், நாட்டின் முன்னேற்றத்துக்கும் தாங்கள் தடைசெய்துவிட்டதை அவர்கள் உணரவில்லை.

இதற்கிடையே இந்தப்பிரச்சினையை சுமுகமாகத் தீர்க்க, இங்கு ஏற்கனவே ஹைகமிஷனராக இருந்த திரு. தேசாய் ஒரு யோசனை கூறியுள்ளார். நாடற்றவர் என்று கூறப்படுபவர்கள், விரும்பினால் இந்தியா பிரஜையாகவோ, அல்லது இலங்கைப் பிரஜையாகவோ பதிவு செய்துகொள்ளலாமென்றும், இதனால் தொழிலுக்கோ பணமனுப்பவோ தடையிருக்கப் படாதென்றும், ஒரு வருஷ காலத்துக்குள் இந்திய பிரஜையாகாதவர்களை இலங்கை பிரஜையாக்கிவிட வேண்டுமென்றும், அப்படியாயின், இந்திய ஹைகமிஷனும், இந்தியப் பிரஜாப்பதிவு வேலையைத் துரிதமாகச் செய்யுமென்றும் கூறுகிறார்.

ஆனால் தேர்தல் நெருங்க நெருங்க, இந்திய துவேஷப் பிரசாரமும் அதிகரிக்கின்றது. அதை நம்பியே சில அரசியல்வாதிகள் வாழ்கின்றனர். இந்நிலையில் தேசாயின் யோசனையையோ அல்லது வேறு ஒன்றையோ அரசாங்கக் கட்சி ஒப்புக் கொள்ளத் தயங்குவது இயற்கை. இப் பிரச்சினையை எப்படித்தீர்த்தாலும்எதிர்ப்புக் கிளம்பும். இதைத் தீர்க்காமல் இப்படியே விட்டுவைக்கவேண்டுமென்று விரும்பும் பல சுயநலமிகள் உள்ளனர்.

இதைத் தீர்க்காமல் விட்டால், நாட்டின் எதிர் கால அபிவிருத்தியும் தொழில் அமைதியும் கெடும். தீர்க்க வேண்டுமானால் எல்லா முக்கிய கட்சிகளின் ஒத்துழைப்புடன் தேசிய முறையில் மனித நீதிக்கொப்பத் தீர்க்க வேண்டும். இச்சமயம் இதைத் தீர்க்க முடியாவிட்டால், எல்லாக் கட்சிகளும் தேசிய நன்மையைக் கருதி ஒரு கண்யமான ஏற்பாட்டுக்கு வரலாம். மலை நாட்டுத் தமிழர் பிரச்சினையை, தேர்தலில் கட்சிப்பிரசார வகுப்புவாதத்துக்கு எடுப்பதில்லை என்று தீர்மானிக்கலாம். ஆனால் இன்று இந்நாட்டிலுள்ள அரசியல் கட்சிகள் வகுப்பு வாத அடிப்படையில் இயங்குவதைப் பார்க்கையில், அவ்வித ஏற்பாடு வருமென்று நம்புவதற்கில்லை.

இது முடியாவிடில், நாட்டின் நலன் கருதி ஒரு சிறிய காரியமாவது செய்ய வேண்டும். வகுப்புத் துவேஷமாக மலைநாட்டுத் தமிழரைத் துவேஷமாகத் தாக்கும் எவ்வித பிரசாரமும் செய்யப்படாதென்றும் கண்டிப்பான உத்தரவிடலாம். பிரதமர் இதுபற்றி ஒரு தெளிவான அறிக்கையை வெளியிட வேண்டும். பத்து வருட திட்டமாயினும் சரி, அல்லது நாட்டின் எவ்வித அபிவிருத்தி திட்டமாயினும் சரி, உழைப்பாளிகளான மலைநாட்டுத் தமிழரின் உற்சாகமான ஆதரவைப் பெறக் கூடிய வழிவகைகளைச் சிறப்பாக அரசாங்கக் கட்சி செய்யக் கடமைப்பட்டுள்ளது.

---

## உரிமையும் சலுகையும்

சமத்துவம் சுதந்திரம் என்றெல்லாம் உரக்கப் பேசப்படும் இந்நாட்களில் 'சிறுபான்மைத் தமிழர்' என்றோர் இனம் இலங்கைத் தமிழர் மத்தியில் உரிமைகள் அற்றவர்களாய் வாழ்ந்து வருவது வெட்கத்துக்குரியது மட்டுமன்றி வேதனைக்குமுரியதாகும். இந்த இழிநிலை நீடித்து வருமாயின் தமிழினம் பலங்குன்றுவது மட்டுமன்றிக் கறைபடிந்த ஓர் இனமாகவே வரலாற்று ஏடுகளிலும் இடம்பெறும்.

தமிழன் என்றோர் இனம் உண்டு. தனியே அதற்கோர் குணமுண்டு. அமிழ்தம் அவனுடைய மொழியாகும். அன்பே அவனுடைய வழியாகும் என்று மேடைகளிற் பேசுவோர் தங்கள் சகோதரர்கள் சிலருக்கு உரிமைகள் மறுக்கப்பட்டிருப்பதை உணர்ந்துகொள்ள மறுப்பதுதான் விந்தையிலும் விந்தையாகும். உரிமைகள் பறிக்கப்பட்டுள்ள சிறுபான்மைத் தமிழர் குறுக்குவழியைக் கையாண்டு இழந்த உரிமைகளைப் பெறமுயல்வதும் அவ்வளவு விரும்பத்தக்கதல்ல. அரசினரும் ஒருசில அரசியற் கட்சிகளும் இவர்களை ஆயுதமாக உபயோகித்துத் தமிழினத்தின் பிளவைப் பெரிதாக்கித் தங்களுக்குச் சாதகமாகக் காரியங்களை நிறைவேற்றிக் கொள்வார்கள்.

இவற்றையெல்லாம் உணர்ந்து பிறப்பால் தாம் உயர்ந்தவர்கள் எனச் சொல்லிக்கொள்பவர்கள் தீண்டாமையை ஒழிக்க முன்வர வேண்டும். 'சிறுபான்மைத் தமிழரும்' பிரிந்து நின்று போராடாமல் நீதியான முறையில் தங்கள் பிரச்சினைகளைத் தீர்க்க முயல வேண்டும்.

சென்ற வாரம் யாழ்ப்பாணத்தில் சிறுபான்மைத் தமிழர் மகாசபையின் பதினாறாவது ஆண்டுவிழா நடைபெற்றது. இம்மாநாட்டில் அவர்கள் தமக்கு விளைக்கப்படும் இன்னல்களினின்றும் நீங்குவதற்கான மார்க்கங்களை ஆராய்ந்து தீர்மானங்கள் நிறைவேற்றியுள்ளனர். சலுகைகள்மூலம் உரிமைகளை எவரும் பெற்றுவிட முடியாது. சமத்துவம் காண்பதற்குச் சுதந்திரம் ஒரு சாதனமாக அமையவேண்டும். இந்தச் சுதந்திரத்தை அறவழிநின்று பெறுவதே முதற்பணியாக அமைய வேண்டும். அப்போது தான் அனைவருக்கும் வாழ்வுண்டு.

---

## கிளம்பு சண்டைக்கு!

"இதோ நான் இந்தியாவுக்குக் கிளம்பிவிட்டேன்" என்றார் என் நண்பர் திடீரென்று. ஒன்றும் புரியவில்லை? ஏன்? என்று கேட்டேன். "ஏன்? இந்தியா மீது சீனம் படையெடுத்துவிட்டது. பல காவற் கூடங்களையும் பிடித்துவிட்டதாம். இதையெல்லாம் கேட்ட பின்பும் இங்கே சும்மாவா கைகட்டிக்கொண்டிருப்பது? நீயும் கிளம்பு சண்டைக்கு." என்றார் அவர்!

ஆனால் அவர் ஓர் இலங்கையர், இந்தியாவுக்கு அவ்வளவு சுலபமாகப் போகமுடியாது. என்றாலும் தம் தாய்நாடான இந்தியா தாக்கப்படுகிறதென்பதைக் கேட்டதும் தம்மையும் அறியாமல் கொதித்தெழுந்தார்.

தான் ஆடாவிடினும் தன் சதை ஆடும் என்பார்கள். எல்லாரும் ஒரு தாய் பிள்ளைகளல்லவா? தாய் தாக்கப்பட்டு அடிமையானால், சேய்களுக்கும் அதேகதிதானே!

* * *

அவர் மட்டுமல்ல. எங்கள் வீட்டுசின்ன அம்பிப்பயல், இந்த செய்தியைக் கேட்டுக்கொண்டிருந்தான். இந்திய எல்லையிலிருந்து பல இந்திய வீரர்களைக் காணவில்லை என்று அவன் கேட்டதும், இதோ நான்போய் அவர்களைத்தேடிக் கொண்டு வருகிறேன். சீனத்துக்கு எப்படிப்போக வேண்டும்?" என்று கேட்டான்.

அந்தத் தெருவழியாக அப்படிச் செல்ல வேண்டுமென்று கூறியதும், அவன் 'லெப்ட் ரைட்,' லெப்ட் ரைட்" போட்டுக்கொண்டு, வாசல் பக்கம் கிளம்பினான்.

நான் கயிறு திரிக்கவில்லை. நிஜம்தான். இப்போது ஊரெல்லாம் சீனத்தைப் பற்றித்தான் பேச்சு.

* * *

இந்தியாவுக்கும் சீனத்துக்கும் சண்டைவருமா! என்றுஆவலுடன் கேட்கிறார் ஒரு வர்த்தக நண்பர். சண்டை வந்தால் ஒரு தட்டு தட்டலாமென்பது பலர் ஆவல்.

சண்டை அநேகமாக வராதென்றும், நேரு வெறும் 'பச்சைத்தண்ணி' என்றும் சொன்னதும், அவருக்கு ஒருவித ஏமாற்றமாக இருந்தது.
சீனம் விஷயமாக நேரு என்ன செய்வார்? இனியும் காலதாமதமில்லாமல், அதை

(9ஆம் பக்கம் பார்க்க)

# இரத்தினக் கம்பளம்

பதுமன்

'கலைமகள்' ஆசிரியர் கி. வா. ஜகந்நாதனுடன் பேசிக்கொண்டிருந்தால் இலக்கிய உலகையே ஒரு சுற்றுச் சுற்றிக்கொண்டு மீண்டும் பத்திரமாகத் திரும்பி வந்துவிடலாம். சிறுகதையோ, கவிதையோ, சங்க இலக்கியங்களோ, நாட்டுப் பாடல்களோ எல்லாம் அவருக்குத் தண்ணீர் பட்ட பாடு. நேற்றுக்காலை நீர்வேலியில் நண்பர்களுடன் அவரைச் சந்தித்தேன். ஈழநாட்டைப் பற்றியும் எழுத்தாளர்களைப் பற்றியும் சென்னையில் நடைபெற்ற தமிழ் எழுத்தாளர் மாநாட்டைப் பற்றியும் கருத்துக்கள் பரிமாறிக் கொண்டோம். இப்படியே பேசிக்கொண்டிருக்கையில் 'வீரபாண்டிய கட்டபொம்மன்' பற்றியும் பேச்சு எழுந்தது.

"தமிழினம் பெருமைப்பட வேண்டியபடம்." என 'சபாஷ்' போட்டார் கலைமகள் ஆசிரியர்.

## இளந் தமிழர் துடிப்பு

கொக்குவிலிற் கட்டப்பட்டுள்ள தொழில் நுட்பக் கல்லூரியில் வௌவால்கள் கூடிக் கும்மாளம் போடுகின்றனவே என அன்பர் ஒருவர் குறைப்பட்டு எழுதியிருக்கின்றார். எத்தனையோ ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள இக்கல்லூரி தேடுவாரற்றுக் கிடப்பதற்கு அரசாங்கத்தின் அசிரத்தைதான் காரணமாக இருக்கலாம் என்ற எண்ணம் தான் உதிக்கின்றது.

கம்பீரமாக எழுந்து நிற்கும் இக்கட்டடம் இளந்தமிழர் இயக்கத்தின் கண்களிற் பட்டுவிட்டது. பிரதமரும் கல்வி அமைச்சரும் நேர காலத்துடன் இத் தொழில் நுட்பக்கல்லூரியைத் திறந்து வைக்கத் தவறுவார்களானால், நேரடி இயக்கத்தில் இறங்கி ஒருகை பார்த்தே தீருவதாக இளந்தமிழர் இயக்கம் சமீபத்தில் தீர்மானித்துள்ளது. இளங்கன்று பயமறியாதுஎன்று சொல்வது இளந்தமிழர் இயக்கத்தைப் பொறுத்த மட்டிற் பொருத்தமில்லாமல் இருக்கலாம்.

தமிழினத்துக்கு அரசாங்கம் செய்துவரும் அடாதுடிகளை அவர்கள் எத்தனை நாட்களுக்கென்றுதான் பொறுத்துக்கொண்டிருப்பார்கள். இந்த இயக்கத்தைக் கிழக்கு மாகாணம் மலைநாடு ஆகிய பகுதிகளுக்கும் பரப்புவதற்கான முயற்சிகளில் சிலர் தீவிரமாக உழைத்து வருகின்றனர்.

## வழி என்ன?

சென்ற வாரம் தமிழ்ப் பெருமகனர் ஒருவரை யாழ்ப்பாணம் ரெஸ்ட் ஹவுஸில் சந்தித்தேன். என்னுடன் செந்தமிழ் அறிஞர் ஒருவரும் கலாரசிகர் ஒருவரும் பேசிக்கொண்டிருந்தனர். அரசியல் துறவறம் பூண்டுள்ள இப்பெரியார் எங்களைக் கண்டதும் புன்னகை பூத்துக்கொண்டே பக்கத்தில் இருந்த கதிரை ஒன்றில் வந்து அமர்ந்தார். தமிழரின் எதிர்காலத்தைப் பற்றிய கவலை அவருக்கும் இருக்கத்தான் செய்கின்றது. இக்கவலையைப் போக்கித் தமிழினத்தை முன்போல் தலை நிமிரச் செய்யும் வகைதான் ஒருவருக்கும் தெரியாததொன்ருக இருக்கின்றது. அரசியற் பதவி மோகம் இல்லாத தமிழர் சிலர் ஒன்றுகூடி ஆலோசித்து ஏதும் வழிவகுத்தால்தான் தமிழினத்துக்கு விமோசனம் உண்டு, என்பது அவர் கருத்து. கொழும்பிலிருந்து வந்த பெருமகனர் தமது உள்ளக் கருத்தைக் கூறிவிட்டு யாழ்தேவியிற் பறந்துவிட்டார். பூனைக்கு மணிகட்டுவது யார்? இதுதான் பெரிய சிக்கல்.

## யாழ் அகற்று சங்கம்

இலங்கைத் தமிழ் மக்களிடையே ஒற்றுமை அற்று வரும் இந்நாட்களில் வவனியாவிலிருந்து கிடைத்துள்ள ஒரு செய்தி மிகுந்த வருத்தத்தை ஊட்டுகின்றது. இதனை நினைக்கும்போது பதுமனின் பேனவே ஒத்துழைக்க மறுக்கின்றது! வவனியாவில் 'யாழ் அகற்று சங்கம்' ஒன்று தோன்றியிருப்பதாகவும் யாழ்ப்பாணத்தில் இருப்பவர்களுக்கு வவனியாப் பகுதியில் அரசினர் நிலம் உதவுவதை இச்சங்கம் தடுத்து நின்று வேலை செய்யுமெனவும் தெரிகின்றது. இப்படியே தமிழர்களிடையே பிரிவினைகளை உண்டாக்கிக் கொண்டிருந்தால் இதன் விளைவு எப்படியாகும் என்பதை எண்ணிப் பார்க்கவே பயமாகவிருக்கின்றது.

## திருவிழா முடிந்தது

நல்லூர்த் திருவிழா பூங்காவனத்துடன் விமரிசையாக முடிவடைந்துவிட்டது. இப்போது கண்ட மிச்சம் இதுதான் என்று சொல்லி நண்பர் ஒருவர் எழுதியிருப்பதைச் சொல்லுகின்றேன் கேளுங்கள்: "திருவிழா முடிந்து விட்டது. என் பணப் பையிலுள்ள பணமும் கரைந்து விட்டது. வீட்டில் இப்போது நிறைந்திருப்பது பக்தியல்ல. பின்னர் வேறு என்ன? இதோ பட்டியலைப் படியுங்கள்: அடுக்களைக்குள் அலுமினியப் பாத்திரங்கள்: எனது மகளின் கரங்களில் பலவர்ணக் காப்புகள்; என் மகன் சைக்கிளுக்கு ஒரு மணி வாங்கிப் பூட்டியிருக்கிருன்; வீட்டில் 'கிணிங்கிணிங்' என்று ஒரே சத்தம். நான் மட்டும் ஒன்றும் வாங்கவில்லை. இருபத்தைந்து நாட்களாக வளர்த்த எனது தாடியை அகற்றுவதற்காக ஒரு 'பாக்கெற் பிளேட்' தான் வாங்கினேன்.

# கிளம்பு சண்டைக்கு

(8ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஐக்கிய நாடுகள் சபையில் மெம்பராக்க வேண்டுமென்று கேட்கலாம்! ஆமாம்! அச்சபையில் மெம்பரானதும், ஏன் இப்படிச் செய்கிருய்? என்று சீனத்தைக் கண்டித்து அதன்மீது நடவடிக்கை எடுக்கலாம். அதைத் திருத்தலாம். இப்போது அதை யாரும் கேள்வி கேட்கவும் முடியாதிருக்கிறதல்லவா?

* * *

நல்லூர் தேர்த்திருவிழாவுக்குச் செல்ல வேண்டுமென்று என் நண்பருக்கு மிகவும் ஆவல். முடியவில்லை, ஆனாலும் சென்ற செவ்வாய், புதன்கிழமை ரேடியோ அஞ்சலில், நல்லூரான் உற்சவத்துப் பலன்களைக் கேட்டதும், அவருக்குப் பரம திருப்தி. நேரில் சென்று தரிசித்ததுபோல் அவ்வளவு ஆனந்தமடைந்தான்.

ரேடியோ விமர்சனம் மிக நன்ருக இருந்ததாயும், எல்லாவற்றையும் விட, சுவாமி முருகதாஸின் தேவகானமான முருக நாம பஜனை தம் உள்ளத்தை உருக்கி மெய் மறக்கச் செய்துவிட்டதாகவும் கூறினர்.

எவ்வளவோ பேர் பக்திப் பாடல் பாடுகிருர்கள். ஆனல் பித்துக்குளி முருகதாஸின் பஜனையில், அவர் குரலில் எவ்வளவு இனிமை! எல்லாம் பூர்வ ஜன்ம புண்ணியம்! இம்முறை அவர் யாழ்ப்பாணம் வந்து, இவ்விழாவில் பஜனை செய்தது, இவ்விழாவுக்கே தனிச் சிறப்பு அளித்தது.

திருவிழாக்களின் நோக்கம் மக்களிடை பக்தியை வளர்ப்பதுதான். பத்தியை வளர்க்க பஜனையை விடச் சிறந்த வழி வேறுண்டா?

* * *

—ஐயாறன்.

குறிப்பு:—

நல்லூர் உற்சவத்தில் அங்கப் பிரதட்சணம் செய்த ஒரு டாக்டருக்கு, கழுத்திலே தீராமல் இருந்த ஒருவலி தீர்ந்துவிட்டதாக அவர் என்னிடம் தெரிவித்தார்.

# நேரு-சௌ-என்-லாய் சந்திப்பு?

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கைக்கு இந்தியா ஒன்றுதான் அண்டை நாடு. மற்ற மூன்று புறமும் கடல்தான். ஆகவே இந்தியாவுக்கும் இலங்கைக்கும் பிரயாணம், வர்த்தகம், கலாசாரம் முதலிய பல துறைகளிலும் நெருங்கிய ஒத்துழைப்பு, சிறப்பாக இலங்கைக்கு, அவசியமாகும். இரு நாடுகளுக்கும் 'கஸ்டம்ஸ் யூனியன்' ஏற்பாடு இருப்பின் பல விதங்களிலும் நன்மையாக இருக்கும். இந்த யோசனையை முன்னுள் வர்த்தக மந்திரி சுந்தரலிங்கம் தெரிவித்தார். ஆனல் அது நடைபெறவில்லை.

இந்திய அரசாங்கம் இப்போது காட்டியுள்ள இச்சலுகையைப் பின்பற்றி, இலங்கையும் விஸா முதலிய விஷயங்களில், இந்தியருக்கு அதிக தாராள மனப்பான்மை காட்டினல் அது இருதேச பிரயாணத்தடைகளைக்குறைத்துபரஸ்பரம் நன்மை பயக்கவும் கூடும்.

* * *

## சபை முதல்வர்

இலங்கை ஜனப்பிரதிநிதி சபையில் அரசாங்கக் கட்சி முதல்வரான மந்திரி ஸி. பி. டி. ஸில்வா நோய்ப் பட்டதால், அந்த ஸ்தானத்துக்கு எதிர்பார்த்தபடியே, கல்வி அமைச்சர் தகநாயக்காவை பிரதமர் நியமித்துள்ளார்.

இப்பதவிக்காகத் தாம் ஆசைப்படவில்லை என்று தகநாயக்கா மறுத்தும், அவருக்கு அது கிடைத்தது. பலவருஷ பள்ளிமாஸ்டர் அனுபவமுள்ளவர் அவர். சபை நடைமுறைகளை நன்கறிந்தவர். இந்தப் பதவி, பிரதமராவதற்கு முதற்படி என்றும் கருதப்படுகிறது.

அனுபவமும், திறமையும் வாய்ந்த அவர், தமது சமீப காலவகுப்புவாத மனப்பான்மையை விட்டு, தேசிய ஒற்றுமைக்கான முறையில் காரியங்கள் செய்தால் நாட்டுக்கு அதனல் நன்மை கிடைக்குமென்று கருதப்படுகிறது. ஆனல் அவர் மனப்பான்மை மாறுமா?

* * *

## பாரதி திருநாள்

அடுத்தவாரம் 11-ந் திகதி அமரகவி பாரதியார் திருநாள் வருகிறது. இது இலங்கையிலும் கொண்டாடப்படும். "ஆயிரம் உண்டிங்கு ஜாதி—எனில் அன்னியர் வந்து புகல் என்ன நீதி?—ஓர் தாயின் வயிற்றில் பிறந்தோர்—தம்முள் சண்டை செய்தாலும் சகோதரர் அன்ருே?" என்று பாடினர். நேரு—அயூப்கான் புதிய நட்புறவு, பாரதியின் தீர்க்க தரிசனத்தை நிரூபிக்கின்றது. "சீனத்தராய் வருவாரோ?" என்றும் அவர் கேட்டது, இச்சமயம் ஞாபகம் வருகிறது.

பாரதியார் பாடல்களிலே ருஷியருக்கு அதிக விருப்பம் ஏற்பட்டுள்ளதாயும், ருஷியர் தமிழைப் படிப்பதையும், மாஸ்கோவிலிருந்து சென்னைக்குத் திரும்பிய ஓர் தமிழ்ப் பெண்மணி சென்னையில் நடைபெற்ற ஒரு வரவேற்பில் கூறி, தமிழர் தமிழை அதிக ஊக்கமாகக் கற்க வேண்டுமென்று கேட்டார்.

ருஷியர் தங்கள் ருஷிய மொழிமட்டுமின்றி தமிழ், ஆங்கிலம் முதலிய பல்வேறு உலக மொழிகளையும் கற்கின்றனர். தமிழரும் அவ்விதமே பல்வேறு மொழிகளையும் கற்கவேண்டாமா? அமரகவி பாரதியாருக்குத் தமிழ் மட்டுமன்றி, ஆங்கிலம், சமஸ்கிருதம், தெலுங்கு, மலையாளம், பிரெஞ்சு முதலிய ஆறு மொழிகள் தெரியுமாம். "நாமறிந்த மொழிகளிலே" என்று அவர் பாடியுள்ளது குறிப்பிடத்தக்கது.

* * *

## யூ. என். பி. யானை!

கண்டி பெரகராவில் பக்தியும், "சாது சாது" கோஷமும் மறைந்து யானைகள் கண்டி டான்ஸ் முதலிய கூத்துக்களுக்கு அதிக முக்கியத்வம் ஏற்பட்டு விட்டதாகவும், தமிழருக்குச் செய்யப்பட்ட அநீதிக்காகவே தெய்வம், யானைமூலம் தன் கோபத்தைக் காட்டியுள்ளதாகவும் சிங்கள மக்களிடையே கருத்துக்கள் வெளியிடப்படுகின்றன.

மக்கள் கூச்சலிட்டு, "ராஜா" யானைக்கு நெருப்புப்பந்தங்களை வீசி அடித்ததால்தான் அதற்கு வெறிபிடித்து அட்டகாசம் செய்ததாக, அதன் பாகன் சாட்சியமளித்துள்ளார்.

ஆனல் மந்திரி தகநாயக, யூ. என். பி. கட்சிதான் இதற்குக் காரணமென்றும், அவர்கள்தான் மூன்று இடங்களில் யானைகளைத் தூண்டிவிட்டிருப்பதாயும், அவர்களது கட்சிச்சின்னமும் யானைதான் என்பது குறிப்பிடத்தக்கதென்றும் குற்றம் சாட்டுகின்ருர்.

ஆனல், காட்டிலுள்ள யானைகள் மிகவும் அமைதியாக வாழ்வதாகவும், சென்றவாரம் வாழைச்சேனைக்குப் பக்கத்திலே 15 மைல் தூரத்தில் புன்னணி என்ற இடத்தில் ஏறத்தாழ 80 காட்டு யானைகள் மிக ஒழுங்காகவும் வரிசையாகவும் ரஸ்தாவைக் கடந்து, தண்ணீர் குடித்துவிட்டு அமைதியாகத் திரும்பியதாயும், பயிர் பச்சைகளுக்கு ஒரு கெடுதியும் செய்யவில்லை என்றும் நேரில் கண்ட ஒரு நண்பர் தெரிவிக்கின்ருர்.

* * *

## வெள்ளையர் இரத்ததானம்!

கொழும்புக்கு நியூசிலந்து யுத்தக் கப்பலில் வந்தவர்களில் 50 வீரர்கள், சுமார் 50 பைண்ட் ரத்தத்தை இவ்வாரம் தானமாகக் கொடுத்துள்ளனர். ஒவ்வொருவருக்கும் ரூபா 10 வழங்குவது வழக்கம். அந்தப் பணத்தையும் அவர்கள் வாங்க மறுத்ததுடன், கப்பல் சேமலாப நிதிக்கு ரூபா 100 கொடுத்ததையும் மறுத்துவிட்டார்களாம்! சபாஷ்.

உயிர் போன்ற ரத்தத்தை இவ்விதம் நமக்குத் தானமாக அளித்துள்ளதன் மூலம் இவர்கள் நமது நன்றியைப் பெற்றுவிட்டதுடன், நியூஸிலந்து—இலங்கை நல்லுறவையும் வெகுவாகப் பலப்படுத்தி நமக்கு நல்வழியும் காட்டியுள்ளனர்.

* * *

## நேரு—சௌ-என்-லாய் சந்திப்பு


நேருவும் சௌ-என்-லாயும் சீக்கிரத்தில் சந்தித்து, அந்தரங்கமாகப் பேசி எல்லை நெருக்கடியைச் சுமுகமாகத் தீர்த்துக்கொள்ள வேண்டுமென்று கேரள முன்னுள் மந்திரி கிருஷ்ணய்யர் கூறுகிருர். அற்ப விஷயத்தைச் சில சுய நலமிகள் பெரிதுபடுத்தி, சீனத்துக்கும் இந்தியாவுக்கும் மித்ரபேதம் செய்யப் பார்ப்பதாகவும் அவர் தெரிவிக்கிருர். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினருக்கு இந்த நெருக்கடியால் அதிக திகைப்பும் சங்கடமும் ஏற்பட்டுள்ளது. ஆகவே அவர்கள் முனைந்து, இந்திய—சீன நல்லுறவை நேர் செய்ய விசேஷ முயற்சி எடுப்பதாகத் தெரிகிறது.

இதற்கிடையே தளபதி திம்மையா ராஜினமாவைத் திருப்பிப்பெற்ற செய்தி, இலங்கை அரசியல் வட்டாரங்களில் வரவேற்கப்படுகின்றது. பாதுகாப்பு மந்திரி மேனனும் விலகவில்லை. இந்த நெருக்கடியை வெற்றிகரமாக நேருஜி தீர்த்துவிட்டார்.

இந்த நெருக்கடி கிளம்பியதற்கு உண்மையான காரணமென்ன? சில உத்தியோக உயர்வுகள்தானு? மிக மூத்த அதிகாரியான ஜெனரல் திம்மையா இதற்காகத் தமது பதவியைத் துறக்க முற்படுவாரா? அல்லது இதற்கு வேறு முக்கிய காரணமுண்டா? எதிர்க்கட்சித் தலைவர் திரு. கிருபளானி இக்கேள்வியைக் கிளப்பினர். காரணம் எதுவாயினும், இந்த நெருக்கடி இத்துடன் அடங்கிவிட முடிந்தது பெரியகாரியம்.

இப்போதைக்கு இது அடங்கினலும், சீக்கிரத்தில், சில மாறுதல்கள் ஏற்படலாமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்திய தலைமை அரசாங்கத்தில் சென்னையைச் சேர்ந்த டாக்டர் சுப்பராயன் போக்குவரத்து மந்திரியாக நியமிக்கப்பட்டது தமிழர் வட்டாரங்களுக்கு மகிழ்ச்சி அளித்துள்ளது. டாக்டர் சுப்பராயன், இந்தியை மட்டும் தேசிய மொழியாக்குவதை ஆட்சேபித்துவந்துள்ளாரென்பது குறிப்பிடத்தக்கது.



# ஈழத்து மக்களின் தமிழ் ஆர்வம்

## 'கலைமகள்' ஆசிரியர் மகிழ்ச்சி

யாழ்ப்பாணம்

ஈழநாட்டு மக்களுக்கு இன்பத்தமிழில் உள்ள ஆர்வமே எம் போன்றவர்களை இங்கு வரச்செய்கின்றது. சைவமும் தமிழும் வளர்த்த ஆறுமுக நாவலர் பிறந்த நாட்டை மீண்டும் ஒரு முறை தரிசிக்கும் பாக்கியம் எனக்குக் கிடைத்திருப்பதையிட்டுப் பெரிதும் மகிழ்கின்றேன். இவ்வாறு சென்னையிலிருந்து சென்ற வியாழக்கிழமை விமானமார்க்கமாக யாழ்ப்பாணம் வந்து சேர்ந்த 'கலைமகள்' ஆசிரியர் கி. வா. ஜகந்நாதன் தெரிவித்தார். யாழ்ப்பாணத்திலுள்ள நீர்வேலியில் நடைபெறும் அருணகிரிநாதர் விழாவிற் கலந்துகொண்டு விரிவுரைகள் ஆற்ற வந்துள்ள ஆசிரியர் ஜகந்நாதன் இலங்கையில் பத்து நாட்கள் வரை தங்கிநிற்பார். இம் முறை தேவி தன்னெடும் திருக்கேதீச்சரத்தில் கோயில் கொண்டிருக்கும் பெருமானையும் சென்று தரிசிப்பார்.

அருளியல், மொழியியல், அரசியல் என்பன 'ஈழநாடு' வார இதழின் மூன்று கண்களாக இருந்து வருவதைக் கண்டு தாம் மகிழ்வதாகவும், அவை இலங்கையின் மூன்று கண்களாக விளங்க வேண்டுமென்றும் அவர் கூறினர்.

அன்பர்களும் இலக்கிய நண்பர்களும் திரு. ஜகந்நாதனை விமான நிலையத்திற் சந்தித்து வரவேற்றனர். முருகானந்த பக்த சபையின் சார்பில் திரு. சு. இராஜேந்திரக்குருக்கள் ஆசிரியருக்கு மாலை சூட்டினர்.

# 'வேடம்'

**பள்ளத்தூர் இராமநாதன்விரிவுரை**

யாழ்ப்பாணத்திற்கு வந்துள்ள பள்ளத்தூர் கா. இராமநாதன் 5-9-59, ஞாயிற்றுக் கிழமை மாலை 6-30 மணிக்கு யாழ்ப்பாணம் வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் "வேடம்" என்னும் பொருள் பற்றி விரிவுரை யாற்றுவார்.

# ஐஸன்ஹோவரின் ஐரோப்பிய விஜயம்

## அணுக்குண்டுப் பரிசோதனைகள் நிறுத்தப்படுமா?

அமெரிக்க ஜனதிபதி சென்ற வாரம் ஐரோப்பாவிற்கு விஜயம் செய்திருந்தார். பிரிட்டன், மேற்கு ஜெர்மனி, பிரான்ஸ் முதலிய நாடுகளுக்கு விஜயஞ் செய்து அந்நாடுகளின் தலைவர்களுடன் பேச்சு வார்த்தைகள் நடாத்தினர். அவருடைய பேச்சுவார்த்தைகள் அவர் குருஷேவுடன் நடாத்தப்போகும் பேச்சுவார்த்தைகளுக்கு உதவியாக அமையுமென எதிர்பார்க்கப்படுகிறது.



ஜனதிபதி ஐஸன்ஹோவர்

### அணுக்குண்டுப் பரீட்சைகள்

ஐக்கிய அமெரிக்கா அணுக்குண்டுப் பரிசோதனையை நிறுத்திவைக்கும் காலத்தை 31-12-59 வரை நீடித்திருக்கின்றது. பிரிட்டனும் இம்மாதிரிக் கால எல்லையை நீடித்துவைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேற்கு வல்லரசுகள் அணுக்குண்டுப் பரிசோதனைகளை மீண்டும் நடத்தாமல் இருந்தால் ருஷியாவும் நடத்தாமல் இருக்கப் போவதாக அறிவித்திருக்கின்றது. ஆனல் பிரான்ஸ் அணுக்குண்டுப் பரீட்சைகளை சகாராப் பாலைவனத்தில் நடாத்துவதற்கு ஆயத்தங்கள் செய்துவருகின்றது.

ஆசிய ஆபிரிக்க நாடுகளின் ஆட்சேபங்களைப் பிரெஞ்சு அரசாங்கம் நிராகரித்துவிட்டது. பிரிட்டன், அமெரிக்கா, ருஷியா செய்திருக்கும் முடிவுகளை பிரான்ஸ் பின்பற்றுமல் அணுக்குண்டுப் பரீட்சைகளை நடத்தியே தீரும் எனத் தெரிகின்றது. "சகாராப் பாலைவனத்தில் பிரான்ஸ் நடத்தப்போகும் அணுக்குண்டுப் பரீட்சைகளை ஆபிரிக்க மக்கள் எதிர்ப்பது அவர்களுடைய அறியாமையே" என்று பிரிட்டனில் ஓய்வுநாட்களைக் கழிக்கச் சென்றிருக்கும் நைஜீரியாவின் மகாதேசாதிபதி சேர் ஜேம்ஸ் ரொபேட்ஸன் கூறியிருப்பது விந்தையாக இருக்கின்றது. பிரான்ஸ் பொதுஜன அபிப்பிராயத்திற்கு அடிபணிந்து அணுக்குண்டுப் பரீட்சைகளைக் கைவிடுமா?

### அல்ஜீரியா

பிரெஞ்சு ஜனதிபதி ஜெனரல் டீ கோல் அல்ஜீரியாவில் உள்ள இராணுவ நிலையங்களைப் பார்வை செய்து தலைவர்களைச் சந்தித்துவிட்டு பாரிஸ் நகருக்குத் திரும்பியிருக்கிறர். அல்ஜீரியா சிக்கலைப் பொறுத்த அளவில் ஒரு நன்மையும் இவருடைய விஜயத்தினல் ஏற்படவில்லை என்றே கூறவேண்டும். இராணுவ நடவடிக்கைகள் தீவிரமாக்கப்படும் எனத்தெரிகின்றது. அல்ஜீரிய மக்களின் சுதந்திரக் கிளர்ச்சி ஏறத்தாழ நாலரை வருடங்களாக நடைபெறுகின்றது.

### திபேத்

திபேத் விவகாரத்தை ஐக்கிய நாடுகள் தாபனத்திற்கு கொண்டு வரப்போவதாக தலாய்லாமா 30-8-59 இல் கூறி ஜனநாயக நாடுகளின் ஆதரவையும் கோரியிருக்கிறர். கொம்யூனிஸ்ட் சீனம் அங்கத்துவம் வகிக்காத இத்தாபனம் திபேத் விவகாரம் குறித்து என்ன நடவடிக்கையை மேற்கொண்டாலும் பயன் ஏற்படுமா? புதன்கிழமையன்று தலாய்லாமா புதுடில்லி வந்து சேர்ந்தார்.

### மாலைதீவுச் சிக்கல்

மாலைதீவுகளிலுள்ள கான் தீவில் பிரித்தானியர் அமைக்கும் தளம் காரணமாக ஏற்பட்ட தகராறைத் தீர்ப்பதற்கு லண்டனில் இம்மாதம் நடைபெறவிருந்த பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்வதற்கு மாலைதீவுப் பிரதமர் மறுத்துவிட்டார்.

### குருஷேவ்

அமெரிக்க சுற்றுப் பிரயாணத்தை 15-9-59 இல் ஆரம்பிக்கும் ருஷியப் பிரதமர் குருஷேவ் தமது குடும்பத்துடன் அங்கு செல்வாராம்.

## உலக நிலை

குருஷேவ் மேற்கு ஜெர்மனிப் பிரதமருக்கு எழுதியுள்ள ஒரு கடிதத்தில் இரு ஜெர்மனிகளுக்கும் இடையே உறவுகள் விருத்தியடைய வேண்டியதன் அவசியத்தை வற்புறுத்தியும் பிளவினல் ஏற்படக்கூடிய அபாயத்தையும் குறிப்பிட்டிருந்தார். மேற்கு ஜெர்மன் பிரதமர் தமது பதிலில் பொருளாதார விருத்திக்கு சோஷலிஸ நாடுகளுடன் தொடர்புகள் ஏற்படுத்த மேற்கு ஜெர்மனி விரும்புகின்றது எனக்கூறி யுத்த ஆயுதங்கள் உற்பத்தியைக் கட்டுப்படுத்த வேண்டியதின் அவசியத்தையும் வற்புறுத்தியிருக்கிறர். இரு ஜெர்மனிகளிடையே உறவுகள் விருத்தியடையாவிட்டால் ருஷியா கிழக்கு ஜெர்மனியுடன் சமாதான உடன்படிக்கை செய்துகொள்ளும் என குருஷேவ் தமது கடிதத்தில் எச்சரித்திருந்தார்.

### பாகிஸ்தான் தலைநகர்

ஒக்டோபர் 20 தொடக்கம் ராவல் பிண்டி, கராச்சிக்குப் பதிலாகப் பாகிஸ்தானின் தலைநகராக இருந்து வரும் என ஒரு அறிக்கை வெளியாகியிருக்கிறது.

### ருஷியாவின் உற்பத்தி அளவு

ருஷியாவின் கைத்தொழிற் பொருள்கள் உற்பத்தியின் அளவு 1970 மட்டில் அமெரிக்காவிலேகைத்தொழிற்பொருள்கள் உற்பத்தியாகும் அளவை மிஞ்சிவிடும் என அமெரிக்க செனேற்சபை வெளிநாட்டு உறவுகள் குழு ஒரு அறிக்கையில் கூறியிருக்கிறது.

### கம்போடியா அரசரைக் கொல்ல முயற்தி

ஒரு வெடிகுண்டுப் பார்ஸல் அனுப்பி கம்போடியாவின் அரசரையும் அரசியையும் கொலை செய்ய எத்தனித்த முயற்சி பலனளிக்கவில்லை. குண்டு வெடித்த சமயத்தில் இளவரசர் இறந்தார்; இருவர் காயமடைந்தனர்; அரசரும் அரசியும் தப்பிக்கொண்டனர்.

# பண்பமைந்த வாழ்வும் பண்டிதமணியும்

(7ஆம் பக்கத் தொடர்ச்சி)

மணியின் இலக்கிய வாழ்வு திருநெல்வேலிக் கிராம மக்களின் இதயங்களிலும் அங்குள்ள குளிர்ந்த சூழலிலும் ஊறியிருக்கின்றதென்பதைத் திரு. அ. வி. மயில்வாகனம் நவமாக விளக்கி வைத்தார். பண்டிதமணியின் உறைப்பான சமயப்பற்றும் தீர்க்கமான முடிபுகளும் இணையற்றனவென்பது அன்னரின் கருத்து.

பழைய தமிழ்ப் புலவர்களின் வரிசையில் வைத்து எண்ணப்படவேண்டியவர் பண்டிதமணியென்பதைத் தமது பொன்னுரை மூலம் உணர்த்தினர் வித்துவான் பொன். முத்துக்குமாரன்.

### நகரமண்டபத்தில்

பேராசிரியர் க. ச. அருள்நந்தியின் தலைமையில் ஞாயிற்றுக்கிழமைமாலை யாழ்ப்பாணம் நகர மண்டபத்தில் நடைபெற்ற விழா தமிழ் அன்னைக்குத் திருமுடி சூட்டும் முறையில் அமைந்திருந்தது. பண்டிதமணியின் அறிவு, ஆற்றல், அன்பு, ஆதரவு, எல்லாம் ஒருங்கு சேர்ந்த செவ்விய தன்மை தமக்கு என்றுமே பெருமகிழ்ச்சியூட்டி வருவதாகத் தலைவர் உவகையுடன் கூறினர். சமீபத்தில் அமெரிக்கா சென்று அங்கெல்லாம் தமிழன் பெருமையை எடுத்துரைத்த வழக்கறிஞர் நம. சிவப்பிரகாசம் பண்டிதமணியின் மரபுவழி வந்த சைவநெறியையும் தமிழ்ப் புலமையையும் பாராட்டினர். திரு. ச அம்பிகைபாகன் பேசும் போது பண்டிதமணியின் ஆற்றலை நாடு நல்ல முறையிற் பயன்படுத்த வேண்டும் எனக் கேட்டுக்கொண்டதுடன் அவரது கட்டுரை வன்மையையும் மெச்சினர். பண்டிதமணி பிரசங்கம் செய்வதை ஒரு கலையாக்கிக் கொண்டாரெனவும் ஆங்கிலம் படியாத இப்புலவர் ஆங்கில அறிஞர்களும் பிரமிக்கத் தக்க வகையில் விரிவுரையாற்றும் திறமைபூண்டவர்எனவும்நியாயவாதி மு. பாலசுந்தரம் சொன்னர்.

செந்தமிழும் சிவநெறியும் இன்று ஈழநாட்டில் நிலைபெற்று வருகின்றதாயின் அப் பெருமைக்குப் பண்டிதமணி முற்றிலும் உரிமை பூண்டவர் என்பதைத் தமது சொற்பெருக்கின் மூலம் விளக்கி வைத்தார் முதலியார் செ. சின்னத்தம்பி. பண்டிதமணியைச் 'சொல்லின் செல்வர்' என அழைப்பதே பொருத்தமானதெனவும் அவர் தெரிவித்தார்.

இத்தனை பாராட்டுரைகளையும் தலையிற் சுமக்கமுடியாத நிலையில் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை காட்சியளித்த போதும், தமது உள்ளத்தில் தோன்றிய மணியான கருத்துக்களை எல்லா விழாக்களிலும் தெரிவித்தார். சைவாசிரியர் கலாசாலையில் பயிலும் மாணவர்கள் இருவருடகாலம் பயிற்சி பெறுவதுண்டு. ஆனல், முப்பது வருடகாலப் பயிற்சி தமக்குண்டென்பதுஅவர் தம் கருத்து. அக்காலத்தில் அங்கு ஒரு மகானைத்தாம் கண்டதாகவும் அம்மகான் தான் முன்னுள் உப அதிபர் திரு. பொ. கைலாசபதி எனவும் அவர் தெரிவித்தார். நாடு சிறப்புற வேண்டுமாயின் நமது முன்னேர்கள் காட்டிய நெறி நின்று நாம் ஒழுகவேண்டும்.

நாம் தேவர்களுக்கு ஒப்பாக இப்பொழுது இருக்கின்றேம். தேவர்கள் தமக்கு வந்த துன்பத்தை நீக்க எந்த வழியைக் கடைப்பிடித்தார்களோ அவ்வழியை நாம் கடைப்பிடிக்கவில்லை. தேவர்கள் தமக்குத் துன்பஞ் செய்தவர்கள் தாங்களே, வேறுயாருமில்லை என்று கருதித் தங்களைத் தாங்களே திருத்தி நல்வழிப்படுத்தினர்கள். இதுவே கந்தபுராணம் கூறும் உண்மைப்பொருள். கந்தபுராணம் படிக்கும் வழக்கம் இன்று அருகிவிட்டது. அவ்வழக்கம் மீண்டும் ஏற்பட்டால்தான் நம் துன்பம் ஒழியும். இன்பமும் திருப்தியும் நிறைந்த வாழ்வு அப்போது தான் ஏற்படும் எனவும் அறிவுறுத்தினர்.

### சாவகச்சேரியில்

திருநெல்வேலிச் சைவாசிரிய கலாசாலையின் தென்மராட்சிப் பழைய மாணவர் சார்பில் பாராட்டு விழா சென்ற 28. 8. 59 வெள்ளிக்கிழமை சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெற்றது. பிற்பகல் நிகழ்ச்சிகளுக்கு நியாயவாதி திரு. எஸ். இராசரத்தினம் தலைமை தாங்கினர். பண்டிதமணியின் ஆற்றல்களைத் தலைவர் பெரிதும் பாராட்டினர். தென்மராட்சி முத்தமிழ்க் கலை மன்றத்தின் சார்பில் பண்டிதமணிக்கு வாழ்த்துப்பா வழங்கப் பெற்றது. மன்றச் செயலாளர் திரு. சி. செல்லத்துரை பாடல்களைப் பாடினர். திரு. எஸ். பொன்னுசுவாமி, திரு. இ. இராமுப்பிள்ளை, திரு. இராஜ. அரியரத்தினம், திரு. எஸ். தியாகராஜா, திரு. வி. சுப்பையா, திரு இ. த. சுப்பிரமணியம், பண்டிதர் பி. வேலுப்பிள்ளை ஆகியோர் பண்டிதமணிக்கு உளங்கனிந்த பாராட்டுக்களை வழங்கினர்.

பண்டிதமணி பேசும்போது தென்மராட்சி மக்களின் அன்பு தமது உள்ளத்தைத் தொட்டுவிட்டதென உணர்ச்சியுடன் குறிப்பிட்டார் தம்மிடமிருந்த இராமாயண. உரை (வித்வ சிரோன்மணி பொன்னம்பலப் பிள்ளையின் உரை) இப்போது அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில் இருப்பதாகவும், அவ்வுரையைப் பெற்றுக்கொள்வதற்குப் பேராசிரியர் டக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை தமக்குத் தந்தி மேல் தந்தி அனுப்பினர் எனவும் பண்டிதமணி கூறினர். யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தமிழ் விழாவின்போது ஈழத்தின் சிறப்பை அறிய முடியாத சிலர் இப்போது அதன் பெருமையை அறிந்து வருகின்றனர் எனவும் பண்டிதமணி சுவையாக எடுத்துரைத்தார். பண்டிதர் சி. க. தம்பையா அனைவருக்கும் நன்றி கூறினர்.

### மணிவிழா மலர்

பாராட்டு விழாச் சபையினர் வெளியிட்டுள்ள மணி விழா மலரில் இந்தியாவிலும் இலங்கையிலுமுள்ள அறிஞர்கள் பலரின் கட்டுரைகளும் கவிதைகளும் உள.

தென்மராட்சியிலுள்ள பண்டிதமணியின் மாணவர்கள் 'பாரத நவமணிகள்' என்ற நூலை வெளியிட்டுள்ளனர். இதில் பண்டிதமணியின் ஒன்பது கட்டுரைகள் தொகுக்கப்பட்டுள்ளன.

## 'ஈழநாடு' சிறுவர் பகுதி

★ ஈழநாடு சிறுவர் பகுதியில் ஆறு வயது தொடக்கம் பத்தொன்பது வயது நிரம்பிய அனைவரும் அங்கத்தவராகச் சேர்ந்து கொள்ளலாம்.

★ அங்கத்தவராகச் சேரவிரும்புவோர் இங்குள்ள விண்ணப்ப பத்திரத்தை நிரப்பி அனுப்பவேண்டும். இந்த இதழில் வெளியாகியுள்ள பத்திரம் 12-9-59க்குப் பின்னர்செல்லுபடியாகாது. ஒவ்வொரு வாரமும் இங்கு வெளியாகும் பத்திரத்தை அடுத்துவரும் சனிக்கிழமைக்குள் உபயோகித்துக் கொள்ளவும்வேண்டும். ஒருவர் ஒருமுறை அங்கத்தவர் பத்திரத்தை நிரப்பி அனுப்பினல் போதுமானது.

★ ஈழநாடு அலுவலகத்திலிருந்து அங்கத்தவர் பதிவுத்தாள் கிடைத்தபின்னர்தான் ஈழநாடு சிறுவர் பகுதிக்கு அங்கத்தவர் தங்கள் கதைகளையும், கட்டுரைகளையும், கருத்துக்களையும் அனுப்ப வேண்டும். அவற்றுள் நல்ல கதைகளும், கட்டுரைகளும் சிறுவர் பகுதி யில் வெளியிடப்படும்.

★ சிறுவர் பகுதி சம்பந்தமான சகல கடிதப்போக்குவரத்தும் பின்வரும் விலாசத்துக்கு அனுப்பப்பட வேண்டும்:

சின்ன மாமா,
ஈழநாடு சிறுவர் பகுதி,
தபாற்பெட்டி எண் 49,
யாழ்ப்பாணம், இலங்கை.

இங்கே வெட்டவும்

## ஈழநாடு சிறுவர் பகுதி

விண்ணப்பப் பத்திரம்

(5-9-59)

அன்புள்ள சின்னமாமா அவர்களுக்கு
வணக்கம்,

ஈழநாடு சிறுவர் பகுதியில் என்னை ஓர் அங்கத்தவராகச் சேர்த்துக்கொள்ளுமாறு வேண்டுகின்றேன்.

பெயர்.

விலாசம்...

இங்கே வெட்டவும்

கையொப்பம்

பெற்றேர் அல்லது
ஆசிரியரின் கையொப்பம். வயது............

# சிறுவர் பகுதி

## புத்திசாலி தங்கவேலு

(சோ. மகிந்தா — பதிவு எண்: 269)

ஒரு ஊரிலே தங்கவேலு என்னும் பெயருடையவன் ஒருவன் இருந்தான். அவன் கல்வியறிவுஎதுவுமில்லாதவன். ஆயினும், சிறந்த நுண்ணறிவுடையவன். அவனுக்கு வயது ஐம்பதுக்குமேல் ஆகிவிட்டது, வயது முதிர்ச்சிக்குத் தக்கவாறு அறிவு முதிர்ச்சியும் பெற்றிருந்தான்.

தங்கவேலுவிடம் இரண்டு கறவை மாடுகள் இருந்தன. ஒருமாடு பால் கறக்கும்போது அசைந்து ஆடிக்கொண்டு நிற்கும். அந்த மாட்டில் யாரும் பால் கறக்க முடியாது. கறக்கும்போது பால் கீழே சிந்திப்போகும். தங்கவேலு, மாடு ஆடத் தொடங்கினால், தானும் ஆடிக்கொண்டே பால் ஒரு துளி கூடக் கீழே சிந்தாமற் கறந்துவிடுவான். மற்ற மாட்டில் பால் கறக்கும்போது பாட்டுப்பாட வேண்டும். இல்லாவிடில் உதைக்கும். தங்கவேலு ஏதேனும் ஒரு பாட்டைப் பாடிக்கொண்டே அம்மாட்டிலும் பாலைக் கறந்து விடுவான்.

தங்கவேலு இவைகளில் இருந்து கற்றுக்கொண்ட பாடம், 'ஒவ்வொருவரிடமும் எவ்வாறு நடக்க வேண்டுமோ அவ்வாறு நடந்தால் காரியத்தை எளிதில் முடிக்கலாம்' என்பதுதான்.

அந்த ஊரில் ஒரு முறை கொடியநோய் ஒன்று வந்துவிட்டது. அந்த ஊரிலே காளிமுத்து என்ற ஒரு வைத்தியன் இருந்தான். அந்தத் தொத்து நோய்க்கு அரிய மருந்து அவனிடம் இருந்தது. ஊரார்கள் பலர் காளிமுத்தைத் தங்கள் தங்கள் வீட்டுக்கு அழைத்துச் செல்வதற்காகக் காளிமுத்தினுடைய வீட்டில் கூடியிருந்தார்கள். காளிமுத்துவோ மருந்துகளை ஒழுங்கு செய்தும், புது மருந்துகளைத் தயாரித்துக் கொண்டும் இருந்தான். அவனை அழைக்கச் சென்றவர்கள் அவன் செய்யும் வேலையைப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். அந்தச் சமயத்தில் காளிமுத்துவை அழைத்துக் கொண்டு போவதற்காக தங்கவேலு மருத்துவன் வீட்டுக்கு சென்றான். மருத்துவன் வேலையாக இருப்பதையும் மற்றவர்கள் அதைப் பார்த்துக் கொண்டிருந்ததையும் தங்கவேலு கண்டான்.

மற்றவர்களைப்போல் தங்கவேலு பார்த்துக்கொண்டு உட்காரவில்லை. காளிமுத்து அரைத்துக் கொண்டிருந்த குளவியைத்தான் வாங்கி அரைத்தான். மருத்துவனின் வேலை விரைவில் முடிந்தது. மருந்துப் பெட்டியை எடுத்துக்கொண்டு புறப்பட்டான் தங்கவேலு. மருத்துவன் காத்திருந்தவர்களைப் பார்த்து "நீங்கள் உங்கள் உங்கள் வீட்டுக்குப் போங்கள். நான் தங்கவேலுவின் வீட்டிற்குப் போய்விட்டு வருகிறேன்" என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டான். காத்திருந்தவர்கள் 'நாம் முன்னரே வந்தும் மருத்துவன் நம்முடைய வீடுகளுக்கு வராமல் தங்கவேலுவின் வீட்டுக்குப் புறப்பட்ட காரணம் யாது?' என்று தமக்குள் பேசிக் கொண்டார்கள். ஒருவன், "தங்கவேலு மிகுதியாகப் பணம் கொடுத்திருப்பான் போல் இருக்கிறது," என்றான்.

மறுநாள் ஒருவன் தங்கவேலுவைக் கண்டு "நீ மருத்துவனுக்கு எவ்வளவு பணம் கொடுத்தாய்?" என்று கேட்டான். காளிமுத்து தன்னிடம் பணம் வாங்கவில்லை என்று கூறினான் தங்கவேலு. "மருத்துவன் அவ்வாறு மறுக்கக் காரணம் யாது?" என்றான், வந்தவன். அதற்குத் தங்கவேலு "ஆடிக் கறக்கிற மாட்டை, ஆடிக் கறக்க வேண்டும்; பாடிக் கறக்கிறமாட்டைப்பாடிக்கறக்க வேண்டும்" என்றான். "அந்தப் புத்தி உங்களுக்குத் தெரியவில்லை. நீங்கள் மருத்துவன் வீட்டிற்குச் சென்று அவன் வேலை செய்துகொண்டிருக்கும் போது உதவி செய்யாமல் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தீர்கள். நானோ அவனிடம் சமயத்திற்குத் தக்கபடியாக நடந்து காரியத்தை முடித்துக் கொண்டேன்" என்றான்.

## புதிய மருமக்கள்

பெயர்களும், பதிவு எண்ணும்

441. க. பத்மன், 64, பண்ணை வீதி, யாழ்ப்பாணம்.
442. சு. சண்முகம், 90, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
443. இ. நடராச சர்மா, சிவன்கோவிலடி, சித்தன்கேணி.
444. வீ. கணேச நாதன், குடியிருப்பு, வவனியா.
445. மா. ஸ்ரீகிருஷ்ணநாதன், உடையார் வளவு, சுண்ணகம்.
446. செ. துரைராசா, கந்தசாமிகோயில் வீதி, வவனியா.
447. வி. நீலாயதேவி, 'ரெட்ண வில்லா' மண்டைதீவு.
448. சு. குமாரசாமி, வடக்கு வீடு, அராலிதெற்கு, வட்டுக்கோட்டை.
449. என். ரவீந்திரன், தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி.
450. மு. நஜுமா, 'சரீபா வில்லா' 19, முகிதீன்பள்ளி வீதி, யாழ்ப்பாணம்.
451. எஸ். ரமேஷ், 60, விவேகானந்தாவீதி, கொழும்பு 6.
452. பொன். வடிவேல், விளாங்குடி, அடம்பன்.
453. மு. தவமணிதேவி, தாழ்வுபாடு வீதி, மன்னர்.
454. எஸ். ஏ. சி. மஸ்றூவ், 26, கமால் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.
455. எஸ். மரியநாயகம், கோவந்தபுலம், இளவாலை.
456. எம். லமீக்கா, 14, ஐத்துறூஸ் மாக்கான்வீதி, மூர்வீதி, யாழ்ப்பாணம்.
457. ப. ரோகிணி, 23/2, கல்லூரி வீதி, நீராவியடி.
458. க. சிவசாமி, பொன்னாவெளி. வேரவில். P. O.
459. பி. சவரிராஜ், புனித கபீரியல் கல்லூரி, எட்டியாந்தோட்டை.
460. சி. நந்தினி, 96, அரசடிவீதி, வண்ணார்பண்ணை கிழக்கு, யாழ்ப்பாணம்.

செல்வச் சிறுவர்களே!

அனைவருக்கும் வணக்கம். உங்களில் அனேகர் நல்லூர்க் கந்தசுவாமி கோவிலில் நடைபெற்ற தேர்த் திருவிழாவுக்கும் பூங்காவனத்துக்கும் சென்றிருப்பீர்கள் என நம்புகின்றேன். கொழும்பிலுள்ள மருமக்கள் பலர் தேர்த் திருவிழாவுக்காக யாழ்ப்பாணம் வந்திருந்தார்கள் என அறிகிறேன். தேர்த் திருவிழா அல்லது பூங்காவனம்பற்றி மருமக்கள் கட்டுரைகள் எழுதி அனுப்பலாம். மிகச் சிறந்த கட்டுரைகளில் இரண்டு கட்டுரைகளை இங்கு வெளியிடுவேன்.

சின்னமாமா

## எனக்குக் காட்டுங்கள்!

(அழகனூர் — பதிவு எண்: 127)

'உலகம் அழகானது; அதன் ஒவ்வொரு அங்கத்தையும் காணக் கண்கோடி வேண்டும். நிலமடந்தை தன் எழில் மேனியில் என்னென்ன பெற்றிருக்கிறாள் பாருங்கள்!' என்பதையெல்லாம் நான் பொருளற்றதாகக் கருதுகிறேன். அவர்களுக்குத் தெரிவது எனக்கு ஏன் தெரிவதில்லை?.

கடல்—நிலப்பரப்பில் மூன்றில் ஒருபகுதியைத் தவிர மற்றிரண்டு பகுதியையும் இது அடைந்திருக்கிறதாம். நீல நிறமாம்; எல்லை இல்லாது பரந்து கிடக்குமாம். ஒவ்வொருமுறையும் தன் அலைக்கரங்களை நீட்டி நீட்டி அழைப்பது அழகாக இருக்குமாம். பொங்கிவரும் நுரையுடன் பேருருவம் கொண்டுள்ள அதன் எழிலைக்கண் பெற்றோர் அனைவரும் காணவேண்டும் என்கின்றார்கள். இதை நான் பொருளற்றதாகக் கருதுகிறேன். அவர்களுக்குத் தெரிவது எனக்கு ஏன் தெரிவதில்லை?

மலைகள் ஓங்கி உயர்ந்து வானத்தைத் தொடுகின்றனவாம்! அட! வானம் என்பதுதான் எத்தனை எத்தனை அழகாம்! அதன் பரப்பில் வீசிவிட்ட முத்துப்பரல் என விண்மீன்கள் சிதறிக்கிடந்து கண்சிமிட்டி மின்னுகின்றனவாமே! உண்மையில் மின்னுகின்றனவா? உண்மையென்றால் எனக்கும் காட்டுங்கள்!

வெண்மை நிறமாயும் கருமை நிறமாயும் மேகங்கள் வருகின்றனவாம். மலையில் மோதி மலைமகளுடன் கொஞ்சிக் குலவி இரண்டறக் கலக்கும் போது மழை பொழிகிறதாம். நீர் பெருகுகிறதாம்; சிற்றாறு பெருகுகிறதாம்; பிறகு பெரிய ஆறாகிக் கல்லும் மலையும் காடும் கண்டு, வாடி நிற்கும் பயிரினத்தின் வாட்டம்போக்கி, நீரில்லா ஆறு குளம் கிணறு எல்லாவற்றிலும் நிரம்பி வழிந்து, செல்வத்தைச் செழிக்கச்செய்து, மக்களை மகிழ்வில் ஆழ்த்தி இறுதியில் கடலை அடைகிறதாம்! எத்தனை எத்தனை புனைந்துரைகள்? எத்தனை எத்தனை ஒவ்வாத கற்பனைகள்? உண்மைதான் என்றால் எனக்கும் காட்டுங்கள். சவால் விடுகின்றேன்; எனக்கும் காட்டுங்கள்! உங்களால் காட்டமுடியாதா?

பூத்துச் சிரிக்கும் சோலைகள் தான் எத்தனை அழகாம்! அதில் எத்தனை வகை வகைக் கனி இனமாம்! அவை பச்சை மஞ்சள் சிவப்பு நிறத்தில் காய்த்துச்செழித்துக்குலுங்கி மின்னிக் கற்பனையைப் பெருக்குகின்றனவாம்! குலுங்குகின்ற காயைக் காட்டுங்கள்; குலுங்குகின்ற கனியைக் காட்டுங்கள்; அதன் பச்சை மஞ்சள் சிவப்பு நிறத்தைக் காட்டுங்கள். மின்னுகின்றனவா குலுங்குகின்றனவா என்று நான் பார்த்துவிடுகிறேன். நண்பர்களே! எனக்குக் காட்டுகிறீர்களா? ஒரே ஒரு முறையாவது காட்டுகிறீர்களா? ஏன், உங்களால் எனக்குக் காட்டமுடியாதா?


பெண்—அடடா! இந்தப் பெண்ணைப்பற்றித் தான் எத்தனை எத்தனை எண்ணங்கள்செலவிடப்பட்டிருக்கின்றன என்று பாருங்கள்! பெண், உலகத்தின் எழிலெல்லாம் ஒன்றாகவார்த்தெடுக்கப்பட்ட வார்ப்படமாம்! அவள் விழிகள்கூரியவேலாம்! கயலாம் அவள் புருவம் வில்லாம்! இப்படி இன்றுவரை தோன்றிய கவிஞரெல்லாம் புகழ்ந்து புகழ்ந்து என்ன கண்டார்கள்? கண்டவர்களே! எனக்குக் காட்ட வாருங்கள்; கொஞ்சமேனும் காட்ட வாருங்கள்; தயவு செய்து, என்மேல் அன்பு கூர்ந்து காட்ட வாருங்கள்!


காட்ட முடியாதா?


அன்பரே! உங்கள் பொறுமையைச் சோதிக்க எனக்கு எண்ணம் இல்லை. இதோ சொல்லிவிடுகிறேன்!

நான் ஒரு குருடன்; ஆம்! நான் ஒரு குருடன்; எனக்குக் கண்கள் இல்லை; என்னால் பார்க்கமுடியாது!

## உண்மைக் கதைகள்: உலகச்சுற்றுப் பிரயாணம் — I







**உலகத்தைச்சுற்றி:** 1908-ஆம் ஆண்டில், நியூயோர்க் 'ரைம்ஸ்' பத்திரிகையும், பாரிஸ் 'லேமற்றின்' பத்திரிகையும் சேர்ந்து உலகத்தைச்சுற்றி மோட்டார் கார் ஓட்டப்பந்தயமொன்றை ஆரம்பித்து வைத்தன. நியூயோர்க்கில் தொடங்கி பாரிஸில் முடிய வேண்டிய இப்பந்தயம், அந்நாட்களில் இயலாத காரியமாகவே தோன்றிற்று. 17,000 மைல் ஓட வேண்டியிருந்தது. அத்துடன், பசிபிக் சமுத்திரமும், யப்பான் கடலும் கப்பல் மூலம் பிரயாணம் செய்ய வேண்டியிருந்தது.

**1908:** 1908 ஆம் ஆண்டளவில், 200 அல்லது 300 மைல் தான் ஒரு மோட்டார் கார் அதிகமாகப் பிரயாணம் செய்யக்கூடியது. ஐரோப்பாவிலும், ஐக்கிய அமெரிக்காவிலுமிருந்த தெருக்கள் மிக மோசமானவை. கார்களைத் திருத்த வசதிகள் இல்லை. அக்காலத்தில், கார்கள் கைகளினாலேயே செய்யப்பட்டவையாதலால், ஒரு பாகம் உடைந்துவிட்டால், அப்பாகத்தைத் திரும்பவும் செய்யவேண்டியிருந்தது.

**போட்டியிட்டோர்:** இந்த உலக ஓட்டப் பந்தயத்திற்கு ஆறு கார்கள் தயாராகின. அமெரிக்கா, இத்தாலி, பிரான்ஸ், ஜேர்மனி முதலிய நாடுகளிலிருந்து சிறந்த கார்கள் இப்போட்டியில் பங்குபற்ற முன்வந்தன. போட்டியில் பங்குபற்றிய ஒவ்வொரு காரிலும் மூன்றுபேர் இருந்தனர். அத்துடன் ஒவ்வொரு காரும் ஒரு தொன் நிறை அளவிற்குத் தளவாடங்கள், உபகரணங்கள் முதலியவற்றைத் தாங்கிச் சென்றது.

## அறிவுச் சுடர் II
### கேள்விகள்

1. எந்த விலங்கு அதிக சத்தம் போடும்?
2. வெள்ளிக் கிரகம் ஏன் அதிக ஒளியுடையதாக இருக்கின்றது?
3. கோப்பி அராபியாவில் உற்பத்தியானதா?
4. அமெரிக்க இந்தியர் எத்தனை மொழிகள் பேசுகின்றார்கள்!
5. மிகப்பெரிய பாம்பு எது?

(விடைகள் 15ஆம் பக்கம் பார்க்க)

# மலாயாவில் கூட்டணிக் கட்சி மீண்டும் பதவியேற்றது

## பாராளுமன்றத் தேர்தல் திருவிழா

சுதந்திர • மலாயாவிலே சென்ற ஓகஸ்ட் மாதம் 19-ம் திகதி நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தல், தேசியத் திருவிழாவாக அமைந்திருந்தது. தேர்தலுக்கு முன்னர் ஆட்சி புரிந்த கூட்டணியே இத்தேர்தலில் 104 ஸ்தானங்களில் 73 ஸ்தானங்களைக் கைப்பற்றி, எதிர்வரும் ஐந்தாண்டுகளுக்கு அரசு புரியும் வாய்ப்பைப் பெற்றது. மேலும், நிதி மந்திரி சேர் கர்னல் லீ அவர்களைத் தவிர (போட்டியிடாதவர்) மற்றைய மந்திரிகள் எல்லாரும் போட்டியிட்டு, வெற்றி பெற்று அவரவர் பதவிகளுக்கே வந்துவிட்டார்கள். சுதந்திரத் தந்தையும், தேசியத் தலைவரும், பிரதம மந்திரியுமான துங்கு அப்துல் ரஹ்மான் புத்ரா அல்-ஹாஜ் அவர்களது தலைமையில் மீண்டும் மந்திரி சபை அமைக்கப்பட்டுள்ளது.

கூட்டணியின் 74-வது வெற்றி ஸ்தானமாகக் கருதப்படும் கெடா தெங்காவில் அபேட்சகராய் நின்ற முன்னாள் கல்வி மந்திரி இஞ்சே கிர்ஜோகாரி அவர்களுக்கு எதிராக அ. ம. இ. க. அபேட்சகர் தேர்தலுக்கு இரண்டு நாட்களுக்கு முன் நோயுற்றபடியால், அத்தொகுதியில் தேர்தல் நடைபெறவில்லை. செப்டம்பர் மாதம் 8-ம் திகதி அபேட்சகர்கள் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டு, செப்டம்பர் மாதம் 30-ம் திகதி தேர்தல் நடைபெற விருக்கிறது.

பாராளுமன்றத் தேர்தலில் கூட்டணியின் எதிர்க்கட்சிகளாக நின்ற அ. ம. இ. கட்சியின் 58 பேரில் 13 பேரும், சோ. மு. யின் 37 அபேட்சகர்களில் 8 பேரும், வெற்றி பெற்றனர். சில்லறைக் கட்சிகளான ம. மு. கயின் சார்பில் 19க்கு நான்கு பேரும், நெகராவுக்கு 9ல் ஒருவரும், ம. கட்சிக்கு இருவரில் ஒருவருமாக வெற்றி பெற்ருர்கள். இது நாள் வரை, சட்டசபையில் கூட்டணி அரசாங்கத்துக்கு எதிர்க்கட்சி உறுப்பினர் ஒரே ஒருவர் இருந்ததிலிருந்து இப்போது 30 பேராக உயர்ந்திருக்கிறது. பாராளுமன்ற நிகழ்ச்சி கவர்ச்சிகரமாக இருக்கும்.

பாராளுமன்றத் தேர்தலில் சுயேச்சையாளர்களாக நின்ற 29 பேரில் மூன்று பேர்தான் வெற்றியடைந்தனர். 15 பேர் கட்டுக்காசை இழந்தார்கள். முன்னையக் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தது போல் சுயேச்சைவாலாக்கள், தேசியத் தலைவர் துங்கு அப்துல் ரஹ்மானின் தலைமை சரியல்லவென்று, கூட்டணி பங்காளியான ம. சீ. சங்கத்திலிருந்து விலகியவர்கள்.

**மலாயாக் கடிதம்**

★

**நமது நிருபர்**

ம. இ. கா. க்கு கொடுக்கப்பட்ட நான்கு ஸ்தானங்களில் கனம் மந்திரி சம்பந்தன் உட்பட மூவர் வெற்றி பெற்றது இந்திய சமூகத்திற்கு நல்ல எதிர்காலத்தை உண்டு பண்ணியது என்பதோடு பிரதமர் துங்குவின் நல்லெண்ணத்தையும் சம்பாதிக்கிறது எனத் துணிந்து கூறலாம்.

### வாக்காளர் விபரம்

மலாயாவிலுள்ள மொத்த மக்கள் 6,278,766 பேரில் பாராளுமன்றத் தேர்தலுக்கு வாக்களிக்கத் தகுதி பெற்றவர்கள் 2,144,829 ஆவர். ஆனல், 1,605,554 பேர்தான் வாக்களித்துள்ளார்கள்.

கூட்டணிக் கட்சிக்கு வாக்களித்தவர்களது தொகை 8,61,583 பேர். சென்ற மாகாணத் தேர்தலின் போது இத்தொகையை விடக் கூடுதலாக, அதாவது 8,61,903 பேர் வாக்களித்திருக்கிருர்கள்.

அதுபோலவே, அ. ம. இ. கட்சிக்கும் மாகாணத் தேர்தலில் 3,22,026 பேர் வாக்களித்து, பொதுத் தேர்தலில் 3,18,400 ஆகக் குறைந்திருக்கிறது.

ஆனல் சோ. முன்னணிக்கு மாகாணத் தேர்தலில் வாக்களித்தவர்களின் தொகை 1,50,318 ஆக இருந்தது. பாராளுமன்றத் தேர்தலில் 2,05,726 ஆக அதாவது 55,408 வாக்காளர்கள் அதிகரித்திருக்கிருர்கள். இதனல்தான் சோ. முன்னணிக்கு மலாயாவில் நல்ல எதிர்காலம் இருக்கிறது என்று கீழை மேலை நாடுகளின் பத்திரிகைகளும், அரசியல் வாதிகளும் வருணித்திருக்கிருர்கள்.

### அபேட்சகர்கள்

கூட்டணிக் கட்சியில் ஏறக்குறைய எதிர்பார்த்த அத்தனை அபேட்சகர்களும் வெற்றி பெற்று விட்டார்கள். முன்னைய மாகாணத் தேர்தலின் போது நடைபெற்றது போன்றே கிளந்தான் திரங்கானு ஆகிய இரண்டு மாகாணங்களும் வகுப்பு வாதக் கட்சியான அ. ம. இ. கட்சிக்கு அடிமையாகி விட்டன.

நெகரா கட்சியின் சார்பில் போட்டியிட்ட 9 பேரில் ஒரே ஒருவர் மட்டும் வெற்றியுடன் திரும்பினர். அவர்தான் மலாயாவில் பழம்பெரும் அரசியல் வாதி- டத்தோ ஸேர் ஓன் பின் ஜபார். தமது சொந்த மாகாணம் ஜோகூரை விட்டு வகுப்பு வாதம் நிறைந்துள்ள திரங்கானு மாகாணத்தில், அ. ம. இ. கட்சியின் ஆதரவோடு நின்றமையால்தான் வெற்றி காண முடிந்தது.

மக்கள் முற்போக்குக் கட்சிக்கும் ஈப்போ நகரில் மட்டுந்தான் செல்வாக்கு என்று கடந்த தேர்தலிலிருந்து அறிய முடிகிறது. தமிழரில் "சீனிவாசகம் சகோதரர்கள்" இருவரும், சீனர்கள் இருவர் மட்டுந்தான் வெற்றி பெற முடிந்தது. சுங்கை சிபுட்டில் கனம் மந்திரி சம்பந்தனை எதிர்த்துப் போட்டியிட்ட திரு. கா. அண்ணாமலைச்செட்டியார் இரண்டாயிரத்துக்கு அதிகமான வாக்குகளால் தோற்கடிக்கப்பட்டார். கோலாலம் பூரிலிருந்து சுங்கை சிபுட்டுக்குப் போய் சுகாதார மந்திரியையே எதிர்த்து நின்ற இவருக்கு நாலாயிரம் வாக்குகளுக்கு மேல் கிடைத்தது பாராட்டுக் குரியது என்று போற்றினலும், அரசியலுக்கு அப்பாற்பட்ட அவரது சொற்பொழிவுகள் தான் தோல்விக்குக் காரணம் எனப்பார்வையாளர்கள் கருதுகிருர்கள்.

37 அபேட்சகர்களை நிறுத்திய சோ. முன்னணியில் 8 பேர் வெற்றி பெற்ருலும் தேசியக் கட்சித் தலைவரான பினங்கு மேயர் திரு. ராமநாதனின் தோல்வி அக்கட்சிக்கு ஈடு கட்ட முடியாத நஷ்டம் என்று பிற கட்சித் தலைவர்களும் கூட ஒப்புக் கொள்ளுகிருர்கள். இவரைப் போன்றே அக்கட்சியில் வேறு சில குறிப்பிடத்தக்க அபேட்சகர்களும் தோல்வியுற்றிருக்கிருர்கள். கிள்ளானில், திரு. வி. மாணிக்கவாசகத்தை எதிர்த்து நின்ற திரு. எஸ். எஸ். நாயகம் இரண்டாயிரம் வாக்கு வித்தியாசத்தில் தோற்கடிக்கப் பட்டு விட்டார். ஆனல், வாக்குக்கள் எண்ணிக்கை நடத்தும் போது, பெட்டிகள் உடைபட்டிருந்ததாகவும் அதனல் இந்தத் தேர்தலைத்தாம் ஆட்சேபிப்பதாகவும் பத்திரிகைகளில் செய்தி வெளியிட்டிருக்கிருர். மேலும் அவர் கோர்ட்மூலம் நடவடிக்கை எடுக்க ஆயத்தம் செய்வதாகவும் அச்செய்தியிலிருந்து தெரிய வருகிறது.

### டேவிட் வெற்றி

சோ. முன்னணியில் குறிப்பிடத்தக்க அபேட்சகர்கள் தோல்வியடைந்தாலும் கோலாலம்பூர் பங்சார் தொகுதியில் நான்கு முனைப் போட்டிக்கு ஆளாயிருந்த கனம் வி. டேவிட்டின் வெற்றி, மலாயா முழுவதுக்கும் அதிர்ச்சியையும், ஆச்சரியத்தையும்தந்தன எனின் அது மிகையாகாது. ஏனென்ருல், மலாயாவில் பங்சார் தொகுதிதான் 35, 549 வாக்காளர்களைக் கொண்ட பெரிய தொகுதி. கூட்டணி, ம. மு. க. சுயேச்சை ஆகிய மூவரும் சீனர்கள் மட்டுமல்ல—நிறைந்த செல்வமும் நல்ல செல்வாக்குமுடையவர்கள். சீனர்களின் வாக்குக்கள்தான் பெரும்பான்மை. அப்படியிருந்தும் 2,913 வாக்குகள் அதிகமாகப் பெற்று வெற்றியை அடைந்தார் கனம் டேவிட். 26 வயதுடைய கனம்டேவிட் நகரசபை, மாகாணசட்டசபை, பாராளுமன்றம் ஆகிய மூன்று சபைகளில் கலகலப்பை உண்டு பண்ணிக் கொண்டிருப்பார்.

### மேற் சபை உறுப்பினர்

சுதந்திர மலாயாவில், மேல் சபையும் இருந்து வரும். அதற்கு ஒவ்வொரு மாகாணத்திலுமிருந்து இருவர் அனுப்பப்படுவர். இவர்களுடன் சிறுபான்மை வகுப்பினரின் ஆதரவில் ஒவ்வொருவரும், ஈய உற்பத்தி, ரப்பர் உற்பத்தி, வர்த்தகம் போன்ற ஸ்தாபனங்களிலிருந்து மாட்சிமைதங்கிய பேரரசரால் தேர்ந்தெடுக்கப்படுவர். ரப்பர் உற்பத்தி ஸ்தாபனத்திலிருந்து டத்தோ ஸேர் கிளப் துரைசிங்கம் நியமிக்கப்பட்டிருக்கிருர் எனத் தெரிகிறது.

பாராளுமன்றம் வருகிற செப்டம்பர் மாதம் 16-ம் தேதி மலாயா மாமன்னரால் திறந்து வைக்கப் படவிருக்கிறது. அதன் விபரங்களை அடுத்த கடிதத்தில் பார்ப்போம்.


**யாழ்ப்பாணம்**

**ஐக்கிய இலாப நிதி**

— 1918-ஆம் ஆண்டு தாபிதமானது —

**வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.**

**இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப்பணம் ரூபா 616313,00**

**100 ரூபா விகிதமான 8000 பங்குகள்**

**பங்குப்பணங்கட்டுமுறை**

மாதமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்பட வேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100-00 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்தநேரமும் வாங்கலாம்.

**தினசரிப் பற்றுவரவு**

எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒருவிகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

**தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்**

க்ஷேமப்பணம் 12 மாசம், 36 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 6 விகிதமும் 8 விகிதமுமாகக் கொடுக்கப்படும்.

**உண்டியல்கள்**

கொழும்பிலுள்ள 'நாஷனல்' வங்கியிலும் 'இம்பீரியல்' வங்கியிலும், இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும்வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

**கடன்**

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகமாகக் கொடுக்கலாம்.

**இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.**

**எஸ். கனகசபை**

சிருப்பர்

Std. 14.


**அகில இலங்கை முஸ்லிம் வாலிபர் இயக்க மாநாட்டின் 9ஆவது வருடாந்தக்கூட்டம் சமீபத்தில் மாத்தளையில் ஜனுப் எஸ். ஏச். ஏ. வதூத் தலைமையில் நடைபெற்றது. முஸ்லிம்களின் சிந்தனையைத் தூண்டும் வகையில் அமைந்துள்ளன தலைவர் தெரிவித்துள்ள சில கருத்துக்கள்.**

# துருப்பிடித்த கருத்துக்கள் உருக்குலைகின்றன புதுமைச் சிந்தனைகள் உயிர்பெறுகின்றன

## முஸ்லிம் வாலிபர்களுக்கு வதூத் அறிவுரை

மனித சமுதாயத்தின் சிந்தனை, செயல் உட்பட்ட சகல துறைகளிலும் பிரமாண்டமான மாற்றங்கள் உலகில் ஏற்பட்டு வரும் கட்டத்தில் நாம் வசிக்கிருேம். துருப்பிடித்த பழங் கருத்துக்கள், உருக்குலைக்கப்பட்டு வருகின்றன ஒரு பக்கத்தில்: நவ நவமான புதுமைப் போக்குகளும், சிந்தனைகளும் மறு புறத்தில் உயிர் பெறத் துடித்துச் சமர் செய்கின்றன.

இக் கட்டத்தில் இளைஞர் பரம்பரை புதுப்புது பிரச்சினைகளுக்கும், பொறுப்புக்களுக்கும் முகம் கொடுக்கும்படி அறைகூவி அழைக்கப்படுகின்றனர். இலங்கை இளைஞர்களில் எம் சமுதாயத்தைச் சார்ந்த, எம் வாலிபர் இயக்கத்தைச் சேர்ந்த பிரிவினருக்குப் பிரதிநிதித்துவம் வகிக்கும் நாம், இதே பொறுப்புகளுக்கு வாரிசுகளாக இருக்கிருேம். இங்கு எம்மை எதிர் நோக்கும் பிரச்சினைகளையும் பொறுப்புகளையும் எம் நாட்டையும் எம் சமூகத்தையும் புகைப்படமாக நிறுத்தி, எடைபோட்டு, வழிவகுக்க முயற்சிப்பது பொருந்தும் என்று நினைக்கின்றேன்.

எம் நாட்டில் ஏற்பட்டு வரும் மாற்றங்கள் இரண்டு எதிர் முரணுன உணர்ச்சிகளைப் பிறப்பிப்பதாய் இருக்கின்றன. மலர்ந்த முகத்துடன் சோபனம் பாடி வரவேற்கிறது ஒரு பிரிவு; மனவேதனைப் பட்டு சபிக்கிறது ஒரு பிரிவு.

உழுத்துப் போன அமைப்புக்கள் கலைக்கப் பட்டு அவைகளுக்குப் பதிலாகப்புதியஅமைப்புக்கள் நிர்மாணிக்கப்படும் போது தோன்றும் இடைவெளிகள், காலக்கட்டங்கள், சோதனை நிறைந்தவைகளாக இருக்கும் என்பது அடிப்படை உண்மை. நூற்ருண்டுகளாக இடப்பட்டிருந்த அடிமைத்தளை அறுக்கப்பட்டு சுதந்திர பாதையில் தேசிய வளர்ச்சியை நோக்கிச் செல்லும் போது ஏற்படும் கட்டத்தையே இன்றைய நிலைமை பிரதிபலிக்கிறது. தேசம், மக்கள் முதிர்ச்சி பெற்று விருத்தியடைய இக் கட்டத்தைத் தாண்டியே ஆக வேண்டும். அப்போது தான் நாடு சுயநம்பிக்கையையும், உறுதியையும் பெறும். எம் நாட்டின்விமோசனவளர்ச்சியில் தான் எம் சமூகத்தின் விமோசன வளர்ச்சியும் பின்னிக்கிடக்கிறது என்பதை உணர்ந்தவர்கள், முஸ்லிம்கள்என்றமுறையிலும்இந்நாட்டு மக்கள் என்ற முறையிலும், நாட்டின் வளர்ச்சியின்பரிணமிப்பை வரவேற்பார்கள். ஆகையால் இந்த மாற்றங்களைப்பின்னணியாகக் கொண்டமையில் நாட்டைச் சம்பந்தப்பட்ட வரையில், அரசியல், பொருளாதார, சமுதாய கலாச்சார, அலுவல்களில் எம் சமூகம் என்ன கண்ணேட்டத்தைப் பெற்றிருக்கிறது? என்ன பங்கை வகிக்கப் போகிறது? என்ற பிரச்சினைகள் எம் கவனத்தை ஈர்க்க வேண்டும்.

எமக்கு தனிப்பட்ட பிரத்தியேகமான ஒரு அரசியல் கட்சியோ, கட்சிகளோ, தேவையா? என்ற கேள்வியை ஆரம்பத்திலேயே எம்மிடையே நாமே எழுப்பிக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிருேம். 1958-ல் உண்டான இரத்தக் களரிக்கும் பிறகு கூட வகுப்பு வாதம் என்ற பூதத்தை வளர்த்து, இன அடிப்படையான அரசியல் கட்சிகளை தொடர்ந்தும் நடத்துவது உசிதமா என்ற கேள்வி இன்று பெரும் கேள்வியாக கிளம்பியிருக்கிறது. வகுப்பு வாத போக்கும், வகுப்புவாத அரசியலும், நிர்மூலம் செய்யப் படாதவரை நாட்டுக்கு வருங் காலம் கிடையாது என்பது தான் 1958 சம்பவத்திலிருந்து உதயமாகும். தவிர்க்க முடியாத படிப்பினை. அத்துடன் சாதி, சமய எல்லைகளுக்கப் பால் நின்று, நாட்டினதும், மக்களினதும் லௌகீக பிரச்சினைகளை மக்கள் மன்றத்தின் முன் வைத்தும், சமத்துவம், தர்மம், ஆகிய அடிப்படை உரிமைகளை அஸ்திவாரமாகக் கொண்டும் எழுப்பப்பட்ட அரசியல் கட்சிகள் தோன்றும் வரை எந்த சமூகத்திற்கும் விமோசனம் கிடையாது. வகுப்புவாத அரசியல் இரு பக்கமும் கூர்மையான வாளைப் போன்றது, ஆபத்தானது. ஒரு சமூகத்தினரிடையே வகுப்பு வாதம் தலையெடுக்குமாயின் இதர சமூகத்தினரிடையேயும் தொத்து நோய் போல் பரவும். பெரும்பான்மை சமூகத்தினரிடையே வகுப்பு வாதம் தலை தூக்குமாயின் அது பயங்கரமான, வியாபகமான விளைவுகளை உண்டாக்கும். ஆகையால் முஸ்லிம்களைப் போன்ற ஒரு சிறுபான்மை சமூகத்தினர் வகுப்புவாத அரசியலை அகற்ற தம் பூரண சக்தியையும் கொண்டு போராடுவது புனிதமடைந்த சுயநலத்தின் மார்க்கமேயாகும். வகுப்புவாத அரசியல் கலைக்கப்படுவதால் பயனுண்டு, நஷ்டமில்லை. முஸ்லிம்களாகிய நாம் இத்துறையில் முதன் முதல் தாக்குதலை நடத்தி, நாட்டிலுள்ள வகுப்புவாதத்திற்கு விரோதமான முன்னேற்ற சக்திகளின் கையைப் பலப்படுத்துவதற்கான சூழ்நிலையை உருவாக்க முன் வரவேண்டும் என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம்.

முஸ்லிம் மக்கள் தனித்து இயங்குவதாலோ, தனிக் கட்சியை நடத்துவதாலோ அரசியல், பொருளாதார, சலுகைகள் கிடைத்து விடாது. இலங்கை சமாஜத்தின் ஒரு பகுதியினரே நாம். நாட்டின் இதர மக்கள் பிரிவினரின் அரசியல் வாழ்க்கையிலிருந்து எம்மைப் பிய்த்து, விலக்கிக் கொள்ளவோ, அவர்களுக்கு அப்பால் நின்று, தனி நிலையில்

(13-ம் பக்கம் பார்க்க

அருள்வழி

# பக்தியின் உயர்வை விளக்கும் ஆனந்தமயமான கைலைக் காட்சி

## சச்சிதானந்த சுவாமிகளின் யாத்திரை அனுபவம்

இணுவில் சைவமகாசன வித்தியாசாலையில் இணுவில் இந்து சமய விருத்திச்சபை ஆதரவில் சுவாமிசச்சிதானந்தயோகிராஜ் 'திருக்கைலாச யாத்திரை' என்னும் பொருள்பற்றி ஓர் அரிய விரிவுரை ஆற்றினர். இக் கூட்டத்திற்கு டாக்டர் திரு. க. சிவஞானரத்தினம் தலைமைவகித்தார். சுவாமிகள் பேசியதாவது:-

'மீண்டும் ஒரு முறை கைலை யாத்திரை செய்யும் வாய்ப்பு இன்று கிடைத்திருக்கிறது. நாமெல்லாரும் கைலை யாத்திரை செய்கின்றவர்களே. இந்துக்களின் குறிக்கோளாக அது விளங்குகிறது. கைலை யாத்திரை மிகக்கடினம். பல வகைத் தடைகள் துன்பங்கள் ஆரம்பமுதல் முடிவுவரை உள. விருப்பம் இருப்பினும் பல்வகைப் பற்றுக்கள்புறப்படவிடுவதில்லை. வழியிலே தடைகளோ பல. சென்று மீள்வது கடினம். எமது வாழ்க்கையிலும் இத்தகைய தடைகள் உள. தடையோட்ட விளையாட்டுப் போட்டிக்குப் பலவகைத் தடைகளை ஏற்படுத்தி இருப்பது போல இறைவன் எமக்கும் வேண்டுமென்றே பலவகைத் தடைகளை ஏற்படுத்தி இருக்கின்றான். விளையாட்டில் அத் தடைகளை எல்லாம் கடந்தவருக்கு வெள்ளிக் கிண்ணப் பரிசு கிடைக்கிறது. அதுபோல் இங்கு இத் தடைகள் யாவையும் கடந்தவர்களுக்குக் கைலைக் காட்சி, அல்லது வீடுபேறு கிடைக்கிறது. எமது பற்றுக்கள் யாவையும் நாம் அகற்றிவிடவேண்டும். உயிரையே தியாகம் செய்ய ஆயத்தமாக இருக்கவேண்டும்.

### பற்றுக்களை அகற்றவேண்டும்

கோவிலுக்குச் செல்லும் போது ஓர் ஆற்றைக் கடக்க வேண்டிவரலாம் அல்லது ஒரு களியாட்டவிழாவைப் பார்க்க வேண்டி வரலாம். ஆற்றைக் கடப்பது துன்பத்தடை, களியாட்டவிழாவைப் பார்ப்பது இன்பத்தடை. ஆற்றைக்கடக்காவிட்டால் அல்லது களியாட்ட விழாவைப் பார்த்துக் காலத்தைப் போக்கினுல் கோவில் தரிசனம் கிடைப்பதில்லை. இதுபோலவே துன்ப இன்பத் தடைகளினுல் நாம் எமது குறிக்கோளை அடைவதில்லை. இவை இரண்டையும் கடந்தவர்களுக்கே அது கிடைக்கும். அத்தகையோர் ஒரு சிலரே. முன்னுள்ள பற்றுக்கள்பலவற்றுடன் பின்னும் பல அழுக்குகள் மனிதனைப் பிடித்துவிடுகின்றன. வேட்டியில் கறை பிடிப்பதுபோல், பொறுமை, ஆசை, கோபம் முதலியன பற்றிப் பிடித்துக்கொள்கின்றன. கறைபிடித்தால் போக்குவது கடினம். ஆகவே அவற்றைப் பிடிக்கவிடாமற் காத்துக் கொள்ள வேண்டும்.

### மலை ஏறுதல்

கைலைமலை இமய மலைத் தொடரில் கோப்பைவடிவாக அமைந்துளது. அல்மோரா வரை வண்டிப் போக்குவரத்து உண்டு. அப்பால் குதிரைகளிற் செல்ல வேண்டும். மிலம் என்னும் இடத்திற்கப்பால்மலையேற்றுக் கடினத்தால் பொருள் விலை அதிகம். பொருள்கள் விலையானுலும் மலைவாசிகளின் பண்பாடு உயர்ந்தது. மலையில் பொருள்களை வைத்துவிட்டு வியாபாரிகள் சென்றுவிடுவர். ஆண்டு ஒன்று சென்றுலும் அவை அப்படியே இருக்கும். யாரும் தொடுவதில்லை. தோற்றத்தில் அநாகரிகர் ஆயினும் செயலில் பண்புள்ளவர்கள். ஆனுல் கீழே நாகரிகமான மக்கள் வாழும் நாடுகளில் பக்கத்தில் நிற்கவே பொருளைக் கொண்டு போய்விடுவார்கள். மிலத்திற்கப்பால் திபேத். காற்றுக் குறைவால் மூச்சுத் திண்டாட்டம் அதிகம். எங்கும் பனிப்பாறை. பொருள்களைக் கையில் கொண்டு மலை ஏற முடியாது. அவைகளை மிருகங்கள் சுமந்துகொண்டு வரும். கையிலே தாங்கி ஏறுவதற்கு ஒரு தடி வேண்டும். இறைவன் ஒருவனே எமக்குத் துணை என்பதை இத் தடி நினைவுறுத்துகிறது. பல கணவாய்கள் உள. கிங்கிரிக் கணவாய் 18 ஆயிரம் அடி. பனியில் பல இன்னல்கள். கால்கள் திடீரெனப் புதைந்துவிடும். முழு உடலும் புதையாதபடி அரையிலே தடை கட்டவேண்டும். புதைந்தவுடன் தூக்கிவிட வேண்டும். மிருகமோ மனிதனே இறந்துவிட்டால் கழுகுகள் வந்துவிடும். எங்கிருந்துவருகின்றனவோ தெரியாது. ஒருவனுக்குத் துன்பம்; இன்னெருவனுக்கு இன்பம் என்பதை இது உணர்த்துகிறது. ஆக உயர்ந்த மரம் ஒன்றரை அடி. குதிரைகளின் தொல்லைகள் அதிகம். திபேத்தியர்கள் பச்சைத் தோலை உடையாகப் போர்த்திருக்கிருர்கள். குழந்தைகளைப் போன்ற சுபாவம். ஆனுல் தெய்வபக்தி அதிகம். தண்ணீர் இன்மை அதிகம். ஒரு பிளாஸ்ரிக் போத்தல் நீரைப் 16 பேர் குடிக்கவேண்டியதாயிற்று.

### ஆனந்தமயம்

கைலை மலை 23 ஆயிரம் அடி உயரம். 19 ஆயிரம் அடி உயரத்தில் செல்லும்போது நெடுந்தூரத்திலிருந்தே பார்க்க முடிகிறது. கைலைக்காட்சி ஆனந்தமயமானது. சொல்லமுடியாதது. சிவலிங்க உருவமும் அதன்மேல் விபூதியும் இருப்பது போல் இயற்கையாகவே அமைந்திருக்கிறது. காலையில் தங்கம்போல் மிளிர்கிறது. மத்தியானம் வேறு நிறம். மாலை வேறு நிறம். இவ்வாறு நேரத்திற்கு நேரம் ஒவ்வொரு தோற்றம் அளிக்கிறது. எப்போதும் கருமுகில்கள் சூழ்வதால் பார்க்க முடியவில்லை. இடையிடையே கருமுகில்கள் சிறிது நீங்கப் பார்க்கலாம். பிறையும் சேர்ந்து இருக்கும்போது சிவசொரூபமாகவே காட்சிதருகிறது. இவைகளைப் பார்த்தே பெரியோர்கள் உருவங்களை அமைத்தார்கள் எனத் தோன்றுகிறது. தவசிரேட்டர்கள் சூக்கும உருவத்தில் வசிக்கின்றனர். தூய உள்ளத்தோடு செல்பவர்களுக்கு அவர்களது தரிசனம் கிடைக்கிறது. கைலைப் பிரதட்சணப் பாதை 32 மைல். கடைசிச் சோதனையாகக் கௌரிகுண்டத்தில் மூழ்கிஎழவேண்டும். பனி மலைகளின் நடுவே பனிப்பாறை மூடியிருக்கிறது. அதனை உடைத்தால் அப் பிளவினூடு நீர் தெரிகிறது. கடுங் குளிர். அத்துடன் பனிப்பிளவு ஒன்று சேர்வதற்கிடையில் மூழ்கி எழ வேண்டும். இதற்கு அவனது அருள், கருணை வேண்டும். பிரதட்சணம் 24 நாள். மிகக் கடினமான கூட்டாங்கப் பிரதட்சணத்தை சில பெரியார்கள் மேற்கொள்வர்.

### பக்தியின் உயர்வு

பக்தியின் உயர்வை இங்கு பார்க்க முடிகிறது. கார் கிடைக்காவிட்டால் கோவிலுக்குப் போவதை நிறுத்திவிடுகிருர்கள், இங்கு. மானசரோர்வாவியிலும் மூழ்கி எழவேண்டும். 800 மைல்பிரயாணம். 2 மாதம். கர்பான்வந்து சேர்ந்தபோது பல கடிதங்கள்கிடைத்தன. பல இன்னல்களுக்கிடையே உயிருடன் மீண்டு வந்ததற்கு முதல் இறைவனின் ஆசி, இரண்டு அன்பர்களின் பிரார்த்தனை என்பதை உணரமுடிந்தது. இன்னும் சில காலம் இங்கு பணி செய்ய வேண்டுமென்பது இறைவனின் விருப்பம். அன்பர்களின் வேண்டுதலும் போலும்.

* * *

வித்தியாதிகாரி திரு. எஸ். யூ. சோமசேகரம் பேசும்போது யோகக் கலையின் பெருமைகளை எடுத்துரைத்து சுவாமி அவர்களின் பக்திப் பணிகளைப் போற்றினர்.

காரியதரிசி திரு. க. கந்தசாமி நன்றி கூறினர்.

# சைவசமயத்துக்கு அடி நிலையான வேதங்கள் எவை?

— ந. சி. கந்தையாபிள்ளை —

சைவ சமய பாட நூல்கள் வேதங்களின் காலத்தைக் குறிப்பிட்டு எழுதியிருப்பதைப் பற்றிப் பலர் கண்டனமெழுதி வருகின்றனர். வேத பாடல்கள் செய்யப்பட்ட காலம், அவை தொகுக்கப்பட்ட காலம் முதலியவற்றை வரலாற்று நூல்கள் குறிப்பிடுகின்றன. பலர் அறியக் கிடக்கும் இச் செய்திகளை மறைத்து வைக்க முடியாது. சைவசமயத்துக்கு ஆதாரமாகவுள்ள நான் மறைகளை இறைவன் கல்லாலின் கீழிருந்து சனகாதி நால்வருக்கு அருளிச் செய்தார் என்னும் ஐதீகம் தமிழ் நாட்டில் பழங்காலம் முதல் இருந்து வருகிறது. வடமொழி வேதங்களின் தோற்றத்துக்கு இவ்வகை ஐதீகமோ வரலாருே காணப்படவில்லை. கடவுளால் அருளப்பட்ட நான் மறைகள் மறைந்துவிட்டன. தமிழ் மறைகள் சம்பந்தமாகச் சைவ அறிஞர் ஒருவர் கூறியிருப்பது வருமாறு:

" இமய மலை கடலிலிருந்து எழுமுன் முன் குமரி நாட்டில் மகேந்திரம் என்னும் மலை இருந்தது. அது கடலுள் மூழ்கி மறைந்து போயிற்று. அங்கு தமிழ் மறைகள் கடவுளால் நான்குமுனிவர்களுக்கு வெளியிடப்பட்டன. அறம்பொருள் இன்பம் வீடு என்னும் நாற்பொருள்களைக் கூறினமையின் அவை நான் மறைகள் எனப்பட்டன. பிற்காலத்திலெழுந்த ஆரிய நான்மறைகளிலிருந்து வேறுபடுத்துவதற்கு இவை பண்டாய நான்மறைகள் எனப்பட்டன. வெள்ளப் பெருக்குகளாலும் நீண்ட பழமையாலும் அவை மறைந்துபோயின. குமரி நாட்டின் அழிவினுல் தத்தளித்து வடக்கு நோக்கிச் சென்று குடியேறிய மக்கள் பண்டாய நான்மறைப் பொருள்களை நினைவில் வைத்துக் காப்பாற்றி வந்தார்கள். அம்மறைகளைப் பற்றிய குறிப்புகள் சமயாசாரியர்கள் ஆழ்வார்கள் பாடல்களில் ஆங்காங்குகாணப்படுகின்றன. தமிழரின் தத்துவ ஞானங்கள் ஆகமங்களிற் காணப்படுகின்றன. சைவ சித்தாந்தம் தமிழரின் நுண்ணறிவில் விளைந்த ஞானம்."

" நான்கு கூருய் மறைந்த பொருளுடைமையான் நான் மறையென்றார். அவை தைத்திரியமும், பௌடிகமும், தலவகாரமும், சாமவேதமுமாம். இனி இருக்கும் எசுவும், அதர்வணமும் என்பாருமுளர். அது பொருந்தாது " என்பது ஆசிரியர் நச்சினுர்க்கினியர் உரை. தைத்திரியம், பௌடிகம், தலவகாரம் முதலிய பெயர்கள் வடமொழி வேதங்களுக்குப் பெயராக வழங்கியதைப்பற்றி வடமொழி வேத ஆராய்ச்சியாளர் எவரும் கூறவில்லை. தைத்திரியம் என்பது உபநிடதங்களில் ஒன்றின் பெயராகக் காணப்படுகிறது. " இருக்கு முதல் வேதம் பௌடிகம் எனப்படும்" "இரண்டாம் வேதம் தைத்திரிய மென்ப" "மூன்றுவது சாமம் கீதநடை சாரும்" "நான்காம் வேதம் அதர்வண மென்ப" என்பன திவாகரச் சூத்திரங்கள். இவற்ருலும் நச்சினுர்க்கினியர் உரையாலும் தமிழ் நாட்டில் வேதங்கள் எவை என்பதைப்பற்றித் தடுமாற்றம் இருந்ததாகத் தெரிகிறது.

ஆரியர் வெளிநாடுகளிலிருந்து வந்து இந்தியாவை அடைந்தவர்கள் என்பது சரித்திராசிரியர்அறுதியிட்டுக் கூறும் முடிவு. ஆகவே அவர்களின் வேதம் அவர் வந்தபின்பே தோன்றியதெனக்கூறுதல்நியாயமானதே. இதனுல் சைவசமயத்துக்கு நேரக்கூடிய இடர்ப்பாடு யாதும் இல்லை. ஆரியர் தமிழர் என்போர் இரு வேறு கூட்டத்தினர். இரு வகையினர். சமயங்களும் வேருகவிருந்தன. சமயாசாரியர்கள் காலத்தை அடுத்து வேதமதமும் (வைதீகமும்) சைவசமயமும்இணைந்துவைதீக சைவம் தோன்றியது. அக்காலத்தில் தமிழுக்குப் பதில் சமஸ்கிருதம் சமயமொழியாகக் கொண்டுவரப்பட்டது. இவை போன்றஅடிநிலையான வரலாற்றுண்மைகளை மாணவர் அறிதல் வேண்டும். சைவசமயப் பாட நூல்கள் எழுதுவோர் சைவத்தின் வரலாற்றை அறிவுமுறையில் எழுதுவது விரும்பத்தக்கதாகும்.

## வகுப்புத்தொழிலாளரின் ஒற்றுமை

### சம்பள உயர்வும், சலுகையும்

யாழ்ப்பாணம்

'உங்களைச் சுரண்டிக்கொண்டிருந்தவர்கள் இனிமேல் அவ்வாறு செய்யமுடியாத வகையில் உங்கள்சங்கம் செய்து விட்டதே என்று அவர்கள்பெரிதும் வருந்துகிருர்கள்.' இவ்வாறு சென்றவாரம் யாழ்ப்பாணம் பாங்ஷால் தெருவில் நடைபெற்ற வகுப்புத் தொழிலாளர் சங்கத்தின் (மூட்டைகள் இறக்கும் தொழிலாளர்) கூட்டமொன்றில் திரு. அ. விஸ்வநாதன் (எம். எம் ஸி.) குறிப்பிட்டார். திரு. விஸ்வநாதன் தொடர்ந்து பேசியதாவது: இதுவரை கண்டிராக்டர்மார் உங்கள் உதிரத்தை உறிஞ்சிக்கொண்டே வந்ததுமல்லாமல் உங்களுக்குக் குறைந்த சம்பளத்தையும் தந்தார்கள். இச் செயல்களால் நீங்கள் அவர்களின் அடிமைகளாயிருந்தீர்கள். இப்பொழுது இந்த வகுப்புத் தொழிலாளர் சங்கம் நிறுவப்பட்டதும் அவர்கள் உங்கள் போக்கையே மாற்ற முயலுகிருர்கள். கள்ளாலும் காசாலும் உங்கள் மனத்தை இச் சங்கத்திற்கெதிராக மாற்ற நினைத்த கண்டிராக்டர்மார் படுதோல்வியையே கண்டார்கள். உங்கள் ஒற்றுமை மனப்பான்மையும் உண்மை உழைப்பும் ஒன்றுசேர்ந்து இவர்களை எதிர்த்துப் போராடச் செய்துவிட்டன. இந்தச்சங்கம் நிறுவப்பட்ட சொற்பகாலத்திலே பல நன்மைகளை உங்களுக்கு அது செய்துவிட்டது. நீங்கள் முன்பெற்ற சம்பளத்தை மூன்று மடங்காக உயர்த்தித் தந்திருப்பதுமன்றி இச் சங்கம் வேறு பல சலுகைகளையும் தொழிலாளருக்குப் பெற்றுக்கொடுத்துள்ளது.

* * *

யாழ்ப்பாணம் வகுப்புத் தொழிலாளர் சங்கம் 1958இல் நிறுவப்பட்டது. நிறுவப்பட்டுச் சொற்பகாலத்துக்குள் வகுப்புத் தொழிலாளரின் சம்பளத்தை உயர்த்த உதவி புரிந்தது. இச் சங்கம் கப்பல்களில் வரும் உணவு மூட்டைகளை இறக்குவதற்கு அனுமதி அளிக்குமாறு யாழ்ப்பாணம் உணவு வினியோகப் பகுதியிடம் வேண்டியுள்ளது. —ந.நி.

## துருப்பிடித்த கருத்துக்கள்

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

போடவோ முடியாது, சாதுரியமுமாகாது. எம் தாய்த் திருநாட்டின் முஸ்லிம் மக்களின் அபிலாஷைகள், சிங்கள, தமிழ் மக்களின் அபிலாஷைகளுக்கு முரணனவையல்ல என்பது என்னுடைய தர்க்கமான, தாழ்மையான முடிவு. ஆகையால் முஸ்லிம் அரசியல் கட்சிகளை நாம் கலைத்து விட்டு, தனியாகவும் கூட்டாகவும், எம் தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய, திராணி பெற்ற சாதி சமய சார்பற்ற அரசியல் கட்சிகளை அணுகுவதே உசிதம். இதுவே சரித்திரம் எமக்குக் காட்டும் பாதை.

VENUS
SOAP
வீனஸ் சோப்

தரத்தில் சிறந்தது, உடைகளை வெண்மையாக்குவது,
அதிக நுரையைத் தருவது

வீனஸ் சோப்

வீனஸ் சோப் தொழிற்சாலை
269, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.

விளையாட்டுப் பகுதி

# 'இமயத்தில் தமிழ்க் கொடியை ஏற்றுவேன்; எனது இதயத்தின் ஆசையும் அதுவே'

## தமிழ் இனத்தின் புகழ் பரப்பும் வீரன் வலம்புரி

— நமது நிருபர் —

யாழ்ப்பாணம் முற்றவெளிப் பக்கம் இரு வாரங்களுக்கு முன் எவரும் சென்றிருந்தால் அங்கு குழுமியிருந்த ஜனத்திரளைக்கண்டு பிரமித்திருப்பார்கள். இந்தக் கூட்டத்திற்குக் காரணமாக விளங்கியவர், தென்னிந்தியாவிலிருந்து இங்கு வந்துள்ள சைக்கிள் ஓட்ட வீரரான வலம்புரியே.

யாழ்ப்பாண மக்களை அதிசயத்தில் ஆழ்த்திய இவ்வீரரை நமது நிருபர் சந்தித்தபோது நிருபரின் கேள்விகளுக்கெல்லாம் திரு. வலம்புரி விபரமாகப் பதில் அளித்தார்:

**கேள்வி:** தாங்கள் இச் சைக்கிள் ஓட்டத்தில் ஈடுபடுவதற்கு முக்கிய காரணமென்ன?

**பதில்:** தமிழனதும், தமிழ் நாட்டினதும் பெருமையை என்னல் முடிந்தளவு பரப்புவதற்கேயாகும்.

**கே:** தங்களின் சைக்கிள் ஓட்டத்தை எந்த விதத்தில் கருதுகிறீர்கள்? தொழிலாகவா? அல்லது கலையாகவா?

ப. இதனை ஒரு தொழிலாக நான் ஒரு போதும் கருதியதில்லை. கலையாகவே கருதி வருகிறேன் என்றும் சொல்லிவிட முடியாது. மக்களிடம் என் சாதனையைக்காட்டி மகிழ்விப்பதே எனது ஆசை.

**கே:** இந்தச் சைக்கிள் ஓட்டத்திற்கு வேண்டிய சக்தியை நீங்கள் எவ்விதம் பெறுகிறீர்கள்?

ப: உடற்பயிற்சி, உள்ள உறுதி, வேதனையைத் தாங்கும் பொறுமை இவைதான் எனக்குச் சக்தியளிக்கின்றன.

**கே:** யாழ்ப்பாண மக்கள் காட்டிய ஆர்வம்பற்றி உங்கள் கருத்து என்ன?

ப: அடேயப்பா! அவர்கள் காட்டிய ஆர்வத்தைப்போல் நான் சென்ற வேறு எந்த நகரிலும் கண்டதேயில்லை. அவர்களுடைய பேராதரவு என்னை 200 மணி நேரம் தொடர்ந்து ஓடுவதற்குத் தூண்டியுள்ளது.

**கே:** வெளிநாடுகளுக்கு விஜயம் செய்யும் நோக்கம் தங்களுக்குண்டா? அதற்குச் சென்னை அரசாங்கம் ஆதரவு அளிக்குமென நம்புகிறீர்களா?

ப: உலகம் முழுவதும் சுற்றுப் பிரயாணம் செய்து, என் சாதனை மூலம் தமிழ் இனத்திற்குப் புகழ் தேடித்தர வேண்டும் என்பதே எனது அவா. அதற்குச் சென்னை அரசாங்கம் உதவி அளிப்பது பற்றித் திடமாக எதுவும் கூற முடியாவிடிலும், தமிழ் மக்களின் பேராதரவு எனக்கு இருக்குமெனத் திடமாக நம்புகிறேன்.

**கே:** தங்கள் உடல் நிலையை இச் சைக்கிள் ஓட்டம் பாதிப்பதில்லையா?

ப: இல்லை.

**கே:** தங்கள் வியத்தகு சைக்கிள் ஓட்டத்தின் போது, டிக்கட் வசூலிக்காததற்குக் காரணம் என்ன?

ப: டிக்கட் வசூலித்தால், என்னுடைய முயற்சி எவ்விதம் 'சாதனை'யாகும்? அது வயிற்றுப் பிழைப்புக்காகவோ அல்லது பணம் சேர்ப்பதற்காகவோ செய்யும் முயற்சியாகவல்லவோ மாறிவிடும்!

**கே:** தங்கள் எதிர்காலத் திட்டங்கள் என்ன?

ப: நான் எனது 62 ஆவது வயது வரை உலகிலுள்ள பல நாடுகளிலும் எனது சாதனையைக் காட்டிவிட்டுப் பின்னர் 64 ஆவது ஆண்டில் இமயமலைக்குச் செல்ல உத்தேசித்துள்ளேன். இமயமலை உச்சியிலே 'தமிழ்' என்ற மூன்று சொற்கள் பொறிக்கப்பட்ட கொடியைப் பறக்கவிட முயற்சிப்பேன். இம் முயற்சியில் தோல்வியுற்ருல் மரணம். வெற்றி பெற்ருல், அது தமிழ் நாட்டின் வெற்றி என மகிழ்வேன்.

**கே:** தங்கள் சொந்த ஊர் எது? திருமணம் ஆகிவிட்டதா? அடுத்து எங்கு செல்ல யோசித்திருக்கிறீர்கள்?

ப: சொந்த ஊர் இராமநாதபுரம். திருமணம் ஆகவில்லை. அடுத்த 'ஓட்டம்' கொழும்பில். பின்னர் நான் என் தாயகம் திரும்புவேன். இரண்டு மாத ஓய்விற்குப் பின் சிங்கப்பூர் செல்ல யோசித்துள்ளேன்.






## வீரன் வலம்புரி

—கபிலர்—

வான வெளியில் வணமதி*யும் வல்வினையால்
ஊனுடம்பிற் செல்லும் உயிரும்போல் – வேனில்
நிலம்பிரிக்க வெய்யில் நிலவாக நின்ருன்
வலம்புரியென் றேத்தும் மகன்.

வெயில்நின்ற வாறும் மிதிவண்டி யுந்தும்
பயில்வும் வியப்பன்று; பார்வை - துயிலாது
நாளும் பின்னும் நடுக்கின்றி நின்றதிறம்
மானேயாம் வாழ்த்தும் வகை.

*வணமதி — செய்ற்கைச் சந்திரன்

## நீர்வேலி ஐக்கிய விளையாட்டுக் கழகம்

### அங்குரார்ப்பணக் கூட்டம்

நீர்வேலி ஐக்கிய விளையாட்டுக் கழகத்தின் பொதுக் கூட்டம் திரு. கே. நாகராசா தலைமையில் அத்தியார் இந்துக் கல்லூரியிற் சமீபத்தில் நடைபெற்றது. விளையாட்டுக் கழகத்தின் அத்தியாவசியம் பற்றித் தலைவர் தமது முன்னுரையில் விளக்கிய பின், அத்தியார் இந்துக் கல்லூரி உடற்பயிற்சிப் போதனசிரியர் திரு. ஐ. எஸ். சண்முகநாதனல் தயாரிக்கப்பட்ட கழகவிதிகள் பொதுக்கூட்ட உறுப்பினரால் ஆராயப்பட்டு அங்கீகரிக்கப்பட்டன. கூட்ட முடிவில் தலைவரின் வேண்டுகோளுக்கிணங்க திரு. ஐ. எஸ். சண்முகநாதன் கழக முன்னேற்றங்களைப் பற்றிச் சொற்பொழிவாற்றுகையிற் குறிப்பிட்டதாவது: கடந்த சில ஆண்டுகளுக்கு முன் பழைய முறைப்படி கைப்பந்தாட்டம் அகில இலங்கையில் நடாத்தப் பட்ட போது யாழ்ப்பாணம் எப்பொழுதும் முன்னணியில் இருந்ததுடன் திரு. தருமலிங்கம், திரு. மூர்த்தி போன்றவர்கள் கொழும்பு கைப்பந்தாட்டக் கோஷ்டிகளிலும் சிறந்து விளங்கினர். அகில இலங்கை உடற் பயிற்சி வீரர் தெரிவில் திரு. தருமலிங்கம் இரண்டாவது ஸ்தானத்தைப் பெற்றவர். பின் திரு. எதிர்வீரசிங்கம் தொடர்ந்து முதலாவது ஸ்தானத்தைப் பெற்றிருக்கின்ருர். புது முறைக் கைப்பந்தாட்டத்தில் வட இலங்கை எவ்வளவோ பின்னுக்குத்தான் இருக்கின்றது. எவ்விஷயத்தையும் புதிதாக ஆரம்பிக்கும் பொழுது அதை எதிர்ப்பது தமிழர் வழக்கமாகி விட்டது. இப்பொழுது உடுப்பிட்டி, வல்வெட்டித்துறை, அரியாலை போன்ற இடங்களைத் தவிர ஏனைய இடங்களில் பழைய முறைப்படி கைப்பந்தாட்டம் ஆடப்படுகின்றது. ஆனல் நீர்வேலி இளைஞர் ஓரளவு ஊக்கம் எடுப்பது மகிழ்ச்சிக்குரியது."

பின்வரும் உத்தியோகத்தர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

போஷகர்:- செ. நிர்க்குணனந்தன். உப தலைவர்:- (1) க. இராசதுரை, (2) க. வே. கனகரத்தினம். தலைவர்:- எம். யோகலிங்கம். உபதலைவர்கள்:- (1) பி. செல்வரத்தினம். (2) ரி. வேலுப்பிள்ளை. (3) என். தியாகராசா. காரியதரிசி;- ச. சிவசம்பு. உப-காரியதரிசி:- க. நாகராசா. பொருளாளர்:- சி. சுந்தரலிங்கம். மைதானக் காரியதரிசி:- சி. காசிலிங்கம். பரிசோதகர்:- த. மயில்வாகனம். செயற்குழு:- என். தனபாலசிங்கம். வி. இராசரத்தினம். அ. ஆனந்தராசா.

## இந்திய வீரர் அஜித் சிங் இலங்கை வருவார்

அடுத்த மாதம் கொழும்பில் நடைபெறவிருக்கும் விளையாட்டுப் பந்தயங்களில் கலந்து கொள்ள இந்திய விளையாட்டு வீரர் அஜித் சிங் இலங்கை வருவார். உயரப் பாய்ச்சலில் ஆசியாவில் சிறந்த ஒரு வீரராகத்திகழும் அஜித் சிங்கின் வருகை இலங்கை ரசிகர்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும் செய்தியாகும். இவருடன் மில்க்கா சிங், டல்ஜிற் சிங், மக்கான் சிங் என்பவர்களும் வருவார்கள்.

**சினிமா உலகம்**

# வீரபாண்டிய கட்டபொம்மன்

**வீரபாண்டிய கட்டபொம்மன்** வரலாற்றைத் தமிழர் படித்துள்ளனர். அவனுடைய வீர சரித்திரம் பற்றிப் பல நூல்கள் வாயிலாக அறிந்திருக்கின்றனர். அத்தகையவோர் அன்பு வீரனின் முகத்தைப் பார்க்க, அவன் பேச்சைக் கேட்க, அவன் வீர நடையைக் கண்டு உள்ளம் பூரிக்க எந்தத் தமிழ் மகன்தான் விரும்ப மாட்டான்? அப்படி விரும்பும் ஒவ்வொரு தமிழ் மகனும் தன் விருப்பத்தைப் பூர்த்தி செய்ய வழி கோலியிருக்கிறுர்கள் பத்மினி பிக்ஸர்ஸார், தமது 'வீர பாண்டிய கட்ட பொம்மன்' மூலம். அது மாத்திரமல்ல; அவர்கள் இப்படத்தின் மூலம் சிவாஜி கணேசனை உலகத்தில் சிறந்த நடிகர்களில் ஒருவராக்கி விட்டார்கள்.

இப்படம் முழுவதும் சிவாஜி கணேசனின் நடிப்பு உயிர்த் துடிப்புடன் உலவுகின்றது. வீரம், சோகம், கேலி, அன்பு, பக்தி, மகிழ்ச்சி இன்னும் மனிதனுக்கு எத்தனை நல்ல உணர்ச்சிகள் உண்டோ அத்தனை உணர்ச்சிகளும் கட்டபொம்மன் உருவத்திலே படத்தில் நடமாடுகின்றன. சிவாஜி கணேசனின் நடிப்பைப் பற்றிக் கூற வேண்டுமேயாயின் இப்படித்தான் கூறலாம். கட்டபொம்மனுக நடிப்பதற்காகவே சிவாஜி கணேசன் இவ்வுலகில் உதித்துள்ளார் என்பதே அது. அவருடைய நடிப்புக்கு ஆதாரமாக இங்கொரு கட்டம், அங்கொரு கட்டமென்று எடுத்துக்கூறவே முடியாது. எல்லாக் கட்டங்களிலும் அவர் கட்டபொம்மனுகவே பேசி, நடித்து, வாழ்ந்தும் இருக்கின்றுர்.

வெள்ளையத் தேவனுக வருகிறுர் ஜெமினி கணேசன். தமது பாகத்தை உணர்ந்து, நன்ருக நடிக்க வேண்டுமென்ற ஆர்வத்துடன் நடித்துள்ளார்.

ஊமைத் துரையாக வருபவர் ஓ. ஏ. கே. தேவர். அவருக்குப் படத்தில் சிறிய பாகமே. ஆனுலும், குறைசொல்ல இடமின்றிக் கவனம்எடுத்துச் செய்துள்ளார்.

எட்டப்பனுக வந்து ரசிகர்களின் வெறுப்பை விலைக்கு வாங்கும் வி. கே. ராமசாமியின் நடிப்பு அவ்வளவாகச் சோபிக்கவில்லை. ஆனுலும் சில இடங்களில் நன்ருகவே இருக்கிறது.

பத்மினி வெள்ளையம்மாவாகத் தோன்றித் துள்ளிக் குதிக்கிறுர், முன்பகுதியில். ஆனுல், பின்பகுதியில் அவருடைய மகிழ்ச்சி எல்லாம் பறிபோகின்றபடியினுல், சோகத்தின் உருவாகி விடுகிறுர். இரு பகுதிகளிலும் பத்மினி இயற்கையாகவே நடிக்கிறுர்.

ஜக்கம்மாவாக, சிவாஜியின் மனைவியாகத் தோன்றும் எஸ். வரலட்சுமியின் நடிப்பில் அமைதி இருக்கின்றது; பாட்டில் இனிமை இருக்கின்றது.

ஜெனரல் பானேர்மன்னுக நடிக்கும் ஜாவர் சீதாராமன் பரவாயில்லை.

டெக்னிக்கலர் பொதுவாகக் கண்ணை உறுத்துகிறது. சில இடங்களில், விசேஷமாக, கட்டபொம்மனின் சில தோற்றங்களைக் காட்டும்பொழுது, டெக்னிக் கலருக்கே உயிர் பிறந்துவிடுகிறது!

சக்தி கிருஷ்ணசுவாமியின் வசனம் படத்திற்கு நிறைந்த சக்தியளிக்கிறது.

கட்டபொம்மன் தம்பி மகள் மீனுவாக நடிக்கும் சிறுமி எமது உள்ளங்களைக் கொள்ளை கொண்டு விடுகிறுள்.

**வீரபாண்டிய கட்டபொம்மன்** தமிழ் மக்கள் அனைவரும் பார்த்துப் பரவசப்பட வேண்டிய படம். யாராவது அப்படத்தைப் பார்க்காமல் இருந்தால், கட்டபொம்மனின் உள்ளம் நொந்துவிடும். கட்டபொம்மன் உள்ளத்தை நோகச் செய்ய எந்தத் தமிழ் மகனுக்குத்தான் மனம் வரும்?


—மின்மினி.


## மகத்தான 2-வது வாரம்!

சென்ரல் (மருதானை) ஜோதி (திருக்கோணமலை) லிபேர்ட்டி (வதுளை)

வெற்றிகரமான 3-வது வாரம்! ராணி (யாழ்ப்பாணம்)

எஸ். எஸ். ராஜேந்திரன்
மனேகர்
டி. எஸ். பாலையா
சி. எஸ். பாண்டியன்
எஸ். வி. சுப்பையா
வி. கே. ராமசாமி
எம். என். ராஜம்
ராஜசுலோசனு
இன்னும் பலர் நடிக்கும்



# புதுமைப் பெண்

★ உள்ளத்தை ஈர்க்கும் உன்னதக் காட்சிகள்.
★ உவகையூட்டும் சிறந்த நடிப்பு.
★ உல்லாச கீதங்களின் இனந்தெரியாத உணர்ச்சி
இவை அனைத்தும் கொண்ட அற்புதத் திரைச் சித்திரம்.


## இந்திய இராணுவத்தில் நெருக்கடி

(7ஆம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் மோசமடையச் செய்திருக்கின்றன.

பஞ்சசீலக் கொள்கையை ஒப்புக்கொண்டிருப்பதோடுஇந்தியாவையும் இந்திய மக்களையும் ஏகாதிபத்தியவாதிகள் எனக் குற்றஞ்சாட்டும் சீனத்தின் நடவடிக்கைகள் விந்தையானவையாகவே இருக்கின்றன! இந்திய அரசாங்கம் பாதுகாப்பு நடவடிக்கையாக எல்லைப்புறப் பிரதேசங்களுக்கு இராணுவ உதவியை அனுப்பியும் புதிய தளங்களை அமைத்தும் வருகின்றது.

சமரசமாகப் பேச்சுவார்த்தைகள் மூலம் எல்லைச்சிக்கல்களைத் தீர்ப்பதற்குப் பதிலாகச் சீனம் தொடர்ந்து இந்திய பிரதேசங்களை ஆக்கிரமிக்கத் தொடங்குமானுல் ஆசிய நாடுகளின் ஒற்றுமைக்குப் பங்கம் ஏற்படுவதோடு இந்தியாவும் தனது நடுநிலைமையான வெளிநாட்டுக் கொள்கையை உதறித்தள்ளி மேற்கு வல்லரசுகளுடன் இணைய வேண்டியும் ஏற்படலாம்!

ஐஸன் ஹோவர்—குருஷேவ் சந்திப்பு நடைபெறுவதற்கு முன்னதாக சீனம் இந்தியாவுக்குத் தொல்லை கொடுத்து தனது எதிர்ப்பைக் காட்டுகின்றது என சில பத்திரிகைகள் கூறுகின்றன.

இந்தியாவுக்கும் சீனத்துக்கும் போர் மூளாமல் தடுத்து எல்லாப் பிணக்குகளையும் சமரசமாகப் பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்க்கப்படவேண்டியது இருநாடுகளின் நன்மைக்கும் உலகை சமாதானத்திற்கும் அத்தியாவசியம். பூட்டானுள் சீனப்படைகள் புகுந்துவிட்டன என்று வெளியான செய்தியை பூட்டானின் பிரதமர் மறுத்திருக்கிறுர்.

### நேரு-அயூப்கான் சந்திப்பு

சென்ற செவ்வாய்க்கிழமை கராச்சியில் இருந்து டக்காவிற்குச் செல்லும் வழியில் பாகிஸ்தான் ஜனுதிபதி, ஜெனரல் அயூப்கான் புது டில்லியில் பாலம் விமான நிலையத்தில் இருமணி நேரம் தங்கியபோது பிரதமர் நேருவுடன் ஒன்றரை மணி நேரம்வரை பேச்சுவார்த்தைகள் நடாத்தினுர். இரு தலைவர்களினதும் முதற் சந்திப்பு இதுவே. இரு நாடுகளுக்கும் இடையேயுள்ள பிணக்குகளை சமரசமாக இரு நாடுகளும் பயன்படக் கூடிய முறையில் தீர்ப்பதற்கு முயற்சிகளை மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளன என அவர்களுடைய கூட்டறிக்கையில் இருந்து தெரிய வருகிறது. எல்லைச்சிக்கல் போன்ற பிணக்குகளைத் தீர்ப்பதற்கு இருநாடுகளின் மந்திரிகளும் சந்திப்பார்கள் என அயூப்கான் கூறியிருக்கிறுர்.

### புதிய மத்திய போக்குவரத்து மந்திரி

டாக்டர் பி. சுப்பராயன் (70 வயது) மத்திய அரசாங்கத்தின் போக்குவரத்து மந்திரியாக 1-9-59இல் நியமிக்கப்பட்டிருக்கிறுர். சென்ற வாரம் உணவு மந்திரியாக நியமிக்கப்பட்ட திரு. எஸ். கே. பட்டில் வகித்துவந்த பதவியை இவர் ஏற்றுக்கொள்கிறுர்.

### மேற்கு வங்காளத்தில் ஆர்ப்பாட்டம்

அரசாங்கத்தின் உணவுக் கொள்கையைக் கண்டித்து மேற்கு வங்காளத்தில் ஜுலை 13 தொடக்கம் நடைபெற்று வரும் ஆர்ப்பாட்டங்களில் சென்ற சனிக்கிழமைவரை 6,311 பேர் கைதாகியிருக்கின்றனர். தடையுத்தரவுகளை மீறியதற்காக மேலும் 98 பேர் காவலில் வைக்கப்பட்டிருக்கின்றனர். கடந்த செவ்வாய்க்கிழமை பொலிசாரின் துப்பாக்கிப் பிரயோகத்திற்கு 6 பேர் பலியானுர்கள். காயமடைந்த 65 பேர் ஆஸ்பத்திரிகளில் அனுமதிக்கப்பட்டனர்.

### சிந்துநதி நீர்த்தகராறு

உலகவங்கியின் உத்தியோகத்தர்களுக்கும் இந்தியா, பாகிஸ்தான் அரசாங்கப் பிரதிநிதிகளுக்குமிடையே லண்டன் மாநகரில் நடைபெறும் சிந்துநதி நீர்ப்பங்கீடு பற்றிய மாநாடு இம்மாத முற்பகுதியில் மீண்டும் தொடர்ந்து நடைபெறும். அடுத்த ஜுன் மாதத்தில் இரு நாடுகளுக்கு மிடையே ஒரு நீர்ப்பங்கீடு ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும் என எதிர்பார்க்கலாம் என்று பாகிஸ்தான் பிரதிநிதி கூறியிருக்கிறுர்.

## நகர மண்டபத்தில் நாட்டிய விருந்து

யாழ்ப்பாணம் நகர மண்டபத்தில் இம் மாதம் 12 ஆம் திகதி, சனிக்கிழமையன்று கொழும்பிலிருந்து வந்திருக்கும் நிருத்யோதய நடன, இசைக் கல்லூரியைச் சேர்ந்த கோஷ்டியின் நடன விருந்தொன்று நடைபெறும். ஸ்ரீமதி ரஞ்சனு தங்கராஜாவின் தலைமையில் நடைபெறவிருக்கும் இந்த நடனம் யாழ்ப்பாணக் கலா ரசிகர்களுக்கு அரியவோர் விருந்தாக அமையுமென்பதில் ஐயமில்லை. இந்நாட்டிய விருந்தில் வசூலிக்கப்படும் பணம் நிருத்யோதயக் கல்லூரி விருத்திக்குப் பயன்படுத்தப்படும்.

## அறிவுச்சுடர் விடைகள்

1. சிங்கம்; இதன் கர்ச்சனை பத்து மைல்களுக்குமேல் கேட்கும்.
2. வெள்ளிக் கிரகத்தைச் சுற்றி முகிலைப்போன்று வாயு இருப்பதால், வாயு வெளிச்சத்தை நன்கு பிரதிபலிக்கின்றது.
3. இல்லை; அபிசீனியாவில்.
4. 100க்கு மேல்.
5. அமேசன் பகுதிகளில் வாழும் ஆனகொண்டா என்னும் பாம்பு; 25 அடி நீளமும் 3 அடி மொத்தமும் உடையது.

## நல்லூர் விழாவில் பக்தகோடிகள்

யாழ்ப்பாணம்


நல்லூர்ப் பதியில் சென்ற செவ்வாய் புதன், வியாழனில் நடைபெற்ற தேர், தீர்த்த, பூங்காவன விழாக்களிற் பங்குபற்றி முருகப் பெருமானைத் தரிசித்துப்போவதற்காகப் பல்லாயிரக் கணக்கான பக்தர்கள் நாட்டின்பலபாகங்களிலிருந்தும் திரண்டு வந்திருந்தனர். இந்தியாவிலிருந்துகூட பக்தர்கள் பலர் வந்திருந்தனர். இத்தினங்களில் எல்லாம் மக்களின் போக்குவரத்து வசதிகளை யாழ்ப்பாணம் மாநகர சபையாரும் போலிஸ் பகுதியினரும் நன்கு கவனித்தனர். வீதிகள் யாவும் சுத்தமாக இருந்தன.

## இப்பொழுது திரையிடப்படுகிறது!

கிங்ஸ்லி பிளாஸா நவா விஜயா ஸ்ரீ கிருஷ்ணா
(கொழும்பு) (வெள்ளவத்தை) (கொம்பனித்தெரு) (மட்டக்களப்பு) (திருக்கோணமலை)
ஆகிய தியேட்டர்களில்

பாலாஜி, தங்கவேலு, முத்துக்கிருஷ்ணன்,
சேதுபதி, சரோஜாதேவி, காமினி, முத்துலெட்சுமி,
குமுதினி, ராஜகாந்தம்
மற்றும் பலர் நடித்த

# மனமுள்ள மறுதாரம்




திரைக்கதை வசனம்:
**முரசொலி மாறன் M. A.**

★ மங்கையரின் வாழ்வில் நேரும் அதிர்ச்சிகளைச் சித்திரிக்கும் மகத்தான திரை ஓவியம்!

★ பெற்ற மகளைக் காப்பாற்ற தீயைத் துச்சமென மதித்து உயிர்நீத்த உத்தமியின் கதை!!

★ மனைவியை இழந்து மனமுடைந்த கணவன் மறுதாரம் செய்துகொண்டபின் நடந்தவற்றைச் சித்திரிக்கும் சிறந்த திரை விருந்து!!!

## இப்பொழுது திரையிடப்படுகிறது!

எல்பின்ஸ்டன் (மருதானை) ரெக்ஸி (வெள்ளவத்தை) வேல்ஸ் (கண்டி) நியூ இம்பீரியல் (மட்டக்களப்பு)

வின்ஸர் - ரீகல்
(யாழ்ப்பாணம்)

சென்னையில் மூன்று தியேட்டர்களில் மூன்று மாதங்களாகத் தொடர்ந்து ஓடுகின்றான்!

இப்பொழுது இலங்கைத்தீவிலும் தனது வெற்றிக்கொடியைப் பறக்க விடுகின்றான்!

# வீரபாண்டிய கட்டபொம்மன்

( முழுநீள டெக்னிக்கலர் படம் )

நட்சத்திரங்கள்:

★ சிவாஜி கணேசன் பத்மினி ★
★ ஜெமினி கணேசன் ராகினி ★
ஜாவர் சீதாராம் வரலெட்சுமி

தயாரிப்பாளர்: **பத்மினி பிக்சர்ஸ்**

ஸ்ருடியோ: **பரணி**

டைரக்ஷன்: **பி. ஆர். பந்துலு**

கதை வசனம்: **சக்தி கிருஷ்ணசாமி**

தமிழ்நாட்டுச் சரிதையில் தியாக புருடனாக, சுதந்திர வீரனாகத் திகழும் கட்டபொம்மனின் வாழ்க்கை வரலாற்றையும், சுதந்திர முழக்கத்தையும் திரையில் கண்டு மகிழுங்கள்!


இப்பத்திரிகை யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இல்லத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் கலாநிலையப் பதிப்பகத்தில் 'ஈழநாடு' பத்திரிகையின் சொந்தக்காரருக்காக பாலசுப்பிரமணியம் சிவானந்தன் அவர்களால் அச்சிடப்பெற்று, எஸ். எம். யோசவ் வில்பிறட் அவர்களால் 1959-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 5-ந் திகதி வெளியிடப்பெற்றது.